# சஞ்சீவி

விலை ரூபா 8-00

மலை 7 வள்ளுவர் ஆண்டு 2028 மார்கழி 26 சனிக்கிழமை (10-01-1998) SANJEAVY - Regenerative Tamil Weekly சிகரம்: 32


# தீவகத்தில் ஈ.பி.டி.பியினரின் ஆயுதங்களை களைய முடிவு

## ஒரு வார காலத்தினுள் நடவடிக்கை என்கிறார் தேர்தல் ஆணையாளர்

கொழும்பு. ஜனவரி 10

"தீவுப் பகுதியில் சகல கட்சிகளும் பிரசாரம் செய்ய வசதியாக அங்கு ஆயுதங்களுடன் இருக்கும் குழுக்களிட மிருந்து ஆயுதங்களைக் களைவது தொடர்பாக பாதுகாப்பு அதிகாரிகளுடன் பேசியுள்ளேன். ஒருவார காலத்தில் இந்தப் பணி முடிவடையும். தேர்தல் முடியும் வரை எக்கட்சியும் அங்கு ஆயுதக் குழுக்களாகச் செயற்பட முடியாது".

தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க மேற் கண்டவாறு தெரிவித்தார்.

யாழ். குடாநாட்டில் தேர்தலில் போட்டியிடும் கட்சிகளின் தலைவர்களுடன் நேற்று நடந்த சந்திப்பிலேயே அவர் இத்தகவலை வெளியிட்டார்.

நேற்றைய சந்திப்பில் ஈ.பி.டி.பி. சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். சிவதாசன், ஈ.பி.ஆர்.எல்.எவ் சார்பில் அதன் செயலாளர் நாயகம் சுரேஷ் பிரேமச்சந்திரன், வில்சன், ரெலோ சார்பில் அதன் முதல்வர் எம்.கே. சிவாஜிலிங்கம், அபூயூசுப் ஆகியோர் கலந்து கொண்டனர். புளொட் பிரதிநிதிகள் கலந்து கொள்ளவில்லை.

தீவுப்பகுதியில் தேர்தல் ஜனநாயக ரீதியில் நடக்க வசதியாக பொலிஸ் சாவடிகள் அமைக்கப்படும். நெடுந்தீவில் கடற்படையின் பிரிவு செயற்படும் என்றும் இச்சந்திப்பில் தெரிவிக்கப்பட்டது.

ரூபவாஹினி, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனம் ஆகியவற்றில் தேர்தல் கொள்கை விளக்க பிரசாரம் செய்ய ஒவ்வொரு கட்சிக்கும் மற்றும் சுயேச்சைக் குழுவுக்கும் தலா 15 நிமிட வீதம் நான்கு சந்தர்ப்பம் வழங்கப்படும் என்றும் தேர்தல் ஆணையாளர் நேற்றைய கூட்டத்தில் தெரிவித்தார்.

(உ-3-21)

## தபால் வாக்கு ஏதுமில்லை

யாழ்ப்பாணம், ஜன. 10

யாழ். மாவட்ட உள்ளூராட்சித் தேர்தல்களில் தபால் மூல வாக்களிப்புக்கு எவரும் விண்ணப்பிக்கவில்லை. இலங்கையின் தேர்தல் வரலாற்றில் இது ஒரு முக்கிய விடயம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

வேறு அரச பணிகள் காரணமாகத் தேர்தலில் வாக்களிக்க நேரில் வரமுடியாதவர்கள் தபால் மூல வாக்களிப்புக்கு விண்ணப்பிப்பது வழக்கம். பொதுவாக இரண்டு முதல் மூன்று வீதமான வாக்காளர்கள் தபால் மூல வாக்களிப்புக்கு விண்ணப்பிப்பது வழமை.

(உ-10)

## ஆயுதம் களையும் முடிவு; டக்ளஸுக்கு மகிழ்ச்சி!

யாழ்ப்பாணம், ஜன 10

தீவுப்பகுதியில் ஈ.பி.டி.பியினரின் ஆயுதங்களைக் களைவது எனத் தேர்தல் ஆணையாளர் எடுத்த முடிவு மகிழ்ச்சிக்குரியதே.

— இவ்வாறு கருத்து வெளியிட்டார் ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா.

தீவகத்திலும் எமது வெற்றி உறுதிப்படுத்தப்பட்ட ஒன்று. எமது ஆயுதங்களைக் களையும் தேர்தல் ஆணையாளரின் முடிவுக்குப் பின்னர், எமக்கு அங்கு கிடைக்கும் வெற்றி நியாயப்படுத்தப்பட்ட ஒன்றாக இருக்கும். அந்த வெற்றி குறித்து அதற்குப் பின்னர் மாற்றுக் கட்சிகள் குறைகூற முடியாது. எனவே அந்த வகையில் தேர்தல் ஆணையாளரின் முடிவு மகிழ்ச்சியைத் தருகின்றது.

தங்கள் தோல்வி உறுதி என்பதால் மாற்றுக் கட்சியினர் அதற்கு ஒரு சாட்டுக் கூறுவதற்காக நேரத்தோடேயே தீவுப் பகுதியில் தாங்கள் பிரசாரம் செய்ய முடியவில்லை என்ற — உண்மைக்கு மாறான — கோஷத்தை முன்வைத்தனர். இனி அவர்கள் என்ன கூறப்போகின்றார்கள்? — இப்படி மேலும் கேள்வி எழுப்பினார் டக்ளஸ்.

## உதயன் செய்திக்கு புளொட் மறுப்பு

'கூட்டணியின் வேட்பு மனுவை ஏற்பதை எதிர்க்கிறது புளொட்! நேற்று நீதிமன்றத்தில் பதில் மனு' என்ற தலைப்பில் நேற்றைய உதயனில் வெளியான செய்தி தொடர்பாக ஆறு பந்திகளைக் கொண்ட அறிக்கை ஒன்றை புளொட் அனுப்பியுள்ளது. அதன் விவரம் வருமாறு:-

1. கூட்டணியின் வேட்பு மனுவை ஏற்பதை புளொட் எதிர்ப்பதாக உதயன் நாளிதழில் வெளிவந்த செய்தியின் கருத்தில் முரண்பாடுகள் இருப்பதை நாம் அவதானித்தோம்.

2. உங்கள் செய்தித் தலைப்பு மக்கள் மத்தியில், கூட்டணி மீது எமது அமைப்பு வழக்குத் தொடுத்தது போன்ற ஒரு தவறான அபிப்பிராயத்தை ஏற்படுத்தலாம் என நாம் நம்புகிறோம்.

3. மேற்படி வழக்கைப் பொறுத்த மட்டில் தமது வேட்புமனுக்கள் இரண்டையும் தேர்தல் ஆணையாளர் நிராகரித்ததை எதிர்த்துக் கூட்டணி தெஹிவத்தாட்சி அலுவலருக்கெதிராக வழக்குத் தாக்கல் செய்திருந்தது.

4. அவ்வழக்கில் புளொட், ஈ.பி.டி.பி., ரெலோ ஆகிய கட்சிகளின் செயலாளர்களும், சட்டமா அதிபரும், தேர்தல் ஆணையாளரும் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டிருந்தனர்.

5. எமது கட்சியின் நலன்களை நீதிமன்றில் கவனிப்பதற்காகச் சட்டத்தரணிகள் பாயிஸ் முஸ்தபா, ஆ. விநாயகமூர்த்தி ஆகியோர் வழக்கின் போது நீதிமன்றில் பிரசன்னமாயிருந்தனர்.

6. கூட்டணி தொடுத்துள்ள வழக்கின் அடிப்படையில், எமது கட்சியின் நலன் கருதி வழக்கறிஞர்களை

(8 ஆம் பக்கம் பார்க்க)

## வாக்காளர் அட்டைகள் 18 ஆம் திகதி விநியோகம்

கொழும்பு, ஜன. 10

யாழ். உள்ளூராட்சித் தேர்தல்களுக்கான வாக்காளர் அட்டைகள் எதிர்வரும் 18 ஆம் திகதி வழங்கப்படவிருப்பதாக தேர்தல் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கொழும்பில் இருந்து எதிர்வரும் 16 ஆம் திகதி இந்த வாக்காளர் அட்டைகள் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைக்கப்படவிருப்பதாகவும்—

குடாநாட்டில் உள்ள தபாலகங்களில் வைத்து அவற்றை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் — அந்த அதிகாரி தெரிவித்தார்.

வாக்காளர் அட்டை யாழ்ப்பாணத்துக்கு வந்து சேர்ந்ததும் பொதுமக்களுக்கு அறிவிப்பு விடுக்கப்படும் என்றும் —

பொதுமக்கள் அடையாள அட்டைகளைச் சமர்ப்பித்து வாக்காளர் அட்டையைப் பெறலாம் என்றும் — அவர் மேலும் தெரிவித்தார்.

(உ-3)

## திருமலைக்கு கப்பல்

யாழ்ப்பாணம். ஜன. 10

காங்கேசன்துறையில் இருந்து திருகோணமலைக்கு இன்று பயணிகள் கப்பல் சேவை நடைபெறவிருப்பதாக யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் அறிவித்துள்ளது.

யாழ். சிவில் நிர்வாக அலுவலகத்தில் 571 க்கும் 606 க்கும் இடைப்பட்ட இலக்கங்களைக் கொண்ட பட்டியல்களில் தமது பெயர்களைப் பதிவுசெய்தோர் இக்கப்பலில் பயணம் செய்வதற்காக இன்று காலை 8 மணிக்கு யாழ். ரயில் நிலையத்துக்கு வருமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

(உ-3-5)

## வாகனத்தை நோக்கிச் சூடு

மட்டக்களப்பு, ஜன. 10

மட்டக்களப்பு - பொலன்னறுவ வீதியில் மட்டக்களப்பு நோக்கி நேற்று முன்தினம் மாலை 4.30 மணிக்கு சென்று கொண்டிருந்த சுவிடிஷ் பிரஜை ஒருவரின் வாகனத்தை வெலிகந்தை சோதனைச் சாவடியில் படையினர் மறித்த போது, அது நிற்காமல் செல்லவே இராணுவத்தினர் அதன் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாகக் கூறப்படுகின்றது.

இதனால் அங்கு காவலுக்கு நின்ற இராணுவச் சிப்பாய் ஒருவர் காயமடைந்தார். சூட்டுச் சம்பவத்தையடுத்து கைதான மைக்வாண்ட் ஸ்ரிஸ்லேநாத் (54 வயது) என்ற அந்த சுவிடிஷ்பிரஜை தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

(உ-3-21)

## கண்காணிப்புக் குழு உறுப்பினர்கள் வருகை

யாழ்ப்பாணம், ஜன. 10

யாழ். உள்ளூராட்சித் தேர்தலைக் கண்காணிப்பதற்காக தேர்தல் ஆணையாளரினால் அழைக்கப்பட்டுள்ள இரு அமைப்புக்களைச் சேர்ந்த ஆறு பிரதிநிதிகள் நேற்று யாழ்ப்பாணம் வந்துள்ளனர்.

சுதந்திரமான நியாயமான தேர்தல்களுக்கான மக்கள் முன்னணி (PAFFREL) சுதந்திரமான நியாயமான தேர்தல் கண்காணிப்புக் குழு (MFFE) ஆகிய இரு அமைப்புக்களைச் சேர்ந்த உதயகளுபத்திரன, விமால் பெர்னாண்டோ, சனந்தா தேசப்பிரிய, ஜெகான் பெரேரா, பி. முருகையா, எஸ். வீரவர்ண ஆகியோரே நேற்று வந்தவர்களாவர்.

எதிர்வரும் 12 ஆம் திகதி வரை இங்கு தங்கியிருக்கும் இவர்கள் தேர்தல் கண்காணிப்புக்கான வழிமுறைகள் தொடர்பாக தேர்தலில் போட்டியிடும் கட்சிப் பிரதிநிதிகள், அரச, அரசசார்பற்ற அமைப்பு பிரதிநிதிகள் உட்படப் பலரையும் சந்தித்து கலந்துரையாடுவார்கள்.

## ஆஸி. தூதுவர் வருகின்றார்

யாழ்ப்பாணம், ஜன. 10

கொழும்பில் உள்ள அவுஸ்திரேலியத் தூதுவர் எதிர்வரும் 14 ஆம் திகதி தைப் பொங்கலன்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் ஒன்றை மேற்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## தோட்ட தொழிலாளர் வேலை நிறுத்த முஸ்தீபு

கொழும்பு, ஜன. 10

மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் 83 ரூபாவிலிருந்து 104 ரூபாவாக அதிகரிக்கப்படாவிட்டால் எதிர்வரும் ஐந்தாம் திகதி — சுதந்திரப் பொன்விழா நாளுக்கு அடுத்த நாள் — முதல் காலவரையறையற்ற வேலை நிறுத்தத்தில் குதிக்கப் போவதாக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் அறிவித்துள்ளது.

(உ)

புதுமையும் எழிலும் பொலிவும் பல்சுவை வார இதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

தையல் மெசின் (சிங்கர், நிக்கி), பெரிய தட்டுக்களுடைான கோழிக்கூடு என்பன விற்பனைக்குண்டு.தொடர்பு: திரு. இராசரத்தினம், 418, நாவலர் வீதி,மாம்பழஞ்சந்தி அருகில். [52503]

3½ மாத சினையுடைய சுத்த இன சணன் பால் ஆடு உடன் விற்பனைக்கு உண்டு. 2 மணிக்குப் பின்னர் தொடர்பு கொள்ளவும். மனோன் மாஸ்ரர், அரசடி. நவாலி தெற்கு, மானிப்பாய். [52435]

இருபது அடிநீள இரும்பு கேடர் (H Iron) விற்பனைக்கு உண்டு. 61, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் (கொட்டடி மீன்சந்தைக்கு அருகில்). [52454]

யாழ்ப்பாணம் பிரதான வீதியில் Petrol Shed க்கும் கட்டடக் கலைஞர் துரைராசாவின் மேல்மாடிக்கும் இடையில் 4 பரப்பு வெறுங்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: நா. பரமகுரு, 17, சோமசுந்தரம் அவன்யூ சுண்டுக்குளி அல்லது திரு, J. E இராசநாயகம், 40, மாட்டீன் ஒழுங்கை, யாழ்ப்பாணம். [52487]

### இறைச்சிக் கோழி

இறைச்சிக் கோழி (புறொயிலர்) மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்கப்படும். சுத்தம் செய்து கொடுக்கப்படும். தினந்தோறும் கிடைக்கும், தொடர்பு: Lucky Farm Sales Conter Palaly Road, Thirunelvely.. [52504]

### மிருதங்கம்

மிருதங்கம், தபேலா செற், டொல்கி பெற்றுக்கொள்ளவும், பழைய மிருதங்கம் தபேலா, டொல்கி ஆகியவை சிறந்த முறையில் திருத்துவதற்கும் நாடுங்கள்: க. இராசநாயகம், 82/16, ஆசிர்வாதப்பர் வீதி, அரியாலை மேற்கு, அரியாலை. [52489]

### ஓமோன் கரைசல்

றோஸ், சுதம்பரதலை மற்றும் அழகு தாவரங்களில் அதிக மலர்கள் மலரத்தூண்டும் அதிசக்தி வாய்ந்த ஓமோன் கரைசலை ஞாயிற்றுக்கிழமைகளில் 12 மணி வரையும் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு:- 976, K.K.S வீதி, யாழ்ப்பாணம். [52496]

### கணனி வகுப்புக்கள்

ஆரம்பம்: 12, 18-01-98 புதிய நேரம் காலை 8.30 Data Processing, Basic Pascal இலவச வகுப்புக்களிற்கு நேரில் விவரம் அறியவும். ஜி ஸ்ரீதரன், நாவலடி வேன், திருநெல்வேலி. [52398]

### கோழி மருந்து

11-01-98 ஞாயிற்றுக் கிழமை பத்து மணிக்கு கம்புறோ வழங்கப்படும். எம்மிடம் குஞ்சு வாங்கியவர்கள் தேவைப்படின் பெற்றுக் கொள்ளவும். மல்லிகாபதி, மானிப்பாய். [52480]

### மணமகன் தேவை

கொழும்பில் தனியார் நிறுவனத்தில் உயர் தொழில் புரியும் 37 வயதுடைய இந்து சமய மணப்பெண்ணுக்கு தகுதியுடைய மணமகன் தேவை. தகுதியான சீதனம் கொடுக்கப்படும். தொடர்பு: மே/பா 676, உதயன் பணிமனை, யாழ்ப்பாணம். [52403]

### திருமண சேவை

60 ஆம் ஆண்டு செவ்வாய் அற்றவர், திருவாதிரை நட்சத்திரமுடைய, கனடாவிலிருந்து வந்து திருமணம் செய்வார். 58 ஆம் ஆண்டு செவ்வாய் அற்றவர், பூரம் நட்சத்திரமுடைய, ஜேர்மனியில் இருந்து வந்து திருமணம் செய்வார். குறிப்பு, புகைப் படத்துடன் தொடர்பு கொள்ளவும். துர்க்கா திருமண சேவை, 178, நாவலர் றோட், யாழ்ப்பாணம். [52500]

## மாபெரும் கலைவிழா

யாழ்ப்பாணக் கல்லூரியில் 25-10-1997 அன்று நடைபெறவிருந்த கலைவிழா 10-01-98 சனிக்கிழமை பிற்பகல் 12.30 மணிக்கு நடைபெறும் என்பதை அறியத்தருகிறோம்.

**நிகழ்ச்சிகள்**

1. சத்தியவான் சாவித்திரி இசைநாடகம் (திருமறைக் கலாமன்றம்)
2. அருணாவின் இசை மழை

இத்துடன் வேறுசில நிகழ்வுகளும் இடம்பெறும். அனைவரும் வருக.

97 கலைப் பிரிவு
யாழ்ப்பாணக் கல்லூரி.

(சி-2598)

## தவறிவிட்டது

பலாலியில் இருந்து 9-1-98 அன்று வந்த இரண்டாவது பஸ் வண்டியில் எனது லயன் எயர் ரிக்கட், அடையாள அட்டை, பாஸ்போட் மற்றும் சில ஆவணங்கள் அடங்கிய பிறவுண் நிற பாக் BAG) தவறி விட்டது.

கண்டெடுத்தவர்கள் தயவு செய்து மனிதாபிமான அடிப்படையில் கண்டி வீதியில் உள்ள RRAN காரியாலயத்தில் ஒப்படைத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும்.

விமல் பெர்னாண்டோ,
RRAN காரியாலயம்,
சுண்டுக்குளி.

(52518)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 08 — 12 — 1955



உதிர்வு: 23 — 12 — 1996

**நடராஜா மனோகரன்**

திதி: 10 — 01 — 1998

ஆண்டு ஒன்று சென்ற போதிலும்
உங்கள் நினைவு பசுமையாக உள்ளது!

உங்கள் பிரிவால் வாடும்:
மனைவி, மக்கள்,
தாய், சகோதரர்கள்.

வனாக வீதி,
திருநெல்வேலி.

(52508)

## சேவை நலன் பாராட்டு

### திரு. முருகன் சின்னையன்

39 வருட காலம் எழுதுநராக கல்வித் திணைக்களத்தின் பல்வேறு மாவட்டங்களில் கல்விச் சமூகத்திற்கு அளப்பரிய சேவையாற்றி 1998-01-10 ஆம் திகதி முதல் அரச சேவையிலிருந்து இளைப்பாறும் திரு. முருகன் சின்னையன் அவர்களின் தன்னலமற்ற சேவையைப் பாராட்டுவதுடன், அவர் உடல் நலத்துடன் நீடூழி காலம் வாழ மனதார வாழ்த்துகின்றோம்.

கோட்டக் கல்வி அலுவலர்,
உதவிக் கல்விப் பணிப்பாளர்கள்,
உத்தியோகத்தர்கள்,
முதன்மை ஆசிரியர்கள்,
சிற்றூழியர்கள்,
சாவகச்சேரி கல்விக் கோட்டம்.

(சி/2580)

உ

இணுவில்
சைவத் திருநெறிக் கழகம்
நடத்தும்

## திருவாசக விழா

இடம்: இணுவில் சிவகாமி அம்மன் கோயில் அன்னதான மண்டபம் (அறநெறிப் பாடசாலை)

காலம்: 11 - 01 - 1998 ஞாயிறு
பி. ப. 2-30 மணி (புதிய நேரம்)

தலைவர்: திரு. க. முருகையா (கிராம சேவையாளர்)

### நிகழ்ச்சி நிரல்

திருவாசக பவனி:
சிவகாமி அம்மன் கோயில் முன்றலில் இருந்து திரு. ச. கண்ணபிரான் அவர்களின் மங்கள வாத்தியத்துடன் விழா மண்டபத்தை வந்து அடைதல்.

மங்கள விளக்கேற்றல்: திரு. மு. சிவலிங்கம் (ஆலய முகாமையாளர்)

திருவாசகம் ஓதல்: செல்வன் தி. பார்த்தீபன்

ஆசியுரை: பிரம்மஸ்ரீ சாம்பசிவ சோமசபேசக் குருக்கள் (இணுவில் சிவகாமி அம்மன் கோயில்)

வரவேற்புரை: செல்வன் அ புருசோத்தமன்

தொடக்கவுரை: திரு. பெ. கனகசபாபதி (தலைவர், யாழ். மாவட்டக்கூட்டுறவுச் சபை)

தலைமையுரை: திரு. க. முருகையா (கழகத் தலைவர்)

சிறப்புரைகள்: திரு. ஆ. மகாலிங்கம் (உப தலைவர், இந்துசமயப் பேரவை-பிரதேச செயலர், உடுவில்)

திரு. செ. இலகுநாதன் (தலைவர், இணுவில் கிராம அபிவிருத்திச்சங்கம்)

சொற்பொழிவுகள்: திரு. ஆறு. திருமுருகன் (ஆசிரியர், விக்னேஸ்வரோதயாக் கல்லூரி)

விடயம்: "திருவெம்பாவை"

கலாநிதி எஸ். சிவலிங்கராசா (சிரேஷ்ட விரிவுரையாளர், தமிழ்த்துறை, யாழ். பல்கலைக்கழகம்)

விடயம்: "திருவாசகம்"

பரிசளிப்பு வைபவம்:
திருவாசக மனனப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில் வழங்குதல்.

பரிசில் வழங்குபவர்: திரு. த. கந்தசாமி (பெஷன் ஹவுஸ், யாழ்ப்பாணம்)

நன்றியுரை: திரு ம. காண்டீபன் (உப செயலாளர்)

கலை நிகழ்ச்சி: கழக அங்கத்தவர்கள்

சைவ அபிமானிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்:
ந. தவசோதிநாதன்
செயலாளர், சைவத் திருநெறிக்கழகம்

இணுவில்,
5-1-1998.

[52499]

நாம் மக்களின் எஜமானர்கள் அல்லர்;
மக்களின் சேவகர்களே!

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி) X

[ஏ-0013

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை இனப்பிரச்சினையில் தலையிட அமெரிக்கா ஆர்வங் கொண்டுள்ளதா?

## காங்கிரஸ் தூதுக்குழுவின் வருகை கிளப்பியிருக்கும் சந்தேகம்




**பாசுபதன்**

இலங்கையின் அரசியல் நிலைவரம், இனப்பிரச்சினை விவகாரம், அதற்கான தீர்வு முயற்சிகள், யுத்த நடவடிக்கைகள் ஆகியவை குறித்து ஆராய்வதற்காக அமெரிக்க உயர்மட்டக் குழு ஒன்று இவ் வாரத்தில் கொழும்புக்கு வந்திருந்தது.

அமெரிக்க காங்கிரஸ் கமிட்டியைச் சேர்ந்த — ஐவர் அடங்கிய — குழுவினரே கடந்த திங்கள் முதல் கொழும்பில் சில தினங்கள் தங்கியிருந்து பல தரப்பட்டவர்களையும் சந்தித்துப் பேசினர்.

அரசுத் தரப்புப் பிரமுகர்கள், ஐ.தே. கட்சியின் பிரதிநிதிகள், தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள், முஸ்லிம்களின் பிரதிநிதிகள் என பல தரப்பினருடனும் அவர்கள் விரிவாகப் பேச்சு நடத்தினர்.

இலங்கை விவகாரத்தில் அமெரிக்காவின் தலையீடு மெல்ல மெல்ல விஸ்தரிக்கப்பட்டு வருகின்றது என்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

அரசுத் துருப்புகளுக்கு பயிற்சி மற்றும் தொழில்நுட்ப வசதிகளை அளித்தல், புலிகள் மீது அமெரிக்காவில் தடை விதித்தல் என்று கொஞ்சம் கொஞ்சமாக இலங்கைத் தரப்பை தனது வலைக்குள் விழுத்தும் வேலையை அமெரிக்கா ஆரம்பித்து, முன்னேறி வருகின்றது.

இத்தகைய உதவிகளைக் கொஞ்சம் கொஞ்சமாக விரிவுபடுத்துவதன் மூலம், காலம் செல்ல அமெரிக்காவில் தங்கி நிற்காமல் ஏதும் செய்ய முடியாது என்ற நெருக்கடியான — அமெரிக்க சார்புப் போக்கைப் பின்பற்றும்—கட்டாய நிலைக்கு ஸ்ரீலங்காவைத் தள்ளுவதே அமெரிக்கத் தரப்பின் திட்டம்.

இதன் மூலம் இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் — இந்திய உபகண்டப் பிரதேசத்தில்— இந்தியாவுக்கு அச்சுறுத்தல் தரக்கூடிய — தனக்கு ஆதரவான — ஒரு கட்டமைப்பை ஏற்படுத்துவதே அமெரிக்காவின் எண்ணம்.

அணு ஆயுதத் தயாரிப்பு, விண்ணுக்கு றொக்கட் ஏவும் தொழில் நுட்பத்தைத் தானே விருத்தி செய்தமை போன்ற நடவடிக்கைகளில் இந்தியா வெற்றி கண்டு வருவதைத் தனக்குத் தலையிடி கொடுக்கும் போக்காகவே அமெரிக்கா கருதுகின்றது.

''சர்வதேச பொலீஸ்காரன்' என்ற அமெரிக்க மேலாண்மைப் போக்குக்கு இந்தியாவின் வளர்ச்சி குந்தகமாகிவிடும் என்பது அமெரிக்காவுக்கு நன்கு தெரியும்.

ஆகவே இந்தியாவுக்கு அருகில் சில கட்டுப்பாட்டு புள்ளிகளை (Check Points) வைக்க அமெரிக்கா விரும்புகின்றது.

அத்தகைய நெருக்குதல் நிலைகளில் ஒன்றாக, இந்தியாவுக்கு அருகில் உள்ள இலங்கையைப் பயன்படுத்தவும் அமெரிக்கா விரும்புகின்றது.

அதனால் தான் 'ஆடு நனைகிறது என்று ஓநாய் கவலைப்படுவது போல, இலங்கை இனப்பிரச்சினையில் — இனயுத்தத்தில் — அரசுத் துருப்புகளுக்கு உதவ அமெரிக்கா அவசர அவசரமாக முன்வந்தது.

ஆனால் இந்தியாவில் அரசியல் நிலைவரங்களில் திடீர் மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

யுத்தத்தில் அதி தீவிரம் காட்டாத —

அணு ஆயுத உற்பத்தி மற்றும் — இந்தியாவுக்கு இராணுவ வலிமை தருகின்ற — விவகாரங்களில் அதிக அக்கறையோ சிரத்தையோ காட்டாத —

ஐக்கிய முன்னணி அரசு இந்தியாவில் தொடர்வதையே அமெரிக்கா விரும்பியிருந்தது.

ஆனால் அமெரிக்காவின் விருப்பத்தில் மண் விழுவது போல ஐக்கிய முன்னணி அரசு கவிழ்ந்து, புதிய தேர்தலுக்கு இந்தியா தயாராகி வருகின்றது.

இந்தியாவை அணு ஆயுத வலிமை கொண்ட—வல்லரசு நாடாக — கட்டியெழுப்ப வேண்டும் என்பதில் தீவிரப் போக்கைக் காட்டும் பாரதீய ஜனதாக்கட்சி இத்தேர்தல்களில் முன்னணியில் நிற்பதாக வெளிவரும் தகவல்களே அமெரிக்கத் தரப்புக்கு வயிற்றில் புளியைக் கரைத்திருக்கின்றன.

போதாக் குறைக்கு இந்தியாவில் உள்ள புலிகள் ஆதரவுச் சக்திகள் அனைத்தும் பாரதீய ஜனதாக் கட்சி தலைமையிலான கூட்டணியில் ஓர் அணி சேர்ந்திருப்பதும் அமெரிக்கத் தரப்பைக் குழப்பியுள்ளது.

இந்த வகையில் சமதாக் கட்சித் தலைவர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ், ம.தி.மு.க. தலைவர் வை. கோபாலசாமி, பாட்டாளி மக்கள் கட்சி நிறுவுநர் டாக்டர் இராமதாஸ் போன்றோரைக் குறிப்பிடலாம். அது மட்டுமல்லாமல் பாரதீய ஜனதாக் கட்சியுடன் மகாராஷ்டிரத்தில் பிரதான கூட்டுக் கட்சியாக இணைந்திருப்பது சிவசேனை. அதன் தலைவர் பால் தக்கரே தீவிர பிரபாகரன் ஆதரவாளர்.

ஆகவே புலிகளின் ஆதரவுப் போக்குடைய சக்திகளை தனது கூட்டணியில் திரட்டி வைத்திருக்கும் பாரதீய ஜனதாக் கட்சி இந்தியாவின் மத்திய அரசைக் கைப்பற்றுமானால், அங்கு மத்திய அரசியலின் புலிகள் ஆதரவு சக்திகளின் கைகள் ஓங்கக் கூடிய வாய்ப்புகள் உள்ளன.

அத்தோடு பாரதீய ஜனதாக்கட்சி அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கு எதிரான தீவிர போக்கைக் கொண்ட — பிராந்திய — மதவாத — சக்தி என்பதும் வெள்ளிடைமலை.

எனவே இலங்கையும் அதன் அரசும் அமெரிக்காவின் கைப் பொம்மையாக —

மறுபுறத்தில் அமெரிக்க எதிர்ப்பு சக்திகளின் கை இந்தியாவில் ஓங்கினால்—

இலங்கைக்குள் காலூன்றுவதற்கு அமெரிக்கா எடுக்கும் நடவடிக்கைகளை ஒட்ட நறுக்குவதற்கான ஏற்பாடுகள் அயல் நாட்டிலிருந்தே ஆரம்பமாகிவிடும்.

இதனால் தான் அமெரிக்கா முந்திக் கொள்ள விரும்புகின்றது.

இந்தியாவில் ஜனதாக் கட்சியின் ஆட்சி ஏற்பட்டு, இலங்கை விவகாரத்தை பாரதீய ஜனதா தலைமையிலான அரசு கையாண்டு, தலையிடும் சூழ்நிலை உருவாகுவதற்கு முன்னரே இலங்கை இனவிவகாரத்தில் முற்றாக மூக்கை நுழைத்து, அந்த விடயத்தைத் தனது கைக்குள் கொண்டு வந்துவிட அமெரிக்கத் தரப்பு விரும்புகின்றது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அதற்காகவே இந்திய அரசியல் வானில் மாற்றங்கள் ஏற்பட்ட கையோடு இலங்கைக் கள நிலைமையைப் படித்து வருமாறு காங்கிரஸின் விசேட பிரதிநிதிகள் குழு ஒன்றை அமெரிக்கா அவசர அவசரமாக அனுப்பியதாக விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

அமெரிக்கப் பிரதிநிதிகள் தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேசிய சமயம் இனப்பிரச்சினை குறித்து அவர்கள் விரிவாகக் கேட்டறிந்தனர்.

இப்பேச்சுக்களின் போது, இனப்பிரச்சினை விடயத்தில் அமெரிக்கா நேரடியாகத் தலையிட்டால் என்ன என்ற பாணியிலான கேள்விகளை எழுப்பி — தூண்டில் போட்டு — நாடி பிடித்து — பார்க்கும் போக்கில் அமெரிக்கப் பிரதிநிதிகளின் அணுகுமுறை இருந்ததாக பேச்சுக்களில் பங்குபற்றிய தமிழ்த் தலைவர் ஒருவர் தெரிவித்தார்.

ஆகவே அமெரிக்கப் பிரதிநிதிகளின் வருகை, அமெரிக்காவின் தலையீடு ஆகியவை குறித்து தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகள் மிக அவதானமாக இருக்க வேண்டும் என்றும்—

இனப்பிரச்சினை விடயத்தில் தலையிடுவதற்கு நூலிழை அளவு வாய்ப்பாவது தமிழர் தரப்பிலிருந்து கிட்டாதா என அமெரிக்கத் தரப்பு நோட்டம் பார்ப்பதாகவும்—

அந்த தலைவர் குறிப்பிட்டார்.

★ ★ ★

### 'சூடு' பிடிக்கும் தேர்தல் ஏற்பாடு

குடாநாட்டில் உள்ளூராட்சித் தேர்தல்களை ஒட்டி பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு வருகின்றது.

படைத்தரப்பைப் பொறுத்தவரை இரண்டு விடயங்களுக்கு அவர்கள் முகம் கொடுக்க வேண்டியுள்ளது.

ஒன்று— புலிகளால் ஏற்படக் கூடிய ஆபத்து அல்லது அச்சுறுத்தல்.

இரண்டாவது – தேர்தலில் போட்டியிடுகின்ற — ஆயுதம் தாங்கிய குழுக்களிடையே ஏற்படக் கூடிய— மோதல்கள்.

தேர்தல் ஏற்பாடுகளுக்கு புலிகளினால் ஏற்படக் கூடிய ஆபத்து அல்லது அச்சுறுத்தல் அதிகரித்து வருவதாக விடயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன. தேர்தலை படைத்தரப்பு திட்டமிட்ட ஏற்பாடுகளுடன் நடத்தி முடிப்பதைக் குழப்புவதற்கு புலிகள் தரப்பு ஆயத்தங்கள் செய்து வருவதாகத் தகவல்.


பொதுமக்களுக்கு அதிக உயிரிழப்பு ஏற்படாமலும்— சர்வதேச ரீதியில் புலிகளுக்கு கெட்ட பெயர் ஏற்படாமலும்— உள்ளூராட்சித் தேர்தல் நடவடிக்கைகளைக் குழப்புவதற்கு புலிகள் தயாராகக் கூடும் என ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

இந்தத் தேர்தலுக்கு எதிரான தமது உணர்வலைகளை குடாநாட்டின் பல பகுதிகளிலும் ஏற்கனவே புலிகள் மெல்லக் கசிய விடத் தொடங்கிவிட்டனர்.

எனவே தேர்தல் காலம் படைத்தரப்புக்கு நிச்சயம் சோதனைக்காலமாக இருக்கப் போகின்றது.

அடுத்த பிரச்சினை— ஆயுதக் குழுக்கள் அல்லது கட்சிகளுக்கு இடையிலான முரண்பாடு. இராணுவத் தலையீடு அல்லது மேலாதிக்கம் மற்றும் தேர்தல் காலத்தில் ஆயுத மோதலில் ஈடுபட்டால் தற்போது கிடைக்கக் கூடிய வாக்குகளும் கிடைக்காமல் போய்விடும் என்ற யதார்த்த பூர்வமான அம்சம் ஆகியவை காரணமாக ஆயுதக் கட்சிகள் இப்போது அடக்கி வாசிக்கின்றன. என்றாலும் இவற்றுக்

(4 ஆம் பக்கம் பார்க்க)




போஸ்டர் போரின் களமாகியிருக்கும் யாழ். ஆஸ்பத்திரிக் கோயில் சுவரும். யாழ் நவீன சந்தையின் சுவரும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 13ஆம் ஆண்டு நினைவஞ்சலி



எமது அருமைச் செல்வி

## தங்கபூபதி முத்துவேல்

உதயம்: 8-10-1960 அஸ்தமனம்: 25-12-1985

திதி: 10 — 1 — 1998

என்றும் எம் இதயத் துறைபவளே!
உன்பேரின்பப் பெருவாழ்விற்கு
அனுதினமும் எமது பிரார்த்தனைகள்.

பிரிவால் துயருறும்:

பற்றான பிதா, மாதா, சோதரன்,
மைத்துனி, பெரியம்மா, சின்னம்மா,
சித்தப்பா, மாமா, மாமி,
உற்றார், உறவினர்.

'பதிபவனம்' சந்நதி வீதி,
உடுப்பிட்டி.

(52397)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 16 — 09 — 1946

மறைவு: 11 — 12 — 1997

## அமரர் இராசரத்தினம் இராஜதுரை

('லக்கி பன்சி ஹவுஸ்', இருபாலை.)

கண்கள் கசிகிறதே......
காதலில் வேகிறதே .....
உண்மையை எண்ணவே......
உள்ளம் துடிக்கிறதே......

வாழ்க்கைக் கடலினிலே — நாம்
கரைகாண முனைகையிலே
விழிகள் தனை கசியவிட்டு
வழிகாட்டிய தெய்வம் நீங்கள்
கடலினிலே மூழ்கியதேனோ?

ஆதரிக்க ஆயிரம் உறவுண்டு
அரவணைக்க அன்பான உள்ளங்களுண்டு
ஆனாலும்......
அப்பா என்றழைக்க நீங்கள் இல்லையே அப்பா!

நெஞ்சம் நிறைந்த நினைவுகளுடன் உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

எமது அன்புத் தந்தையின் மறைவுச் செய்தி கேட்டு எமது துயரில் பங்கெடுத்த அனைவருக்கும் எம் அன்பான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்.

இருபாலைச்சந்தி,
இருபாலை.

([illegible])

## கரப்பந்தாட்ட சங்க கூட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 10

யாழ். மாவட்ட கரப்பந்தாட்டச் சமிக்கதின் பொதுக் கூட்டம் நாளை ஞாயிறு காலை 9-30 மணிக்கு நல்லூர் சாதனா பாடசாலையில் இடம்பெறும்.

தற்பொழுது இயங்கிக் கொண்டிருக்கும் கரப்பந்தாட்டக் கழகங்களின் தலைவர்கள் செயலாளர்கள் இதில் கலந்து கொள்ளுமாறு அழைக்கப்பட்டுள்ளனர்.

(ஐ-7)

## இலங்கை ...

(மூன்றம் பக்கத் தொடர்ச்சி)

இடையிலான முறுகல், வேறுபாடு நீறு பூத்த நெருப்பாகவே உள்ளது.

தற்போதைய தேர்தலைப் பயன்படுத்தி குடாநாட்டு மக்களின் தலைவர்கள் தாமே என்ற பதவியை கைப்பற்றி விடுவதற்கு என்ன விலை கொடுக்கவும் இக்கட்சித் தலைவர்கள் தயாராக இருப்பதாகத் தெரிகின்றது.

துப்பாக்கிச் சமர் வெடிக்குமோ என்று பொது மக்கள் அஞ்சுகின்ற போதும் இப்போது நிலைமை போஸ்டர் சண்டை என்ற அளவு வரையே முன்னேறியிருக்கின்றது.

ஆரம்பத்தில் ஒருகட்சிக்குப் போட்டியாக மற்றொரு கட்சி போஸ்டர் ஒட்டும் நிலை இருந்தது. இப்போது ஒருகட்சி போஸ்டருக்கு மேல் இன்னொரு கட்சியின் போஸ்டரை ஒட்டுவது, ஒரு கட்சிப் போஸ்டர் மீது கழிவு 'ஒயில்' ஊற்றுவது, சாணம் பூசுவது என்று போஸ்டர் போராட்டம் விஸ்தரிக்கத் தொடங்கியிருக்கின்றது.

இத்தகைய தேர்தல் கெடுபிடி நிலைமைகளை எதிர்கொள்வதற்காக மேலதிக துருப்புக்கள் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாகத் தகவல்.

இவ்வாரமுற்பகுதியில் 'லங்கா முடித' கப்பலில் 15 பஸ்கள் எடுத்து வரப்பட்டன. தேர்தல் பணிக்காக இந்த பஸ்கள் கொண்டு வரப்பட்டதாகக் கூறப்பட்டது. அந்தக்கப்பலில் சுமார் இரண்டாயிரம் துருப்புகளும் காங்கேசன்துறைக்கு வந்து சேர்ந்தன. துருப்புகளுடன் பஸ்களும் உடனடியாக இறக்கப்பட்டன. அந்த இரண்டாயிரம் துருப்புகளும் அந்த பஸ்களிலே ஏற்றி பலாலிக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

இவ்வாறு குடாநாட்டில் தேர்தல் சூடு ஒருபுறம் பிடிக்க அரசியல் கட்சிகளின் தலைவர்களைக் கலைத்துப் பிடிக்கும் 'பிஸ்னஸை' சில பிரபல வர்த்தகர்கள் மும்முரமாக மேற்கொண்டு வருவதாகத் தெரிகின்றது.

உள்ளூராட்சி நிர்வாகங்கள் அரசியல் கட்சிகளின் கைகளில் சிக்கினால் சோலை வரி கட்டுவதில் இருந்து, வியாபார இடம் — தொழிற்சாலைகளுக்கான பிரதேசம் — ஆகியவற்றுக்குலைசென்ஸ் வழங்குவது வரை பல வர்த்தக நடவடிக்கைகளுக்கு உள்ளூராட்சி நிர்வாகங்களின் அனுசரணை, ஒத்துழைப்பு, உதவி போன்றவை வர்த்தகர்களுக்குத் தேவைப்படும். எனவே உள்ளூராட்சித் தேர்தலில் வெற்றி பெறக்கூடும் எனத் தாம் கருதும் கட்சிகளுக்கு பணத்தை வாரியிறைத்து நேரத்துடனேயே அவர்களைக் கையில் போட்டுக் கொள்ள சில முதலாளிமார் முனைவதாகத் தகவல்.

அதுவும் கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் தமது வர்த்தக மையங்களை வைத்துக் கொண்டு வியாபாரத்தில் கொள்ளை லாபம் சம்பாதிக்கும் சில தமிழ் வர்த்தகர்களே மடிநிறையப் பணத்தோடு கட்சித தலைவர்களை தேடி அலைவதாகத் தகவல்.

சுளையாகப் பணம் கிடைத்தால் [illegible] என்ன சிரமம்? ★

## அதிரடி அரங்கு

கடந்த வாரம் யாழ். நகரப் பகுதியில் இராணுவ தடை சோதனை நிலையம் ஒன்றில் நடந்த சம்பவம் இது.

கார் ஒன்றில் தனது உதவியாளர், மனைவி சகிதம் வந்து கொண்டிருந்தார் யாழ் குடாநாட்டின் நீதிமன்றம் ஒன்றின் நீதிபதி. தடை முகாம நெருங்கியதும் காரின் வேகத்தைக் கட்டுப்படுத்தி, குறைந்து நிறுத்தினார். காரை நெருங்கி வந்த பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவர் காருக்குள் இருப்பவர் யார் என்று தெரியாமல் தமது கெடுபிடிகளை அவிழ்த்து விடத் தொடங்கினார். பொறுத்துப் பார்த்தார் நீதிபதி முடியவில்லை. கடைசியாக தாம் யார் என்பதையும் கூறி அறிமுகப்படுத்தினார். ஆனால் பொலீஸ்காரர் நிலைமையின் விபரீதத்தை உணரவில்லை.

''ஜனாதிபதி என்றாலும் நீதிபதி என்றாலும் இங்கு நாங்கள் சொல்வதைத்தான் செய்ய வேண்டும்'' — என்ற பாணியில் ஏடா கூடமாகப் பதிலளித்து விட்டு காரை நோண்டி எடுத்துப் போட்டுத்தான் மேலே செல்ல அனுமதித்தார்.

வேலையை முடித்துக் கொண்டு நீதிமன்றம் திரும்பிய நீதிபதி அங்கிருந்து யாழ்ப்பாண பொலீஸ் பொறுப்பதிகாரிக்கு தொலைபேசி எடுத்தார். அவ்வளவுதான். ஐந்து நிமிடத்தில் சம்பந்தப்பட்ட பொலீஸ்காரர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டார். நடுநடுங்கிப்போனார் அவர்.

சம்பந்தப்பட்ட பொலீஸ்காரரை நீதிமன்றத்தில் ஆஜர் செய்து, தண்டிக்க விரும்பாத நீதிபதி, பொலீஸ் நீதிபதி அறைக்கு (Chamber) அழைத்து வரச் செய்தார்.

தண்டனைக்குப் பதிலாக பொலீஸாருக்கு புத்திமதி கூறினார் நீதிபதி. ''ஒவ்வொரு அரச ஊழியனும் தனது பணியை கௌரவமாகச் செய்வதோடு ஏனைய அரச ஊழியர்களின் பணியையும் கௌரவிக்க வேண்டும்.''—என்று விளக்கினார் நீதிபதி.

மேற்படி பொலீஸ்காரரின் நடத்தைக்காக அவருக்கு எதிராக திணைக்கள நடவடிக்கை எடுக்கப்படுவதையும் தடுத்து விட்டார் நீதிபதி.

நீதிபதியின் ''அன்பு வழி'' வெற்றி தருமா?

★ ★ ★

பாடசாலைகளில் கல்வி ஆண்டு தொடங்கும் காலம் இது. பாடசாலை அனுமதிக்கு ''டொனேஷன்'' வாங்கும் காலமும் இதுதான்.

முன்னணிப் பாடசாலை ஒன்றில் அண்மையில் நடந்த இரகசியம் அம்பலத்துக்கு வந்திருக்கிறது.

ஒரு நபர் தனது சூழலில் உள்ள பாடசாலைக்கு மாணவர் ஒருவரைச் சேர்ப்பதற்காக அந்த மாணவனின் தகப்பனோடு வந்தார். சம்பந்தப்பட்ட மாணவனின் குடும்பம் வறிய கஷ்டப்பட்ட குடும்பம் என்றும் எனவே ''டொனேஷன்'' வாங்காமல் மாணவனைச் சேர்க்கும்படியும் பாடசாலை அதிபரிடம் கேட்டுக் கொண்டார். இரக்க சுபாவமுடைய அதிபரும் ''டொனேஷன்'' ஒரு சதமும் வாங்காமல் மாணவனை அனுமதித்து விட்டார்.

இரண்டொரு நாள் கழித்துத்தான் அதிபருக்கு விஷயம் தெரியவந்தது. பாடசாலைக்கும், பாடசாலை அனுமதி பெற்றுத் தந்த தனது குழுவுக்கும் கொடுக்க வேண்டும் என்று கூறி சம்பந்தப்பட்ட மாணவனின் தகப்பனாரிடம் இரண்டாயிரத்து ஐந்நூறு ரூபாவை சுளையாகக் கறந்து விட்டாராம் அந்த நபர்.

அதிபர் கடுப்பேறிப் போயுள்ளார். முப்பது வருடத்துக்கு மேல் கறைபடியாத சேவை செய்து விட்டு, சில வாரங்களில் ஓய்வு பெறவிருக்கும் தமக்கு இச் சமயத்தில் இப்படி ஒரு ''ஐந்து ரத்தின'' நபர் செய்து விட்டாரே என்ற கவலை அவருக்கு.

இந்த நபர் விடயத்தில் மற்றொரு தகவல்.

மாணவர் அனுமதிக்கு 'டொனேஷன்'' வாங்கக் கூடாது என்று ''ஒழுக்கம்'' கதைக்கும் மூத்த கல்வி அதிகாரி ஒருவரின் ''வால்'' தான் இந்த நபர். கல்வியுடன் தொடர்பில்லாத இந்த நபரை அந்த மூத்த கல்வி அதிகாரியின் வீட்டில் அடிக்கடி காணலாம்.

கல்வி அதிகாரி கொடுத்த இடத்தை வைத்துக் கொண்டுதான் இந்த நபர் இப்படி ஆடுவதாக ஒரு பேச்சு. உண்மையா?

★ ★ ★

கொழும்பு — யாழ். மார்க்கத்தில் விமானத்தில் பயணஞ் செய்யும் நமது தமிழ் மக்கள் படுங் கஷ்டம் சொல்லுந்தரமன்று. எல்லோராலும் வாட்டி வதைக்கப்படும் பயணிகள் அவர்களே. போதாக்குறைக்கு நமது வடபிராந்திய போக்குவரத்துச் சபையும் அவர்களைச் சுரண்டுவதாக ஒரு குற்றச் சாட்டு.

சாதாரணமாக பஸ்ஸில் ஒரு பயணி தன்னுடன், மேலதிக கட்டணம் ஏதும் செலுத்தாமல் இருபது கிலோ உடைமைகளைக் கொண்டு செல்ல முடியும். அதற்கு மேல் இருபது கிலோவிலிருந்து ஐம்பதுகிலோ வரையான உடைமைகளை எடுத்துச் செல்ல பொதிக் கட்டணம் ஐந்துரூபா செலுத்த வேண்டும்.

இப்போது விமானப் பயணிகள் ஒவ்வொருவரும் விமானத்தில் இருபது கிலோ மட்டுமே மேலதிக கட்டணமின்றி எடுத்துச் செல்லமுடியும். ஆதலால் பொதுவாக அனேக பயணிகள் இருபது கிலோவிலும் குறைந்தளவு எடையுள்ள பொருள்களையே விமானப் பயணத்துக்கு எடுத்துச் செல்வது வழமை.

ஆனால் விமானப் பயணிகள் அனைவருக்கும் அவர்கள் கொண்டு வரும் ஒவ்வொரு பொதிக்கும்— எடைக் கணக்கு இன்றி — வ. பி. போ. ச. தலா எழுபத்தியைந்து ரூபா அறவிடுகின்றதாம்! என்ன நியாயம் இது?

விமானப் பயணத்துக்கு ஆயிரக் கணக்கில் கொட்டிக் கொடுத்து வரும் இப்பயணிகளிடம் ஒரு பொதிக்கு எழுபத்தியைந்து ரூபா என்ற அடிப்படையில் நாமும் வாங்கினால் என்ன என்ற எண்ணமா?

விமானப் பயணிகளை ஏற்றுவதற்காக பஸ் பலாலியிலும் யாழ். நகரிலும் நீண்ட நேரம் காத்து நிற்கின்றது என்பது உண்மைதான். அப்படிக் காத்திருக்க வைக்கும் அரசிடமும், அதன் நிர்வாகத்திடமும் தான் அதற்கான கட்டணத்தை அற விடவேண்டுமே அன்றி அப்பாவிப் பயணிகளிடம் அல்ல!

• மின்னல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் ஜனவரி 1998

**யாழ்ப்பாணக் குடாநாட்டில் வாழும் அன்புக்கினிய தமிழ் பேசும் மக்களே!**

உங்கள் ஒவ்வொருவருக்கும் எங்கள் பணிவான வணக்கங்கள்.

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைப் போராட்டத்தின் ஒரு திருப்பு முனையாக அமைந்த அனைத்துலக தமிழாராய்ச்சி மாநாட்டின் இறுதி நாள் சம்பவங்களின் 24 ஆவது நினைவு நாளில் உங்களைச் சந்திக்கின்றோம். யாழ்ப்பாணத்தில் அனைத்துலக தமிழாராய்ச்சி மாநாட்டை நடத்துவதற்காக அமைக்கப்பட்ட தொண்டர் படையில் ஒருவராக நின்று பணியாற்றியவரான எங்கள் முன்னாள் செயலாளர் நாயகம் தோழர் பத்மநாபாவின் நினைவுகளைச் சுமந்தவர்களாக உங்கள் முன் வந்து நிற்கின்றோம்.

கட்டிய துணியுடன் கைதடியைக் கடந்து போனாலும் கிளாலிக் கடலை கடக்க முடியாமல் மீண்டும் இருப்பிடங்களுக்குத் திரும்பிய உங்கள் மன உணர்வுகளையும், இழப்புக்களின் சோகத்தையும், பிரிவின் கவலைகளையும் நாம் நன்கு உணர்ந்துள்ளோம். நடந்தவை நடந்தவையாகப் போக இனி நடக்கவிருப்பவையாவது நல்லனவாக மலர வேண்டும் என்று உளப்பூர்வமாக விரும்புகின்றோம்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களைத் தமிழ் பேசும் மக்களின் சரித்திர பூர்வ வாழ்வு இடம் என்பதை நிறுவி, ஒரே நிர்வாக அமைப்பின் கீழ் கொண்டு வந்து, திருகோணமலையை நிர்வாகத் தலைநகரமாக்கிய சாதனையை நிலை நாட்டியவர்கள் என்ற உரிமையுடனும், மாற்றுக் கருத்துக்களுக்கு மதிப்பளித்து செவிசாய்ப்பவர்கள் என்ற நேர்மையுடனும், தவறுகளைச் சுயவிமர்சனம் செய்து திருத்திக்கொள்ளச் சித்தமாயிருப்பவர்கள் என்ற நட்புடனும், உங்கள் முன்னிலையில் வந்து வாக்குக் கேட்டு நிற்கின்றோம். பூச் சொரிந்து எங்களை வாழ்த்துவீர்கள் என்ற திடமான நம்பிக்கை எமக்குண்டு.

நன்றி.

வணக்கம்.

இந்த மண்ணில் மக்கள் வாழ்வு மலரவும்....

தமிழ் பேசும் மக்களின் உரிமைப் போராட்டத்தில் உண்மையான ஜனநாயக சக்திகள் பலம்பெறவும்...

உள்ளூர் நிர்வாகத்தில் உங்கள் பிரதிநிதிகள் பங்குபெறவும்....

ஒற்றுமைக்காக உரத்த குரல் எழுப்பவும்...


ஐக்கியப்பட்ட வெகுஜன அரசியல் தலைமையைக் கட்டியெழுப்பவும்....

அச்சந்தரும் ஆயுதநிழல் இந்த மண்ணிலிருந்து அகலவும்....

இதயசுத்தியுடன் உங்களுக்காக வாழ்வை அர்ப்பணிக்கும்....

**ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினரை**

**பூவுக்கு நேரே புள்ளடியிட்டு ஆதரியுங்கள்.**




# ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**[ E.P.R.L.F. ]**

### பொன்னாலை

# வரகவி பே.க. கிருஷ்ணபிள்ளை அவர்களின் நூற்றாண்டு விழா (1898 - 1998)



பொன்னாலை வரகவி
பே. க. கிருஷ்ணபிள்ளை

## பொன்னாலை தந்த 'வரகவி'

இற்றைக்குச் சுமார் ஐம்பது, அறுபது ஆண்டுகளுக்கு முன்பு 'பொன்னாலை, வரகவி, பே.க. கிருஷ்ண பிள்ளை' என்ற பெயரை அறியாதவர்கள் யாழ்ப்பாணத்திலே இருக்கவில்லை.

தாமே இயற்றிப் பாடிய பாடல்களினாலும், பங்கு கொண்ட நாடகங்களினாலும், வாக்குச் சாதுர்யம் மிக்க சொல்லாடல்களினாலும் மக்கள் அனைவரையும் கவர்ந்த மேதை அவர்.

'மேதை' என்ற சொல் அவருக்கே நன்றாகப் பொருந்தும். அந்த மேதை வாழ்ந்த ஊரிலே பிறந்தவன் என்பதாலும், அவர் வாழ்ந்த காலத்திலேயே சிறுவயதினனாக வேனு - வாழ்ந்தவன் என்பதாலும் அவரை நேரில் கண்டு பேசிப் பழகியவன் என்பதாலும் எனக்கு மிகுந்த பெருமை உண்டு. மகாகவி சுப்பிரமணிய பாரதியாரை 'வரகவி' என்பார்கள் அதை மனத்தில் கொண்டோ என்னவோ —

1930 களில் யாழ்ப்பாணத்தில் நாடகம் நடிக்க வந்த இசைமேதை கே. பி. சுந்தராம்பாள் அவர்கள் நமது கிருஷ்ணபிள்ளையின் கவிபாடுந் திறனை நேரில்கண்டு வியந்து இவருக்கு 'வரகவி' என்ற பட்டத்தைச் சூட்டி மகிழ்ந்தார் — இது நடந்தது சுழிபுரம் விக்ரோறியாக கல்லூரியில் நடைபெற்ற ஒரு விழாவில். திருவாளர் தம்பியப்பா அவர்கள் அக்கல்லூரியின் அதிபராக இருந்த காலம் அது.

கிருஷ்ணபிள்ளையின் பாடல்களில் சிறந்த கருத்துக்களிருக்கும். ஓசை நயம் சுதி பேசும்!

— வரதர்

## நயந்து பெருவிழா எடுப்போம்!

பைந்தமிழின் யாழ்ப்பாணம் ஈன்றெடுத்த
பொன்னாலை வரகவியாம் கிருஷ்ணபிள்ளை
சிந்தனையில் உதித்தகவி நயங்கள் மாந்திச்
சொக்கியே சுந்தராம்பாள் மனம் மகிழ்ந்தே
புந்தியும் உவக்கத் தந்த வரகவியாம்
பெருவிருது பெற்றிட்ட புலவனான
நந்தமிழின் நாடகக் கலைஞனுக்கே
நயந்து நூற்றாண்டு விழா எடுப்போம் வாரீர்!

கவிமாமணி, கலாரத்னா, கலாபூஷணம்
யாழ்ப்பாணம்
**பிரம்மஸ்ரீ வீரமணி ஐயர்**

## வாழ்த்துப்பா

வரகவி கிருஷ்ணர் என்று மாண்பினர் வாழ்த்திப் போற்ற
மருவிய நாடகங்கள் வளந்தரு கவிகள் சந்தம்
தருகவி அனந்தம் பாடித் தரணியின் இயல்பைக் கூறும்
குருகவியாகி நின்றான் குணமெனும் கிரியில் நின்றான்

நடப்பதைக் கூறி இந்த நானிலம் திருந்தும் வண்ணம்
சுடச்சுடப் பாடல் பாடும் சுந்தர நா படைத்தோன்
திடப்படுநெஞ்சன் யார்க்கும் தீங்கிலா வாழ்க்கை
பூண்டோன்
இடர்ப்படு புவியை நீத்தான் எய்தினான் இமையோர் வாழ்வே
அன்னவன் இசைத்தபாக்கள் ஆற்றிய நாடகங்கள்
மன்னிய இசைத்துறைக்கு வழங்கிய சொத்து யாவும்
உன்னிடு கற்றோர்க் கெல்லாம் உறுதுணையாகும்
வண்ணம்
பொன்னகர் வரதராசப் புனிதனைப் போற்றுகின்றேன்.

**அருட்கவி சீ. விநாசித்தம்பி**
நாகவரத நாராயணர் தேவஸ்தானம்
அளவெட்டி.

## சகல கலாவல்லவன்

வரகவி, பொன்னாலை பே. க. கிருஷ்ணபிள்ளை ஒரு நாடறிந்த பெருங் கலைஞராகவும், கவிஞராகவும், சமூகத் தொண்டராகவும் விளங்கியவர். இந்திய இசைநாடகக் கலைஞர்கள் இலங்கைக்கு வந்து நாடகங்களை மேடையேற்றிய காலங்களில் இவர் அவர்களுடன் இணைந்தும், தனித்தும் நாடகங்களை அரங்கேற்றி வந்தார்.

பொன்னாலைக் கிருஷ்ண பிள்ளை ஒப்புயர்வற்ற நகைச் சுவை நடிகராகத் திகழ்ந்தார். இவர் பிறந்த ஊரான புன்னாலையைப் பொன்னாலையாகப் பெயர் பெற வைத்தவர் இவராவர். இதை ஒரு சமயம் நாடகமேடையில் நகைச் சுவையாகப் பின் வருமாறு கூறினார்.

''முன்னாலை புன்னாலை,
பின்னாலை என்னாலை
பொன்னாலை''.

எடுத்த எடுப்பில் கவிபாட வல்லவர் பொன்னாலைக் கிருஷ்ணபிள்ளை, பொன்னாலையில் நெல்லியான் எனும் இடத்தில் பிறந்த கிருஷ்ண பிள்ளை நெல்லியடியைச் சேர்ந்த சுபத்திரை அம்மாளுடன் நடிக்கும் போது பாடிய பாடல் இதற்கு நல்லதோர் உதாரணமாகும்:

''நெல்லியான் நான்
உனக்கு நெல்லியடி நீ
எனக்கு...''

கிருஷ்ணபிள்ளை சுதேச உணவு, சுதேசக்கைத் தொழில் தாய்மொழிக் கல்வி என்பனவற்றிலும் அதிக கவனஞ் செலுத்திஎழுதிவந்தார். ஒருவகையில் கூறுவதானால் இவர் ஒரு சகலகலா வல்லபனாகத் திகழ்ந்தார்.

**கலாநிதி காரை**
**செ. சுந்தரம்பிள்ளை**

---

நூற்றாண்டு விழாச்சபை
நிர்வாகிகள்

தலைவர்:
தி. ச. வரதராஜன் (வரதர்)

செயலாளர்:
கலாநிதி
காரை சுந்தரம்பிள்ளை

பொருளாளர்:
க. சந்திரராசா, SLAS

---

## சிவதர்மவள்ளல் க.கனகராசா J. P. அவர்களின் செய்தி

பொன்னாலை வரகவி பே. க. கிருஷ்ணபிள்ளை அவர்களது நூற்றாண்டு விழா 1998 ஜனவரி 10 ஆம் திகதி நடைபெறவிருப்பதை சங்கீத பூஷணம் சு. கணபதிப்பிள்ளை அவர்கள் மூலம் அறிந்தேன். இவரைப் பற்றி நான் அறிந்தவரையில் பழமை பேணும் கொள்கையுடையவரெனபது எனது செயற்பாடுகளுக்குப் பொருத்தமானதே என்பதால் நான் இவரை வாழ்த்தவேண்டிய கடப்பாடுடையவனாகிறேன்.

''பனையே பிரபஞ்ச தஞ்சமே'' ''பஞ்சமது எங்கிறீர் பனை, தென்னை உங்களின் பக்கத்திலே இருக்கு''— ''புளி, இலுப்பை, வேம்பு, தென்னை, பனை அதனைக் காரடி'' — என ஆரம்பித்த சந்தம் நிறைந்த யாவரும் புரிந்துகொள்ளக் கூடிய சுலபமான நடையில் கருத்துக்களை வெளிப்படுத்தியிருந்தமை என்னைக் கவர்ந்தது.

இப் பெரியாருக்கு நூற்றாண்டு விழா செய்ய முற்பட்ட பெரியோர்களின் முயற்சி இக் காலத்துக்கு மிகவும் பொருத்தமானதே. இவ் விழாச் சிறப்புற எனது நல்வாழ்த்துக்கள்.

சிவதர்மவள்ளல்
**க.கனகராசா**
(சமாதான நீதிபதி)

## வரகவி நினைவாக...

★ இந்த நூற்றாண்டுவிழா ஆண்டில் வரகவி அவர்களில் கவிதைகளைத் தொகுத்து வெளியிடவும் அவருடைய கவிதைகள் பற்றிய ஆய்வு நூல் ஒன்றை வெளியிடவும் ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

★ அத்துடன் பெரிய அளவில் விழாக்கள், கலைவிழாக்கள் நடத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**நூற்றாண்டு விழாச் சபையினர்**

---

## நூற்றாண்டு விழாவின் அங்குரார்ப்பணக் கூட்டம்

காலம்:- 10.01.98 சனி பி. ப. 2.30மணி

இடம்:- சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரி

தலைவர்:- திரு. தி. ச. வரதராஜன் (வரதர்)
(விழாச் சபைத் தலைவர்)

வரவேற்புரை:- திரு.ப. சிவதெட்சணாமூர்த்தி
(யாழ். மாவட்ட தேசிய இளைஞர் மன்ற அலுவலர்)

சிறப்புரைகள்:

★ கலாநிதி காரை சுந்தரம்பிள்ளை
(விழாச்சபைச் செயலாளர்)

★ கலாநிதி எஸ். சிவலிங்கராசா
( சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம் )

★ திரு. மூ. சிவானந்தன், எம். ஏ.
(இளைப்பாறிய கல்வி அதிகாரி)

★ சங்கீத பூஷணம் க. கணபதிப்பிள்ளை
(பிரதிக் கல்விப் பணிப்பாளர்)

நன்றியுரை: திரு. ந. சிவசண்முகமூர்த்தி, பீ. ஏ.

கலை நிகழ்ச்சிகள்: நடராஜ நடனம், கும்மி,
கிராமிய நடனம்

---

### விழாச் சிறப்புற வாழ்த்துவோர்.

ஸ்ரீ வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்,
பொன்னாலை.

வரதராஜப் பெருமாள் வித்தியாசாலை,
பொன்னாலை.

ஸ்ரீ வரதராஜப் பெருமாள் வெதுப்பகம், சுழிபுரம்.

வட்டுக்கோட்டைத் தொகுதி தமிழ்ச்சங்கம்

விக்ரோரியாக் கல்லூரி, சுழிபுரம்.

ஐக்கிய சங்க சைவ வித்தியாசாலை, சுழிபுரம்

வலி. மேற்கு பிரதேச செயலக கலாசாரப் பேரவை

சஹானா கலைக்குழு நெல்லியான், சுழிபுரம்.

ஆனந்தா அச்சகம், யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சித் தேர்தல்கள் - 1998

## அன்பார்ந்த மக்களே!

எமது தாயகப் பிரதேசத்தில்
சிதறியும் சிதைந்தும்
உருமாறி உருக்குலைந்தும்
பொங்கியெழும் போர் அலைகளில்
திசை தெரியாமல் சிக்கித்தவிக்கும்
எம்மக்களுக்கு என்றும்- நாமே.
நங்கூரம்!





## ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி

(புளொட்)

[விளம்பர இல. 67659]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லங்கா சோல்ட் லிமிடெட் வட பிராந்தியம்

எனது இல. LSL/ NR/ AC/ 02/98
பிராந்திய அலுவலகம்,
மிருசுவில்.

## அறிவித்தல்

## 1995 ஆம் 1996 ஆம் ஆண்டுகளுக்குரிய சம்பளம்

மேற்படி விடயம் சார்பாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபரால் 08 - 01 – 98 இல் எனக்கு அனுப்பி வைக்கப்பட்ட JF/ GA/ SR Civil / 49 இலக்க முடைய கடிதத்தில் லங்கா சோல்ட் லிமிடெட் வடபிராந்திய நிரந்தர ஊழியர்களுக்கு 1995 ஆம் ஆண்டுக்கான சம்பளம் வழங்கப்பட உள்ளது.

அதற்கும் 1996 ஆம் 1997 ஆம் ஆண்டிற்குரிய சம்பளத்திற்கும் விரைவில் நடவடிக்கைகள் எடுக்க வேண்டி உள்ளன.

எனவே யாழ். குடா நாட்டில் வசிக்கும் சகல நிரந்தர லங்கா சோல்ட் லிமிடெட் ஊழியர்கள் எதிர் வரும் 13 - 01 - 1998 செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு மிருசுவில் பிராந்திய அலுவலகத்திற்குத் தவறாது சமுகம் தரவும்.

தி. சிறி இராமநாதன்
பிராந்திய முகாமையாளர்
லங்கா சோல்ட் லிமிடெட்

09- 01 - 1998
மிருசுவில். (52507)

---

# ஓவியக் கண்காட்சி

1997ஆம் ஆண்டு உலக உளநல நாளையொட்டி 'உதயன்' ஆதரவில் 'சாந்திகம்' நடத்திய படைப்பாக்கக் களத்தில் உருவாக்கம் பெற்ற ஓவியங்கள் அனைத்தையும் கொண்ட கண்காட்சி இன்றும், நாளையும் யாழ். இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் காலை 8.00 மணி தொடக்கம் மாலை 4.00 மணி வரை இடம்பெறவுள்ளது. (உ-8)

---

# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஜன. 10

நெல்லியடி தடங்கன் புளியடி முருகமூர்த்தி கோயிலில் நாளை ஞாயிறு காலை 8 மணிக்கு திருவாசக முற்றோதல் இடம்பெறவுள்ளது.

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜன.10

நுணாவில் குளம் அருள் மிகு கண்ணகை அம்பாள் தேவஸ்தான புதிய தீர்த்தத் தடாகத் திறப்பு விழா இன்று சனி காலை 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

''கண்ணகா புஷ்கரணி'' எனப் பெயரிடப்பட்டுள்ள இத் தீர்த்தத் தடாகம் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகளால் கடந்த வருட முற்பகுதியில் இந்தியாவில் இருந்து கொண்டு வரப்பட்ட புனித தீர்த்தத்தைக் கொண்டு பிரதிஷ்டை செய்யப்பட்டுத் திறந்து வைக்கப்படும். (ஐ-7)

---

அம்மாவும் அப்பாவும் நானும் தந்தையர் கிராமம்

## ஓவியக் கண்காட்சி

குமாரசாமி மண்டபம், யாழ். இந்துக்கல்லூரி

10–01–98 சனி
11-01–98 ஞாயிறு ] காலை 10 மணி – மாலை 4 மணி

பாழடைந்த கோயிலின் பரம்பொருள் சித்தம் அழகியார்

சாந்திகம் உதயன்

---

## உதயன்...

(முதலாம் பக்கத் தொடர்)

நியமிப்பது எமது கடப்பாடு ஆகும் என்பதையும் நாம் தெளிவுபடுத்த விரும்புகின்றோம்.

— என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர் குறிப்பு

1. இந்த அறிக்கையில் 3, 4, 5, 6ஆம் பந்திகளில் குறிப்பிடப்பட்ட தகவல்கள் எதுவும் சம்பந்தப்பட்ட உதயன் செய்திக்கு முரணாக இல்லை.

2. செய்தியின் கருத்தில் முரண்பாடு இருப்பதை தாங்கள் அவதானித்ததாக புளொட் குறிப்பிட்டுள்ளது. என்ன முரண்பாடு? விளங்கவில்லை.

3. எமது செய்தியும், தலைப்பும் தெளிவாக உள்ளன. செய்தியைத் தவறாகப் புரிந்து கொண்டால் நாம் அதற்குப் பொறுப்பல்ல.

4. கூட்டணியினரின்வேட்பு மனுவை தெரிவத்தாட்சி அலுவலர் நிராகரித்ததுசரியே என புளொட்டின் சட்டத்தரணி நீதிமன்றத்தில் வாதிட்டார் என்பதை உதயன் மீண்டும் ஊர்ஜிதப்படுத்த விரும்புகின்றது. (ஆ-ர்)

---

## ஆஸி. தூதுவர்...

(முதலாம் பக்கத் தொடர்)

கொள்கின்றார்.

யாழ்ப்பாணத்தில் 4 தினங்கள் தங்கிநிற்கும் இவர் 15 ஆம் திகதி யாழ். செயலகத்தில் நடக்கும் திணைக்களத் தலைவர்களின் கூட்டத்தில் பங்குபற்றி இங்குள்ள நிலைமைகளைக் கேட்டறிவார். (உ-4)

---

# யாழ். பல்கலைக்கழக

கலைப்பீட மாணவர் ஒன்றியம்
வழங்கும்

## கலை விருந்து

1. யாழ். பல்கலைக்கழக நடன, இசைத்துறை மாணவர் இணைந்து வழங்கும்
அரும்பியல் நடம் (நாட்டிய நாடகம்)

2. யாழ். பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் இணைந்து வழங்கும்
கலைக்குயில் கானங்கள் (இன்னிசைநிகழ்ச்சி)

இடம்: கைலாசபதி கலையரங்கு,
யாழ். பல்கலைக்கழகம்.

காலம்: 11-01-1998 ஞாயிற்றுக்கிழமை

காட்சி 1: காலை 9-00 மணி (இலங்கை நேரம்)
அன்பளிப்பு 250/-

காட்சி 2; மாலை 2-00 மணி (இலங்கை நேரம்)
அன்பளிப்பு 100/-
50/- (மாணவர்கள் மட்டும்)

கலைப்பீட மாணவர் ஒன்றியம்,
யாழ். பல்கலைக்கழகம்.

விளம்பர அன்பளிப்பு:

## கண்ணன் லொட்ஜ்,

(பரமேஸ்வராச் சந்தி)
இராமநாதன் றோட், திருநெல்வேலி.
(52517)

---

# மரண அறிவித்தல்கள்

## பிரான்சீஸ் பொன்னுத்துரை

(லீலா ஸ்ருடியோ உரிமையாளர்)

யாழ்ப்பாணம் இல 80, பிரதான வீதி, லீலா ஸ்ருடியோ உரிமையாளர் பி. பிரான்சீஸ் பொன்னுத்துரை அவர்கள் 04 - 01 – 98 அன்று இந்தியாவில் காலமானார்

அன்னார் மெற்றில்டாவின் (மலர்) அன்புக் கணவரும், டொலறோஸ், ஜோய் றேமன் (லண்டன்), ஜோய் எட்மன் (ஜேர்மன்), மலர்மதி, வந்தனா, வளர்மதி ஆகியோரின் அன்புத் தந்தையாரும், அனுக்கிலற் (ஐஸ்னோவர்), மற்றீசியா (லண்டன்), ஜெயவதி (ஜேர்மன்), கிறிஸ்ரோ (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
இ. எமிலி
(மைத்துனி)

48, டேவிற் றோட்,
யாழ்ப்பாணம். (52498)

## பரம்சோதி பொன்னம்பலம்

களபூமி கரம்பிட்டிகந்தனை காரைநகரை பிறப்பிடமாகக் கொண்டவரும் 77, வேம்படி வீதி, யாழ்ப்பாணத்தில் வசித்தவருமான பரம்சோதி பொன்னம்பலம் 09- 1 – 98 இல் சிவபதம் அடைந்தார்.

அன்னார் காசிநாதர் பொன்னம்பலத்தின் (பிரபல புரோக்கர்) அன்பு மனைவியும், தனலட்சுமி, தனபாலசிங்கம் ஆகியோரின் பாசமிகு தாயாருமாவர்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (11-1-98) ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியளவில் 77, வேம்படி வீதி, யாழ்ப்பாணத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக வில்லூன்றி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
க. பொன்னம்பலம்
(கணவன்)

(52516)

---

## லிபேட்டி சினிமா

அச்சுவேலி.

30 அடி அகலத் திரையில்
இன்று முதல் 13 வரை
கமல், மீனா,
ஜெமினி கணேசன்
நடித்த
ஔவை சண்முகி
நேரம் 10-30, 2-30
(52288)

---

## வாழ்த்துகின்றோம்

கூட்டுறவுப் பணியாளர் தராதரப்பத்திர
(உயர் பிரிவு)
பயிற்சி நெறி - 1997 இடைநிலைப் பரீட்சை
மேற்படி பரீட்சையில் அதி உயர் பெறுபேறுகளினைப் பெற்ற எண்மர்களில்
எமது சங்கத்தின் பணியாளர்களான

திரு. ச. தவநேசன்,
திரு. து. மனோகரன்

ஆகிய இருவரும் உள்ளடங்கியுள்ளார்கள் என்ற செய்தி கேட்டு மகிழ்ச்சியடைகின்றோம்; வாழ்த்துகின்றோம்.

1998 - 02 - 02 இல் நடைபெறவுள்ள இறுதிப் பரீட்சையிலும் நல்ல பெறுபேறுகளை ஈட்ட எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சக பணியாளர்கள்,
யாழ்ப்பாணம்
பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்.
(52519)

---

# NELLIYADY MAHATHMA CINEMA

## SUPER WIDE SCREEN SHOW
OPENING on 10th JANUARY

வடமராட்சியில் முதன் முதலாக

நெல்லியடி மஹாத்மா அகல வெண்திரையில்
சனிக்கிழமை 10 – 01 - 1998 முதல் குதூகல ஆரம்பம்.
தினசரி 10.30, 2.30 (பழைய நேரம்)

படம்:- மேட்டுக் குடி

நடிகர்கள்:- கார்த்திக், நக்மா, கவுண்டமணி, மணிவண்ணன், ஜெமினி கணேசன்.

இன்று முதல் தினசரி இருகாட்சிகள் காண்பிக்கப்படும்,
ரசிகர்கள், ஆதரவாளர்கள் அனைவரையும்
அன்புடன் அழைக்கின்றோம்.

- நிர்வாகத்தினர்

(சி/2592)

---

# மரண அறிவித்தல்

## திருமதி நல்லம்மா சதாசிவம்

பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும் அல்வாய் மேற்கு, அல்வாயை வதிவிடமாகவும் கொண்ட திருமதி நல்லம்மா சதாசிவம் நேற்று 9 – 1 – 97 இல் 19A, பிறேசர் அவனியூ, தெகிவளையில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சந்திரசேகரம் சதாசிவத்தின் (நடராசா — ஆசிரியர்) மனைவியாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
டானியல் குடும்பம்

19A, பிறேசர் அவனியூ,
தெகிவளை. (சி/2600)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்

சஞ்சீவி
சஞ்சிகை
10 — 01 — 1998 சனிக்கிழமை

நவநாகரிக புடவை வகைகளுக்கு
ஜி. எஸ். லிங்கநாதன் அன்கோ
13, 14, பெரியகடை, யாழ்ப்பாணம்.
(52167)

கருத்துக் கலசம் மயூரா

## குழந்தைகள்

குழந்தையும் தெய்வமும் குணத்தால் ஒன்று என்பது பாடல் வரி.

குழந்தைகள் கள்ளம் கபடம் இல்லாதவர்கள்; எல்லோர் மீதும் அன்பு செலுத்துபவர்கள். ஒரு முறை ஒருவருடன் பழகி விட்டால் பிறகு விட்டுப் பிரிய இணங்க மாட்டார்கள். அவரைப் பற்றிக் கொள்ளவே விரும்புவர்.

அவர்கள் பிறர் மீது கொள்ளை அன்பு செலுத்துவார்கள். அதே போன்று பிறரும் தம்மீது அன்பு காட்ட வேண்டும் என்று எதிர்பார்ப்பார்கள்.

கடவுளும் எல்லோர் மீதும் அன்பு காட்டுகிறார். மனிதர்கள் தம்மீது அன்பு செலுத்த வேண்டும் எனவும் அவர் எதிர்பார்க்கிறார். அடியார்கள் தன்னை நீள நினைந்து பிரார்த்திப்பதையே தம்மீது செலுத்தப்படும் அன்பாக அவர் கருதுகிறார். அடியார்களுக்கு அருள்வதே அவரது அன்பு.

குழந்தைகள் மீது செலுத்தப்படும் அன்பு, இறைவனுக்குரிய விசேட பிரார்த்தனை என்றும், அவர் மீதான பொலிந்த அன்பு என்றும் கருதப்படுகிறது.

குழந்தைகள் மீது காட்டப்படும் அன்பும், அவர்களைத் தக்கபடி பராமரித்து வளர்ப்பதும், வழி நடத்துவதும் இறைவனுக்கான செயல் வடிவப் பிரார்த்தனைகளாகும்.

அந்தப் பிரார்த்தனை மூலம் இறைவனின் கருணையை, அருட்கொடையை நிறையவும் பெறலாம் என்று கொள்ளப்படுகிறது. அது போலவே குழந்தைகள் எல்லோரும் கடவுளின் குழந்தைகள் எனக் கருதப்படுகிறது.

வசதி குறைந்த, வாய்ப்பிழந்த, அனாதைகளாகி விட்ட, அனாதரவாகி விட்ட, அங்கவீனராகிய குழந்தைகள் மீது அன்பு செலுத்தி, ஆதரவளித்து, நல்வழிப்படுத்துவது இறைவனுக்குச் செய்யப்படும் விசேட பூசையாகும்.

குழந்தைகளே, வருடங்கள் கழிய நாட்டின் பிரசைகளாகிறார்கள். அவர்களில் வாய்ப்பிழந்தவர்களை, அனாதரவாளர்களை, அங்கவீனர்களை ஆதரித்துப், பராமரித்து, வளர்த்துக் கல்வியூட்டுவது பெரும் சமூகத் தொண்டு; நாட்டுத் தொண்டு; தெய்வத் தொண்டுமாகும்.

அனாதைகளான குழந்தைகள், சிறுவர்கள் மீது அன்பு காட்டுங்கள்; ஆதரவு நல்குங்கள். அவர்கள் இன்னொருவர் பிள்ளை என்று துரத்தாதீர்கள்.

அதுவே பெரும் அறமாகும். உங்களுக்கு அருளை விளைவிக்கக் கூடிய விதையும் ஆகும்.

சமுதாயத்தில் அன்பும் அறமும் ஓங்குவதற்கு குழந்தைகளின் நலன்கள் பேணப்படுவதும் இன்றியமையாததாகும்.

எங்கள் பிரதேசம் இன்றுள்ள சூழ்நிலையில் அனாதரவான குழந்தைகளைப் பேணிப் பராமரிக்கும் அறநிலையங்களுக்கு எல்லோரும் இயன்ற வரை உதவி நல்க வேண்டும்.

# இங்கித வாழ்வு பொங்க மங்கலப் பொங்கல் நாள்!

பொங்கல் திருநாள் தமிழர் எல்லோருக்கும் ஒரு திருமிகு பெருநாள். மார்கழி நீராடி மாரிமறையச் சூரியன் இப்பூமியிலே பூரண சோதிப் பிழம்பாகப் பிரகாசத்துடன் தோன்றிப் பருவ காலங்களுக்கு வழிகோலும் நன்னாள்; இருள் அகன்று, மருள் நீங்கிப் பெருங்கருணை கைவரப் பெறும் பொன்னாள்.

### இயற்கை எழில்

இக்காலத்திலே கதிரவன் வரவிற்குக் கட்டியங் கூறுவது போல இயற்கை அன்னை பச்சை உடுத்து, பன்னிற மலர்சூடி, இனிய காயும் கனியும் கரும்பும் அணிந்து எழில் மிகு காட்சி தருவாள். கழனியெல்லாம் கதிரவனுக்குச் சாமரை வீசுவது போல நெற்கதிர்கள் இளந் தென்றலில் ஆடி அசையும். வள்ளற் பெரும் பசுக்களும், வளம் தரும் விலங்குகளும், எருதுகளும், கன்று காலிகளும் ஏதோ ஒருவகை இன்ப உணர்வால் தென்பு பெற்றுத் திளைக்கும். தைப்பொங்கல் பண்டிகையைத் தமிழ் மக்கள் சூரியப் பொங்கல் போன்றே கொண்டாடி மகிழ்வர்; உழவர் திருநாள் என்றும் கூறிப் பீடும் பெருமையும் அடைவர்.

ஏர்முனைக்கு நேர் எதுதான் உண்டு? உழுதூண் சுவையே சுவையாகும். கழனிகளில் நட்ட பயிர்களும் தொட்ட வளமும், நிமிர்ந்து வளர்வதைக் கண்ணுற்ற உழவர், எம் உயிரெல்லாம் இனித் தளர்வடையாது எனும் உணர்ச்சிப் பெருக்கால் உவகை கொள்வர். பூரண கும்பம் வைத்துப் பிள்ளையாருக்கு அறுகு, சந்தனம், மஞ்சள், குங்குமம், மலர்கள் சாத்தி, எழுந்தருளச் செய்து, பஞ்ச கௌவிய அபிஷேகம் செய்த நிலத்தில் புதிதான பானையில், முறைப்படி பொங்கிப் பூரித்து, பிள்ளையாருக்கும், ஆதித்தனுக்கும் படைத்து, குடும்பத்தவர்களும், உற்றார் உறவினர்களும் ஒப்புடன் முகமலர்ந்து உண்டு களிப்பர். பொங்கல் நாளில் விரதமிருந்து பொங்கியுண்ணுதலே சிறந்ததாகும்.

### போகிப் பண்டிகை

தைப் பொங்கல் பண்டிகைக்கு முன்னும் பின்னும் இருவகைப் பண்டிகைகளைக் கொண்டாடுவது வழக்கம். தைப்பொங்கல் நாளுக்கு முன்தினம் நிகழ்வது போகிப் பண்டிகை. இந்திரனைப் போகி என்பர். அவன் மேகங்களை இயக்குபவன். தமிழ் நாட்டார் பழங்காலத்தில் இந்திரனை விளை நிலங்களின் இறைவனாக வைத்து வணங்கினார்கள். சோளவழநாட்டில் இந்திரவிழா இருபத்தெட்டுநாள் சோலாகலமாக நடைபெற்றது.

''பசியும் பிணியும் பகையும் நீங்கி
வசியும் வளனும் சுரக்க'' வேண்டும் என்று அவ்வானவனை வழிபட்டார்கள். சிறப்பாக நடந்த அத்திருநாள் இப்பொழுது குன்றிக் குறுகி ஒரு நாளில் நடைபெறுகிறது.

### மாட்டுப் பொங்கல்

பொங்கலுக்கு மறுநாள் நடைபெறுவது மாட்டுப் பொங்கல். மன்பதைக்கு உழைக்கும் கால்நடைகளில் மாட்டிற்கு ஒப்பாகச் சொல்லப்படுவது மற்றொன்று இல்லை. மாட்டுப்பொங்கலன்று கன்று காலிகளுக்குக் கொண்டாட்டம். ''அறந்தரு நெஞ்சோடு அருள் சுரந்து ஊட்டும்'' பசுக்கள், பாலும் நெய்யும் தந்து மாந்தர் உடலைப் பாதுகாப்பவை. கரவாது கன்றுக்குரிய பாலை அன்புடனேயோடும் பொறுமையோடும் கொடுக்கும் கருணை வாய்ந்தவை. இத்தகு பசுவைக் கோமாதா என்று போற்றி வணங்கினர் தமிழர்.

இருள் உலகத்திலிருந்து ஒளி உலகத்திற்கு இட்டுச் செல்லும் புனித நாளே தைப்பொங்கல் நாளாகும். இருள் உலகத்துக்குரிய மூத்தவளை விரட்டி, ஒளி உலகத்துக்குரிய சிதேவியை வரவழைத்து, கருணை பூக்கச்செய்வதும், திருவும் கல்வியும் சீரும் தழைக்க ஒளி முதலை வேண்டுதலுமே பொங்கல் பெருநாளின் சிறப்பு அம்சங்களாகும்.



தமிழ் மக்கள் நிறைவாழ்வு வாழ்ந்த காலத்திலே தைப்பொங்கல் போன்ற பண்டிகைகளும், மற்றும் தமிழர் பண்பாட்டைத் தழுவிய விழாக்களும் பூரண பொலிவுடன் நிகழ்ந்தன. இன்றோ அறம் பிழைத்த நிலையில் இரண்டு தசாப்தங்களாக ஆயிரத்தெட்டுத் தொல்லைகள் எங்களை வாட்டி வதைக்கின்றன. வளங்கொழிக்கும் பூமியும், எமது வாழ்வும் வளங்களும் அல்லற்பட்டுச் சொல்லொணாத் துயரங்களைத் தந்துள்ளன. ஒரு தொகுதி மக்கள் வானமே கூரையாகவும், வாடி வதங்கி ஓடித்திரிந்து ஒதுங்கும் தற்காலிக மண் பரப்புகளே வாழிடங்களாகவும், ஏதிலிகளாக உணவுக்கும், உடலோம்பும் மருத்துவ வசதிகளுக்கும், அருகதை அற்றவர்களாகப் பகுதிபகுதியாக காடு, கரம்பைகளில் வாழ்கின்றனர். இன்னும் ஒரு பகுதி பயமும் பீதியும் துரத்தக் கடல் கடந்து கொடிய குளிரிலும், அதிக வெப்பத்திலும் அலைந்து தம் இனக்குறியீடுகளைத் தொலைத்து நிற்கின்றனர்.


பாரம்பரியமான எமது கூட்டுக் குடும்ப வாழ்வும், பண்பாட்டுப் பாரம்பரியங்களும் சிதைந்துபோயுள்ளன. சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம், மனிதநேயம், மனித உரிமைகள் எமக்கு மறுக்கப்பட்டுள்ளன. எங்கள் நிலமகளின் நெஞ்சங்கள் பொறி வெடியாலும், பொய்புரட்டு, களவு, காமம், கற்பழிப்பு என்பவற்றாலும் புண்ணாகிப் புரையோடி உள்ளன.

நா. க. சண்முகநாதபிள்ளை

இந்தநிலையில் புனிதமான பொங்கல் என்பதற்கு எங்கள் இல்லங்கள் எப்படி இடங்கொடுக்கும்? எனவே ஒளி உதயம் எமது வழிக்குத் துணையாக வழி நடத்த வேண்டுமென வேண்டுதல் செய்வோம். தெளிவு பெற்ற சிந்தையோடு தமிழரெல்லாம் இன்றுள்ள அவல நிலைகள் மாறிச் சாந்தியும், அமைதியும், சுபீட்சமும், பெருகி வாழ்வாங்கு வாழ வகை செய்ய வேண்டுமென உணர்வு பொங்க இந்தப் பொங்கற் திருநாளில் இறையருளை யாசிப்போமாகுக!

எதிர்காலத்தில் மங்களமான பொங்கல் மனைகள் தோறும் இங்கிதமாகப் பொங்க நாங்கள் வழிபடு தெய்வப் பெருங்கருணை வழிகாட்டுவதாகுக!

★

அனைவருக்கும் சஞ்சீவியின்



## பொங்கலின் பெருமை

'ஸங்க்ரமணம்' என்ற சம்ஸ்கிருதச் சொல்லுக்கு 'நகர ஆரம்பித்தல்' என்பது பொருள்

எந்தத் தினத்தில் சூரியன் வடக்கு திசை நோக்கி நகர ஆரம்பிக்கிறதோ' அந்தத் தினம் மகர சங்கராந்தி எனப்படுகிறது.

தமிழர்களுக்கு, மகர சங்கராந்தி என்று அழைக்கப்படும் பொங்கல், தை மாதப் பிறப்புத் தினத்தன்று வருகிறது.

அந்த நாளில் புதிதாக அறுவடை செய்யப்பட்ட தானியம் முதன் முறையாக பொங்கலிடப்படுகிறது.

ஒவ்வொரு வீட்டிலும் இந்த நிகழ்ச்சியைக் கொண்டாட குதூகலமான நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.

வேலையாள்கள், உழவர்கள், ஏழைகள் அனைவருக்கும் விருந்து அளிக்கப்பட்டு, புத்தாடை வழங்கப்படுகிறது.

அடுத்தநாள் புனித அன்னையின் வடிவமாகக் கருதப்படும். 'கோமாதா' வாகிய பசு வணங்கப்படுகிறது.

அதன்பின் பறவைகளுக்கும் விலங்குகளுக்கும் அன்னம் இடப்படுகிறது.

சங்கராந்தி அன்று மாதப் பிறப்பானதால் அந்தணர்கள் தங்கள் காலஞ்சென்ற முன்னோர்களுக்குத் தர்ப்பணம் செய்கிறார்கள்.

இவ்விதம் மனிதன் செய்ய வேண்டிய எல்லா யக்ஞங்களும் இந்தப் பொங்கல் விழாவில் இடம் பெறுகின்றன.

உலகெங்கும் உள்ள ஆன்மீக சாதகர்களுக்கு இந்தநாள் ஒரு விசேட முக்கியத்துவம் பெற்று விளங்குகிறது. சூரியன் வடக்குமுகமாக சஞ்சரிக்கும் ஆறுமாதகாலம் தங்களது வாழ்வின் இலட்சியத்தை நோக்கி சாதகர்கள் முன்னேற மிகவும் உதவிகரமானதொரு வேளையாகும்.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தலில் போட்டியிடும் தமிழ்க் கட்சிகள் தம் நிலைப்பாட்டை தெளிவுபடுத்த வேண்டும்

## உள்ளும் புறமும்

குறுமுனி

யாழ். உள்ளூராட்சித்தேர்தல் திருவிழாதான் தமிழ் அரசியல் வட்டாரங்களில் இன்று சூடு பிடித்துள்ள விவகாரம்.

தேர்தல் தொடர்பாக மக்களின் மனநிலை என்னவென்பதை உதயன்—சஞ்சீவி பத்திரிகைகள் அவ்வப்போது படம்பிடித்துக் காட்டத் தவறவில்லை. என்றாலும் குடாநாட்டு மக்கள் மீது தேர்தலைத் திணிக்கும் அரசின் முயற்சிக்கு ''வீடெரிக்கும் ராசாவுக்கு நெருப்பு எடுத்துக் கொடுக்கும் மந்திரி'' போலவே இந்த விவகாரத்தில் தமிழ்க் கட்சிகள் நடந்து கொண்டுள்ளன; நடந்து கொள்கின்றன. இதையும்கூட 'உதயன்—சஞ்சீவி' பத்திரிகைகள் கோடிட்டுக் காட்டத் தவறவில்லை.

கொழும்பிலிருந்து வெளியாகும் ஒரு வார இதழும் இந்த விடயத்தில் குடாநாட்டு மக்களின் மனதை ஓரளவு பிரதிபலிப்பதாக குடாநாட்டில் விடயம் தெரிந்தவர்கள் பேசிக் கொள்கின்றார்கள். ஆனால் தேர்தல் களத்தில் முக்கியமாக—முனைப்போடு — நிற்கும் ஒரு பிரபல கட்சியின் மூத்த உறுப்பினர் ஒருவரே இந்த வார இதழுக்குப் பொறுப்பானவர் என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால் அப்பத்திரிகை தமது கட்சியின் பத்திரிகை அல்ல என்று திட்டவட்டமாக மறுத்து வருகின்றார் அக்கட்சியின் தலைவர்.

பத்திரிகைக்குப் பொறுப்பானவர், கட்சியின் முக்கிய உறுப்பினராக இருந்து கொண்டு 'ஸேம் சைட் கோல்' (Same Side Goal) அடிப்பது ஏன் என்று புரியாமல் விழிக்கின்றன அரசியல் வட்டாரங்கள். உண்மையை உண்மையாகச் சொல்லும் முயற்சியாக அது இருக்கலாம்; நல்லதுதான்.

யாழ். தேர்தல் குறித்து இரண்டொரு தினங்களுக்கு முன்னர் அப்பத்திரிகையில் 'சாராய ஆறு தயாராகின்றது' என்ற தலைப்பில் வெளியான கட்டுரைத் தகவல் சில செய்திகளைச் சொல்லுகின்றது. அதனை இங்கு மறுபிரசுரம் செய்வதும் பொருத்தமாகப் படுகின்றது.

யாழ். குடாநாட்டு தேர்தல் களத்தில் மக்களிடம் சூடு பரவவில்லை, சூட்டைப் பரப்ப கட்சிகள் மேற்கொண்ட முயற்சிகளும் எதிர்மாறான விளைவுகளையே தோற்றுவித்துள்ளன.

இக்கட்சிகளுக்கு எங்கே கிடைத்தது இத்தனை பணம்? தண்ணீராய் செலவழிக்கிறார்களே? — என்று தான் மக்கள் வியப்புறுகின்றனர்.

உடைந்த வீடுகள் ஒரு புறம்; தொழில் இன்றித் தவிப்போர் மறுபுறம். கண்ணீரும், இரத்தமும் கலங்கிச் சேறான மண்ணாக காட்சி தருகிறது யாழ். குடாநாடு.

நாடு எரியும்போது பிடில் வாசித்த நீரோ மன்னனைப் போல, மக்கள் வயிறு பற்றி எரிந்து கொண்டிருக்க தேர்தல் பிரசாரப் போட்டியில் குதித்துள்ளன தமிழ்க்கட்சிகள்.

மரண வீட்டில் நின்று திருமண அலங்காரம் செய்வது போல, யாழ். மண்ணில் தமிழ்க் கட்சிகள் செய்யும் ஆரவாரமான பிரசாரத்திற்கும், அங்குள்ள மக்களின் நிலைக்கும் இடையே பொருத்தமற்ற தன்மை காணப்படுகிறது.

இது ஒன்றே, தமிழ்க் கட்சிகளின் மனப்போக்கு மக்களின் உணர்வுகளை விட்டு அந்நியப் பட்டமையாக மாறிவிட்டமைக்கு தக்க உதாரணமாக இருக்கிறது.

இதற்கிடையே, யாழ். மனிதனை பலவீனங்களின் மொத்த வடிவமாக மாற்றி வைத்துக் கொண்டு, அவன் முதுகில் சவாரி செய்யும் திட்டங்கள் தீட்டப்பட்டு விட்டன.

தமிழ்க்கட்சி ஒன்று இரண்டரை இலட்சம் ரூபாய்களை சாராயம் கொள்வனவு செய்ய ஒதுக்கியுள்ளது என்ற தகவல் சிறிது அதிர்ச்சி தரக்கூடும்.

இன்னொரு கட்சி அதனை மிஞ்சக் கூடிய வகையில் ஏற்கனவே சாராயம் கொள்வனவை ஆரம்பித்து களஞ்சியப்படுத்தத் தொடங்கிவிட்டது.

யாழ். நகரில் குருநகர், நாவாந்துறை, ஆரியகுளம் போன்ற பகுதிகளில் சாராயத்தைக் கொடுத்து வாக்கு வாங்கிக் காட்டுவதாக சில கட்சிகள் பந்தயம் கட்டியிருக்கின்றன. அங்குள்ள மக்கள் அத்தனை இளக்காரமாகத் தெரிகிறார்கள் இக்கட்சிகளுக்கு!

கசிப்புக் குடித்துக் கொண்டிருக்கிறார்கள்; 'சீல்' சாராயம் கொடுக்கப்போகிறோம். தேர்தல் தினத்திற்கு முந்திய இரவு முதல் மறுநாள் காலைவரை குளிப்பாட்டல்தான்—என்கின்றனர்.

ஜனவரி 28இல் சாராய ஆறு யாழ்.குடாநாட்டில் பெருக்கெடுத்துப் பாயப்போகிறது.

குடாநாட்டில் சில பகுதிகளில் மதுப்பாவனைக்குத் தடை போட்டுள்ளனர் அங்குள்ள படை அதிகாரிகள். ஏனைய பகுதிகளிலும் தடைவந்தால் கூட, தங்கள் முகாமுக்குள் வைத்து பருகி மகிழக் கட்சிகள் முன்வரக்கூடும்.

வேட்டி, சேலைகள் போன்றவற்றை கொழும்பில் பல இலட்சங்களுக்கு கொள்வனவுசெய்து கொண்டு போயிருக்கிறார் தமிழ்க் கட்சிப் பிரமுகர் ஒருவர்.

யாழ்ப்பாணத்தவர்களை முன்னர் தென்னிலங்கை இனவாதிகள் 'பனங்கொட்டை' என்று கேலி செய்வர். அவர்களே இப்போது தமிழர்களைக் கண்டால் 'புலி...புலி' என்கிறார்கள்.

ஆனால் தமிழ்க்கட்சிகள் மட்டும் யாழ்ப்பாணத்தார் பனங்கொட்டைகள்தான். விலைக்கு வாங்கிவிடலாம் என நம்புகின்றன.

நம்பிக்கை பலிக்குமா? அல்லது புத்திசாலியான யாழ். குடிமகன் பெறுவதையெல்லாம் பெற்றுவிட்டு, கொடுப்பதையெல்லாம் வாங்கிவிட்டு, இறுதியில் எதிர்பாராத அதிர்ச்சியை தமிழ்க்கட்சிகளுக்கு தரப் போகிறானா பார்க்கலாம்.

—என்று தெரிவித்துள்ளது அப்பத்திரிகை.

தேர்தல் காலத்தில் நிலைமை எப்படியும் மாறலாம். தேர்தலில் பங்கு பற்றாத கட்சிகள், அமைப்புகள் கடைசி நேரத்தில் பகிஷ்கரிப்புக் கோரிக்கையை முன்வைக்கலாம்.

★ ★ ★

### புலிகள் விடயத்தில் தமிழ்க் கட்சிகளின் நிலைப்பாடு என்ன?

யாழ். உள்ளூராட்சித் தேர்தல்கள் தொடர்பாக தேர்தலில் போட்டியிடும் கட்சிகளின் மனநிலை என்னவென்பது தெரியாமல் குடாநாட்டு மக்கள் குழம்பிப் போயிருக்கின்றார்கள்.

தமிழரின் இனவிடுதலைப் போராட்டத்தில் இன்று அரசுப் படைகளுக்கு எதிராக ஆயுதம் ஏந்திப் போராடும் ஒரே சக்தியாக தமிழீழ விடுதலைப் புலிகளே விளங்குகின்றனர்.

அவர்கள் தொடர்பாக — இந்த கட்சிகளின் நிலைப்பாடு என்னவென்பது குடாநாட்டு மக்களுக்குத் தெளிவாகப் புரியவில்லை.

இக்கட்சிகளின் உறுப்பினர்கள் தமிழர் தாயகப் பிரதேசங்களில் அரசுப்படைகளுடன் சேர்ந்து ஆயுதம் ஏந்திப் புலிகளுக்கு எதிராகப் போராடுகின்றன; இது விடயத்தில் ஊர்காவல்படை போன்று — துணைப்படை மாதிரி — செயற்படும் இக்கட்சிகள், இச்செயற்பாட்டிற்காக அரசிடமிருந்து மாதாந்தம் பல லட்சம் ரூபாவை 'வேதனமாகப்' பெறுவதாகவும் தெரிகின்றது.

ஒரு புறத்தில் அரசுப் படைகளுடன் சேர்ந்து — ஆயுதம் ஏந்திப் போராடிக் கொண்டு — அரசிடமும் அதற்கு 'வேதனமும்' பெற்றுக் கொண்டு, மறுபுறத்தில் தேர்தல் களத்தில் வந்து குதித்திருக்கின்றன இக்கட்சிகள்.

புலிகளுக்கு மாற்றாக தமிழ் மக்கள், தமது சரியான தலைவர்களைத் தேர்ந்தெடுக்கவே இத்தேர்தல் என்கின்றது அரசு.

எனவே அந்தத் தலைமைத்துவத்துக்காகப் போட்டியிடும் தமிழ்க் கட்சிகள், இத்தகைய அரசியல் சூழ்நிலையில் — புலிகள் குறித்து தங்கள் நிலைப்பாட்டையும், செயற்பாட்டையும் பகிரங்கப்படுத்தி தமிழ் மக்கள் முன் வைக்க வேண்டியது அவசியமும், அத்தியாவசியமுமாகின்றது.

'அன்றாடப் பிரச்சினைக்குத் தீர்வு; உரிமைப் போருக்கு நிரந்தரத் தீர்வு'' 'தமிழர் தாயகம் பாதிப்பும் வேண்டாம்; பிரிப்பும் வேண்டாம்', 'உங்களுடன் உங்களுக்காவே'' 'அச்சமற்ற — பிச்சையற்ற வாழ்வு', 'தீர்வுத் திட்டமா? தீர்த்துக் கட்டும் திட்டமா?', 'உடனடியுத்த நிறுத்தம்; நிபந்தனையற்ற பேச்சுவார்த்தை; மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம்; நீதியான அரசியல் தீர்வு; நிரந்தர சமாதானம்' — இவ்வாறு மக்கள் கேட்டுப் புளித்துப் போன கோஷங்களை முன்வைத்திருக்கும் தமிழ்க் கட்சிகள் முக்கிய விவகாரத்தை தொட்டுப் பார்க்கவே இல்லை; தொட்டால் சுடும் என்பது அதற்குக் காரணமாக இருக்கலாம்.

போராட்டத்தில் முக்கிய பங்கு வகிப்பவர்கள் புலிகள். அவர்களுக்கு எதிராக பெரும்பாலான தமிழ்க் கட்சிகள் (இயக்கங்கள்) அரசுப்படைகளுடன் தோளில் கை போட்டு நிற்கின்றன. ஆனால் அந்த விடயத்தில் தங்களின் நிலைப்பாடு, செயற்பாடு என்னவென்பதை வெளிப்படுத்தாமல் அது விடயத்தை அமுக்கி வாசிக்கின்றன அக்கட்சிகள்.

★ புலிகள் எதிர்ப்பு விவகாரத்தில் தங்கள் நிலைப்பாடு என்ன?

★ தாங்கள் வைத்திருக்கும் ஆயுதங்கள், தங்கள் பாதுகாப்புக்கு மட்டுமா? அல்லது புலிகளைத் தேடிப் பிடித்து அழிக்கவுமா?

★ தங்கள் பாதுகாப்புக்கு மட்டுமே ஆயுதங்களை வைத்திருந்தால், அதற்கு எப்படி அரசிடமிருந்து இத்தனை எண்ணிக்கை ஆயுதங்களும், 'வேதனமும்' பெற முடியும்?

அரசிடமிருந்து எவ்வளவு வேதனம் பெறப்படுகின்றது? என்ன அடிப்படையில் அரசு அதனை வழங்குகின்றது?

— இத்தகைய கேள்விகளுக்கு தேர்தலில் நிற்கும் கட்சிகள் பதிலளிக்க வேண்டிய கடமை உண்டு.

இந்தக் கட்சிகள் ஆயுதக் குழுக்களாகவோ, இயக்கங்களாகவோ செயற்படும் காலத்தில் யாரும் இத்தகைய கேள்விகளுக்கு பதிலளிக்கும்படி அவற்றைக் கேட்கவில்லை; அப்படிக் கேட்பதிலும் நியாயமும் இருந்திருக்காது.

ஆனால் அவை இன்று ஜனநாயகம், தேர்தல், வாக்குச் சுதந்திரம் என்றெல்லாம் பேசிக் கொண்டு வாக்குக்கேட்டு மக்கள் முன்வந்து விட்டன.

மக்களிடம் வாக்குக் கேட்க வருபவர்களிடம், அவர்கள் போக்கு என்னவென்பதை கேட்கும் உரிமை, கடப்பாடு மக்களுக்கு இருக்கின்றது.

எனவே உள்ளூராட்சித் தேர்தல், நகர அபிவிருத்தி, தேர்தலின் பின் நாம் செய்யப்போகும் சமூக சேவைத் திட்டங்கள் போன்றவற்றை எல்லாம் பிரபலாபிக்க முன்னர்—

ஆயுதப் போராட்டம், அதை அடக்க அல்லது வளர்க்கத் தாங்கள் ஆற்றும் பணி, ஆயுதப் போராட்டத்தில் தங்களுக்கு நம்பிக்கை உள்ளதா? என்பன போன்ற அடிப்படை விவகாரங்களில் தங்களின் நிலைப்பாட்டை இக்கட்சிகள் முதலில் தெளிவுபடுத்த வேண்டும்; அப்படிச் செய்தால் அதன் பின்னர் குடாநாட்டு மக்கள் யாருக்கு வாக்களிப்பது என்பதை ஓரளவு தீர்மானிக்கக் கூடியதாக இருக்கும்.

குடாநாட்டுத் தேர்தலில் நிற்கும் கட்சிகள் எவையும் மக்களின் முன்னால், தங்களின் புலி எதிர்ப்புக் கோஷத்தை முன்வைக்க பின்னடிப்பதாகத் தெரிகின்றது. அதற்கு மூன்று காரணங்கள் இருக்கலாம்.

★ ஒன்று — புலிகளின் ஆயுதப் போராட்டம் நியாயமானது என அவர்கள் கருதியதாக இருக்கலாம்.

★ இரண்டு — தமது புலி எதிர்ப்பு நிலைப்பாட்டை அம்பலப்படுத்தினால் குடாநாட்டு மக்கள் தங்களைப் பொருட்டாகமதிப்பார்களோ என்ற அச்சம் காரணமாக இருக்கலாம்.

★ மூன்றாவது — உண்மையாகவே புலிகள் எதிர்ப்பு நிலைப்பாட்டை குடாநாட்டிலும் பிரசாரப்படுத்தி, இங்கும் புலிகளின் சீற்றத்துக்கு உள்ளாக அவை விரும்பாமல் இருக்கலாம்.

இந்த மூன்றில், புலிகள் எதிர்ப்பு நிலைப்பாட்டை ஏதேனும் ஒரு கட்சி அம்பலப் படுத்தாமல் அடக்கி வாசிப்பதற்கு முதலாவது விடயம் தான் காரணம் என்றால் —

அக்கட்சி இத்தேர்தலில் போட்டியிட்டிருக்கவே மாட்டாது. இத்தேர்தலை, அக்கட்சி பகிஷ்கரித்து, புலிகளின் ஆயுதப் போராட்டத்தை அதன் மூலம் வலுப்படுத்தியிருக்கும்; தேர்தலில் போட்டியிட்டு புலிகளின் ஆயுதப் போராட்டத்தை நலிவு படுத்த முனைந்திருக்காது.

இரண்டாவது விடயம் தான் காரணம் என்றால் இத்தேர்தலில் அக்கட்சி மக்களுக்கு முன்னாள் வேஷம் போடுகின்றன என ஆகிவிடும். தங்களின் புலிகள் எதிர்ப்புப் போக்கை வெளிக் காட்டாமல் — புலிகள் ஆதரவு வாக்கைத் திரட்ட முயலும் — இக்கட்சிகள் குறித்து குடாநாட்டு மக்கள் அவதானமாகவே இருப்பர்.

மூன்றாவது விடயம், புலிகள் மீதான உண்மையான அச்சம்தான் காரணம் என்றால் இக்கட்சிகள் தமது ஆயுதங்களை அரசாங்கத்திடம் மீள ஒப்படைத்து விட்டு, தமிழர் விடுதலை கூட்டணி போல மிதவாத அரசியலில் முற்றும் முழுதாகக் குதித்து விடலாம்.

இத்தகைய விடயங்களில் தேர்தலில் போட்டியிடும் தமிழ்க் கட்சிகளின் உண்மை நிலைப்பாடு என்ன?

ஈ. பி. டி. பி., ஈ.பி.ஆர். எல்.எவ்., புளொட், ரெலோ ஆகிய கட்சிகள் தங்கள் நிலைப்பாட்டை தெளிவு படுத்துவர் என மக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

ஆகையால் —

இத்தகைய விவகாரங்களில் தங்கள் கருத்தை இறுக்கமாகவும், சுருக்கமாகவும் வெளியிட்டால் அதனை மக்கள் முன் வைப்பதற்கு 'உதயன் — சஞ்சீவி' தயங்கமாட்டான் என்பதையும் குறிப்பிட விரும்புகின்றோம்.

யாழ். குடாநாட்டில்உள்ள தமிழ்க் கட்சிகள் (இயக்கங்கள்) குடாநாட்டில் தமது ஆயுத பலத்தை அதிகரிப்பதற்கு அரசாங்கம் அனுமதி அளித்திருப்பதாக கடந்த வாரத்தில் கொழும்புப் பத்திரிகைத் தகவல் ஒன்றை மேற்கோள்காட்டி உதயனில் செய்தி வெளியாகியிருந்தது.

அது தொடர்பாக ஈ. பி. ஆர். எல். எவ். அமைப்பு வெளியிட்ட அறிக்கை கடந்த வார சஞ்சீவியில் பிரசுரமாகியது. அந்த அறிக்கையில் ''எம்மைப் பொறுத்த வரை அவ்வாறு ஓர் இரும்புத்துண்டு கூட வழங்கப் படவில்லை; நாங்கள் கேட்கவுமில்லை; கேட்கவும் மாட்டோம்'' —என்று ஈ. பி. ஆர். எல். எவ். அமைப்பு குறிப்பிட்டிருந்தது.

அரசுப் படையினருடன் சேர்ந்து ஈ. பி. ஆர். எல். எவ்வின் உறுப்பினர்கள் செயற்படாமல் இருக்கலாம்; ஆனால் அரசினால் ஓர் இரும்புத் துண்டு கூட தங்களுக்கு வழங்கப்படவில்லை என்று ஈ. பி. ஆர். எல். எவ். அறிக்கையில் கூறப்பட்டது தவறே என்பதை அக்கட்சி வட்டாரங்கள் ஒப்புக்கொண்டன.

''குடாநாட்டில் — யாழ். ஆஸ்பத்திரி வீதியில்—நாம் திறந்துள்ள மத்திய பணிமனைக்குபாதுகாப்பு வழங்கு

(XI ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பருவ வயதுக்கு வந்த பெண்களும் பாலுணர்வு சார்ந்த பிரச்சினைகளும்

சுமார் ஐம்பது வருடங்களுக்கு முன்னர் பாலுணர்வு என்பது திருமணத்தின் மூலம் கட்டுப்படுத்தப்படுகின்ற ஒன்று என்று பெண்களுக்குக் கூறப்பட்டது.

ஆனால் இன்றோ, சராசரியாக ஒவ்வொரு பெண்ணும், இது சௌக்கியமான உடலில் ஏற்படும் பசிக்கு அன்போடுநிரப்பப்படும் ஆகாரம் மாத்திரமல்ல வாழ்வின் ஒரு பகுதியும் கூட என்றே எண்ணுமளவுக்கு நிலைமை மாறியிருக்கின்றது.

பருவவயதை அடைந்து கொண்டிருக்கும் பெண்கள், தாமே வகுத்துக் கொண்ட எண்ணங்களுடன் ஏதோ சுதந்திரத்தைத் தேடும் பறவைகளாகத் திரிய எத்தனிக்கின்றனர். இந்நிலைகளை அவர்களின் தாய்மாரோ பாட்டிமாரோ பெரும்பாலும் அவதானிப்பதில்லை.

சந்தேகங்கள்

'டீன் ஏஜ்' என்று குறிப்பிடப்படும் மங்கைப் பருவத்தை பெண்கள் அடையும்போது அவர்களின் அடிமனதில் எழும் வினாக்களுக்கு விடையளிப்பது கஷ்டமாயிருக்கும். சிலர் தமது தாய் தந்தையரிடமோ, அல்லது பாதுகாவலரிடமோ தயக்கத்துடன் சில கேள்விகளைக் கேட்டு சந்தேகத்தை நிவர்த்திக்க முயற்சிக்கின்றனர். ஆனால் அநேக பெற்றோர்கள் இதுபற்றி சரியான விடையளிக்கத் தவறுவது மாத்திரமன்றி பிள்ளைகளுடைய மனவோட்டத்தைப் பற்றி சிந்தியாது புரிந்து கொள்ளாது விலகி நின்றும் விடுகின்றனர். இதனால் சில பெண்கள் சில கேள்விகளைத் திரும்பத் திரும்ப தம்முள் கேட்டுக் குழப்பமடைகின்றனர் என்று ஓர் உளவியல் மருத்துவர் குறிப்பிடுகின்றார்.

பிள்ளைகள் இத்தகைய சந்தேக மனநிலையில் தத்தளிக்கும் போது பெற்றோர் அவர்களுடன் உடனிருந்து, அவர்களுடன் அன்பாக உரையாடி, அவர்கள் சந்தேகத்தைப் போக்கி, ஆதரவளிக்க வேண்டும்.

தமது பிள்ளைகளின் 'டீன் ஏஜ்' பருவத்தில் ஏற்படுகின்ற தவறான புரிந்துணர்வு அவர்களின் பிற்கால வாழ்வு முழுவதையுமே பாழாக்கிவிடும் என்பதைப் பெற்றோர் உணர்ந்து கொள்ள வேண்டும். அது அவர்களது கடமையும் கூட.

பருவவயதை எட்டிய ஆண்—பெண் இருபாலாருக்கிடையேயும் உடற் கூறிலும், உணர் வெழுச்சியிலும் பாரிய வேறுபாடுகள் உள்ளன.

பாலுணர்வானது ஆண்களுக்கு நெருக்கமான உணர்வலைகளோடு, தீவிரமாகவும் ஆழ்ந்தவேகத்துடனும் ஏற்படுகிறது. மலைஉச்சியில் இருந்து விழும் அருவிபோல இது உடனடி உந்தலாய் ஆண்களிடம் வெளிப்படுகின்றது.

அதேவேளை பெண்களுக்கு இது உடலுறுப்புகளின் மாறுபாடுகளை மெதுவாகவும், மூடப்பட்ட உணர்வுகளாகவும் உருவாகின்றது.

ஒரு சில ஆண்பெண்களுக்கு மாத்திரம் இதில் மாறுபாடு இருக்கலாம்,

பொதுவாககீழைத்தேசநாடுகளில் ஆண்கள் பாலுணர்வைப் பற்றிய விளக்கங்களை அறிந்து கொண்ட பின்பே பெண்கள் அறிந்து கொள்கிறார்கள். இங்கு பருவவயது ஆணும் பெண்ணும் ஒருவரை ஒருவர் சந்திக்கும் போது பெண் குழப்பமடைவது மாத்திரமல்ல, பிந்தித்தான் தனது சந்தேகங்களுக்கு உரியவிடையையும் அறிந்து கொள்கிறாள். இந்த உளவியல் உண்மையினை ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

பருவவயது ஆண்கள் தம்மை ஒத்தஎதிர்ப்பாலாரினரைக் கண்டவுடன் கேலிவிடுவது சகஜம். இது இயற்கையானதும் கூட. மங்கைப் பருவப்பெண்களை அவர்கள் தொடரும்போது தம்மை அவர்கள் இழிவுபடுத்துவதாகச் சில பெண்கள் கருதமுற்படுகிறன்றனர்.

பெண்களுக்கு உணர்வலைகள் மெல்ல மெல்லத்தான் உதயமாகின்றன. ஆண்களின் அவசர உணர்வுகளுக்கு மாறாக பெண்மையின் ஆறுதலான போக்கு அமைந்திருப்பது ஒருவழியில் பெண்களுக்கு பாதுகாப்பையளிக்கும் விடயமாகும். இது இயற்கையின் ஏற்பாடும் கூட.

எனினும் சில பெண்கள் அவசரப்பட்டு, உணர்ச்சிகளின் உந்தல்களுக்கு உட்பட்டு, மடந்தைப் பருவத்தில் மனதை அலைபாய விட்டு ஈற்றில் வருந்த வேண்டிய கட்டங்களுக்கு உட்படுகின்றனர்.

இப்படியான பெண்களிடம் பெற்றோர்கள் தீவிர கவனம் செலுத்துவது அவசியம். பெண் பிள்ளைகளின் வளர்பருவ காலத்திலிருந்தே அவர்களின் நடவடிக்கைகளை உற்று அவதானிப்பின் மடந்தைப் பருவத்தில் தீமைகள் ஏற்படுவதைத் தவிர்க்கலாம்.

சில திருமணமாகாத பங்கையருடன் உரையாடியபோது அதில் ஒருசிலர் தாம் மடந்தைப் பருவ வயதில் உள்ளத்தினாலும், உடலினாலும் தூய்மையினை இழந்ததாக மனந்திறந்தே குறைப்பட்டுக் கொண்டனர். சிலர் ஆரம்ப கட்டத்திலும், சிலரோ பல தடவைகளிலும் இந்நிலை சம்பவித்ததாகக் கூறினார்கள். அவை யாவும் 'காதல்' என்ற அடிப்படையில் முலாம் பூசிய உணர்வுகளால் ஏற்பட்டவை என்பதையும் அவர்கள் ஒப்புக் கொண்டனர்.

துர்ப் போதனைகளாலும், சில 'டீன் ஏஜ்' மடந்தைகள் மருட்டப்படுகின்றனர். அவளை அடையும் வரைக்குமோ, அல்லது தனது இணக்க நிலைக்கு உட்படுத்தப்படும் வரைக்குமோ துரத்திக் கொள்ளும் சில ஆண்கள் திடீரென திசைமாறிப் போவதை அவதானிக்க முடிகிறது. எதையுமே பின் முன் யோசியாமல் தனது மனப்பாதையே சரியென சில பெண்கள் தமக்குள் நினைத்துக்கொள்வதும், அதையே முரட்டுப் பிடியாகக் கைக்கொள்வதுமே இந்த விழுக்காட்டுக்குக் காரணமாகிறது. அளவுக்கதிகமாக சுதந்திரமாகவோ, அளவுக்கதிகமாக அடக்குமுறையாகவோ வளர்க்கப்படும் பெண்களிலேயே இத்தன்மை காணப்படுவதாக அபிப்பிராயப்படுகின்றனர் உளவியலாளர்கள். ஒரு பெண் கண்ணியமாகவும் அதே நேரத்தில் தந்திரமாகவும் தன்னைக் காப்பாற்றத் தெரியவேண்டும். இது அவளின் திறமை, மனக்கட்டுப்பாடு ஆகியவற்றில் கூடத் தங்கியுள்ளது.

செல்லமான வளர்ப்பு

சில பெண்களைத் தீவிர செல்லமாகவும், வரட்டுப் பெருமையுடனும் பெற்றோர்கள் வளர்ப்பதனால் அவர்களின் பிற்கால வாழ்வு வழியில்லாத இடத்தில் வாகனம் ஓடுவது போலாகிவிடுகிறது.

ஒரு பெண் அடிக்கடி அன்று சொன்ன வார்த்தைகள் இப்பொழுது நினைவுக்குவருகின்றன. "என்னைப் பெற்றோர் நல்ல செல்லமாக வளர்த்தது மாத்திரமன்றி என் மனம் போன போக்கிற்கெல்லாம் இணக்கமான முறையில் வளர்த்தனர். இதனால் காலமாற்றத்தின் பின்பு ஏற்படும் வாழ்வுச் சுமைகளை ஜீரணிப்பது என்னால் மிக மிக கஷ்டமாயிருக்கிறது" என்று புலம்பினாள் அப்பெண்.

சில பெண்களுக்குப் பெற்றோர்கள் மாத்திரமல்ல நெருங்கிய உறவினர்களும் கூட அதிக 'செல்லம்' கொடுத்து வருவதினால் பிற்கால வாழ்வு பாதிப்படைகிறது. அதிக 'செல்லம்' ஆபத்தானது.

எனக்கு தெரிந்த ஒரு பதினைந்து வயதுப் பருவப் பெண்ணுக்கு இரண்டு சிறிய தாய்மார் மாறி மாறி உணவூட்டிக் கொண்டிருப்பதைப் அவதானித்தேன். அவள் சாப்பிடும் போது ஏதோ பறிகொடுத்து ஏங்குவது போலும் கற்பனையில் மிதப்பதும் போலவும் தென்பட்டாள். சாதாரணமாக மற்றப்பிள்ளைகளிடம் காணப்படும் உடல் வனப்பைக்கூட அவள் பிரதிபலிக்கவில்லை. ஒரு வண்டிலை இருபுறமும் ஒரே நேரத்தில் பிடித்திழுத்தால் ஏற்படும் நிலை போன்றதே அவளின் நிலையும்.

சாதாரணமாக 'டீன்ஏஜ்' பெண்கள் தமது அன்னியோன்னிய உறவையோ, இரகசியங்களையோ, அல்லது ஆழமான விருப்பையோ ஒருவருடன் தான் பகிர்ந்து கொள்ளவே விரும்புகிறாள். அந்த ஒருவர் தாயாகவோ, சகோதரியாகவோ, அல்லது சிநேகிதியாகவோ இருக்கலாம். ஆனால் ஆலோசகர் நல்லவராயிருக்க வேண்டும். அப்பொழுதுதான் அப்பெண்ணின் எதிர்காலமும் சிறக்கும்; நல்வாழ்வு மலரும்.

## கே. எஸ். ஞானமூர்த்தி

சில பெண்கள் ஓர் ஆணைக் கண்டவுடன், பெருமை பிடித்தவர்களாகவும், செல்லமாகவும், தமக்குள்ளே நினைத்து நடக்கிறார்கள். கண்ணியமற்ற வாலிபர்களைக் கண்டவுடன் இவ்வுணர்வு ஏற்படுவதாக சொல்லப்படுகிறது. ஆணுக்கோ, பெண்ணுக்கோ இச்சடுதி மாற்றம் ஏற்பட்டால் அவர்களுக்கு உடல் பலவீனத்தோடு இணைந்த தாக்கமும், மன உளைச்சலும், திருமணத்தின்பின்பு ஏற்படுவதாக உளவியல் மருத்துவர்கள் கூறுகின்றனர்.

இவ்வாய்வுக்கும் மத்தியில் பருவகாலத்துக்கு முந்திய திருமணங்களும், சட்டபூர்வமற்ற கருச்சிதைவுகளும், திருமணமாகாமலே பிள்ளைகள் பிறப்பதும் நாளுக்கு நாள் பெருகி வந்து கொண்டிருக்கிறதே! ஏன்?

பருவ வயதை அடைந்திட்ட ஆண்களில் பெரும்பாலோர் எதிர்ப்பாலாரினருடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ள வேகமாகச் செயற்படுகின்றனர். ஒருத்தியுடனேயோ, அல்லது பலரிடமோ தோல்வியுற்றாலும் கூட தொடர்ந்து விடா முயற்சியுடன் புதுமலர்களைத் தேடிப்பறக்கத் தொடங்கி விடுகின்றனர்; சிலருக்கு தோல்விகளே வேகங்களை கொடுத்துவிடுகின்றன. இதற்கு இயற்கையும், உலகமும் சார்பாகவே அமைந்து விடுகின்றன.

ஆனால் பெண்களைப் பொறுத்தவரையில் அப்படியல்ல. அவர்களில் சிலரோ ஆரம்பத் தோல்வியினை இறுதி மூச்சுவரை சுவாசித்துக் கொண்டிருக்கின்றனர், ஆண்கள் விளையாட்டாகப் போடுகின்ற முடிச்சுக்களை அவிழ்ப்பதற்கே வகை தெரியாமல் வருந்திக் கொண்டிருக்கும் பெண்களைச் சந்தித்தபோதே இந்த உண்மை தெரியவந்தது.

நான் இத்தகைய இருவரை தனித்தனியே சந்தித்து அளவளாவிய போது, இருவரது திசைகளும் வேறாகவே இருந்ததை அறிய முடிந்தது. ஒரு சிறிய சலனத்தால் ஏற்பட்ட முடிச்சு அவர்களை அந்நிலைக்குக் கொண்டு போய்

(X ஆம் பக்கம் பார்க்க)

# மொழி கடந்து இணையும் மரபுச் சொற்றொடர்கள்!

மரபுச்சொற்றொடர் ஒன்றை நாம் எடுத்துநோக்கினால் அது யாதாயினும் ஒரு மொழியிலும் சிறப்பம்சமான கூற்றாக இருப்பதை உணரலாம்.

மரபுச்சொற்றொடர் ஒன்றானது வெளிப்படைப் பொருள், குறிப்புப் பொருள் என இருவேறு கருத்துக்களை உணர்த்தி நிற்கும். உதாரணமாக "மல்லுக்கட்டுதல்" என்ற மரபுச் சொல்லை எடுத்துக்கொள்வோம். இதன்வெளிப்படைப் பொருளானது மல்யுத்தத்தில் ஈடுபடும் இருவர் ஒருவரை ஒருவர் வெல்வதற்காக முட்டி மோதி, கட்டிப் புரண்டு, பூட்டுக்கள்போட்டு, மூர்க்கத்தனமான சண்டையிடுதல் என்பதாகும். இதன் குறிப்புப்பொருளானது ஏதாவது ஒரு காரியத்தைச் சாதிப்பதற்காகக் கஷ்டப்பட்டுப் போராடுதல் என்பதாகும். "அவன் வறுமையோடு மல்லுக்கட்டினான்" என்றால் அதன் குறிப்புப் பொருளானது அவன் வாழ்க்கையில் வறுமையை எதிர்த்து கஷ்டப்பட்டுப்போராடினான் என்பதாகும்.

காலங்காலமாக மக்களின் பேச்சுவழக்கில் இடம்பெற்று வந்தமையால் காலப்போக்கில் இவற்றின் வெளிப்படைப் பொருள் மங்கி குறிப்புப் பொருள் மட்டுமே பொருளாகக் கொள்ளப்படுகின்றது. இக்குறிப்புப் பொருளை தமிழில் "இலங்கணை" எனவும் ஆங்கிலத்தில் 'IDIOM' எனவும் அழைப்பர். மேலேயுள்ள "மல்லுக்கட்டுதல்" என்ற மரபுச் சொல்லுக்குச் சமானமான ஆங்கிலப்பதமும் உண்டு. அதாவது "அவன் வறுமையோடு மல்லுக்கட்டினான்" என்பதற்கு He wrestled with his poverty என்பதாகும். இனி ஆகிலத்தில் ஓர் உதாரணத்தை எடுத்துக் கொள்வோம். Children fly home at two p.m. இங்கு fly—பறக்கிறார்கள் என்ற சொல்லின் வெளிப்படைப் பொருளுக்கு அர்த்தமில்லை. ஏனெனில் இறக்கைகள் இல்லாத பிள்ளைகள்எப்படிப் பறக்கமுடியும்? எனவே இங்கு fly—பறக்கிறார்கள் என்பதற்குகுறிப்புப்பொருள் மட்டுமே இருக்முடியும். அதாவது "விரைந்து செல்கிறார்கள்" என்பதே அதன் குறிப்புப் பொருளாகும்.

## வதிரி மண்வாசன்

எனவே குறிப்புப் பொருளொன்றை உணர்த்துகின்ற ஒரு சொற்கூட்டமே "மரபுச் சொற்றொடர்" எனப்படும். அதை ஆங்கிலத்தில் IDIOMATIC PHRASE என அழைப்பர்.

மரபுச் சொற்றொடர்கள் ஒரு மொழியின் இலக்கிய வளத்துக்கு அழகு சேர்க்கின்றன. அவை அம்மொழியைப் பேசும் மக்களின் கலை, கலாசார, பண்பாட்டு விழுமியங்களையும் நடத்தை, குணவியல்பு போன்ற அம்சங்களையும் வெளிப்படுத்தி நிற்கின்றன. இம்மரபுச் சொற்றொடர்கள் பொதுவாக எல்லா மொழிகளிலும் புரையோடிக் காணப்படுகின்ற போதிலும் ஆங்கில—தமிழ் மரபுச்சொற்றொடர்களுக்கிடையே பல அதிசயிக்கத்தக்க கருத்தொற்றுமைகள் இருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

எமது முன்னாள் தமிழறிஞர்கள் பலர் இம்மரபுச் சொற்றொடர்களுக்கிடையேயான கருத்தொற்றுமைகளை ஒப்பீட்டு ரீதியாகக் கற்றுத்தேறி, அழகு தமிழிலும் ஆங்கிலக் கல்வியிலும் சிறந்த தேர்ச்சியடைந்துள்ளார்கள். அவர்களது அந்த ஒப்பீட்டு ரீதியான மொழித்தேர்ச்சியே தாய்மொழிச் சிந்தனைகளை இலகுவாக ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து அந்நியர்களோடு நேருக்கு நேர் நின்று நெஞ்சை நிமிர்த்தி வாதாடி நாட்டுக்குச் சுதந்திரத்தை (கொள்கையளவில்) பெற்றுத்தர உதவியது.

எமது நாட்டைப் பொறுத்தவரை முன்னாள் தமிழறிஞரும் சட்டமேதையுமாகிய திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் நீதிமன்ற வாதங்களின் போது ஆங்கில—தமிழ் மரபுச் சொற்றொடர்களையும் பயன்படுத்தி எதிரிகளைத் திணறடிப்பதில் வல்லவராகத் திகழ்ந்தார். அண்மையில் அமரரான முன்னாள் காலித்தொகுதி நாடாளுமன்ற உறுப்பினரான தஹநாயக்காவும் நாடாளுமன்ற விவாதங்களின் போது ஆங்கில மரபுச் சொற்றொடர்களையும் கவிதை வரிகளையும் பிரயோகித்து எதிரிகளின் வாதங்களை முறியடிப்பதில் மகா சூரராகத் திகழ்ந்தார்.

தமிழ் நாட்டைப் பொறுத்தவரை பேரறிஞர் அண்ணாத்துரை இத்துறையில் அபார திறமையுடையவர். எதிரியுடன் வாதிடும் போது பொருத்தமான சந்தர்ப்பத்தில் பொருத்தமான மரபுச் சொற்றொடரைப்

(X ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவப்புத் துளிகள்

சாதாரணமாய்ப் பார்த்தால் நான் ஒரு சிறிய ஜந்து. அற்பமான ஆயுளில் மடிந்து போகும் ஒரு ஜீவன். என்னை நீங்கள் அறிந்திருப்பீர்கள். அது ஒன்றும் அவ்வளவு கடினமான விஷயமல்ல. அற்பமான நுளம்புதான் நான். ஆனால் எனக்குள்ளும் ஓர் அற்புதமான உண்மை பொதிந்திருக்கிறது. அதுதான் எனக்கும் உயிர் இருக்கின்றது என்பது. இது ரொம்ப சாதாரணமான உண்மை போல் உங்களுக்குத் தோன்றலாம். ஆனால் உயிர் எவ்வளவு பெரிய விஷயம் தெரியுமா? அதை நான் ஒவ்வொரு கணப்பொழுதிலும் உணர்ந்திருக்கிறேன். என்னுடைய உணவுக்காகத்தான் நான் அலைய வேண்டியிருக்கிறது. உணவு இல்லாவிட்டால் உயிர் வாழவும் முடியுமா? ஆனால் என்னுடைய உயிரைத் தக்கவைக்கவென்று நான் உணவு தேடிப் போகுமிடமெல்லாம் என்னுடைய உயிருக்கு ஆபத்துத்தான் காத்திருக்கிறது. நிமிஷ நேரப் போராட்டங்களில் எனக்காகிய ஆகாரத்தையும் எடுத்துக் கொண்டு உயிர் தப்பி வருவதென்பது அவ்வளவு இலேசான காரியமா? பயங்கரமாக அழுத்தும் யமனின் பிடியில் நான் எப்படி நசுங்குவேனோ என்று பயமாயிருக்கிறது.

என் ஆகாரத்தைப் பற்றிக் கேட்கின்றீர்களா? மனிதர்களிடமிருந்து தான் எனக்கான ஆகாரம் கிடைக்கிறது. ஆகா... இரத்தம் எவ்வளவு சுவையானது — அவர்களுடைய மதுவைப் போல...?

ஆனால் பாருங்கள் இந்த மனிதர்களெல்லாம் எவ்வளவு குறுக்கு வழிகளில் தம் சட்டைப்பைகளை நிரப்பிக் கொள்கிறார்கள். என்னுடைய பசிக்குக் கொஞ்சம் இரத்தத்தைத் தானம் பண்ணினால் என்னவாம்? ஏதோ உயிரே போய்விட்டது போல் கத்துகிறார்கள். புகை, புகையாய்ச் சுருள்களையும், உருண்டை, உருண்டையாய் வேப்பங்கொட்டைகளையும் புகைக்க வைத்து என்னைத் திணற அடிக்கின்றார்கள். இந்தச் சித்திரவதைகளெல்லாம் ஏன்...? பேசாமல் ஓர் அடியிலேயே உயிரைப்பறித்து விடலாமே? ஆனால் இந்த உயிர் மிகப்பெரிய விஷயம். அதன் மேல் இவ்வளவு ஆசை இருப்பதால்தானே நானும் இந்தச்சித்திரவதைகளையும், தாங்கிக் கொண்டு சிக்கல்களுக்குள்ளும் வாழ முடிகின்றது.

மனிதர்கள் எல்லோருக்குமே எவ்வளவு வேறுபட்ட குணாதியசங்கள்? ஆனால் எனக்கென்றால் எல்லோருடைய இரத்தமும் ஒரே சுவையாய்த் தானிருக்கிறது. அதன் நிறம் கூட சிவப்புத்தான். யாரைக் கடித்தாலும் (மன்னிக்கவும், நான் வேண்டுமென்று கடிப்பதில்லை; பசியினாற்றான் கடிக்கிறேன்) ஒரே மாதிரித்தான் இருக்கிறது. இப்போதெல்லாம் எல்லாரும் மிகுந்த எச்சரிக்கையோடு இருக்கின்றார்கள். மழைகாலமென்பதால் முதலிலேயே எனக்கெதிரான தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு விட்டார்கள். வீடுகளெல்லாம் இருட்டுமுன்பே இறுகத் தாளிடப்பட்டு ஜன்னல்கள் கூட அடித்துச் சாத்தப்பட்டு விடும். ஆனால் இவை எனக்கெதிராக மட்டும் செய்யப்படும் விஷயங்களில்லை என்பது எனக்குத் தெரியும். பெரும்பாலான குடி மக்களின் வீடுகள் எனது பிறப்புக்கு முன்பே கூட இப்படி இறுகப் பூட்டப்பட்டுத்தான் வந்தன. ஏனெனில் சாக்கடைச் சிரட்டைக்குள் நான் குடம்பியாய் அவதரிக்கும் முன்பேயே நடைமுறை இப்படியிருந்ததாய் என் பாட்டனார் சொல்லியதால் நம்மை விட வேறெவற்றின் மீதோ அவர்கள் அதிக எச்சரிக்கை உணர்வை வளர்த்துக் கொண்டிருக்க வேண்டுமென்று நான் உணர்ந்திருந்தேன்.

நானும்கூட, வரவர என் எதிர்ப்புச் சக்தியை அதிகமாகக் காட்டிக்கொண்டு வருகிறேன். எல்லாப்பிரச்சினைகளுக்கும் முகம் கொடுக்கப் பழகுகிறேன். மூச்சைத்திணற அடிக்கும் பயங்கர நச்சுப் புகை நாற்றத்தினூடும் என் ஆகாரத்தைத் தேடவேண்டிய கட்டாயம் எனக்கு இருக்கிறது. ஏனென்றால் நான் உயிர் வாழ வேண்டும்; சுற்றம் சூழலுடன் இணைந்து நானும் என் ஆயுள் தீரும் வரை வாழ்ந்தாக வேண்டும்.

எத்தனையோ பேரிடம் நான் ஆகாரத்துக்குப் போய் வந்த போதிலும் மூன்றே மூன்று பேரிடம் மட்டும் எனக்கு அலாதியான பிரியம் உண்டு. அவர்கள் செயற்கையாக எந்தப் புகையையும் கொண்டு வந்து என் மேல் பாய்ச்சுவதில்லை. கையினாலேயே விரட்டுவார்கள். அந்த மாதிரி நேரங்களில் அவர்களோடு சற்றே காதுக்குள் பாட்டுப் பாடி, அவர்களைக் கோபத்தில் கத்த வைத்து, பறந்து விளையாடி கண்ணா மூச்சியாடுவதில் எனக்கு மிகுந்த விருப்பம். மூன்று பேரும் ஏதேதோ பாஷையில் சத்தம் போடுவார்கள், இரண்டு பேர் ஒரே பாஷை; மற்றவன் இன்னொருமொழி.

ஆனால் மொழிகள் வேறுபட்டாலும் என்னை எதிர்ப்பதில் மட்டும் மூன்று பேரும் ஒரே குறியாய் இருப்பார்கள். ஆனால் அவர்களின் இரத்தம் என்னவோ ஒரே மாதிரித்தானே இருக்கப் போகிறது?

அதற்குள் பசி தொடங்கி விட்டது. சரி இப்போது எங்கே போகலாம்? அந்த மூன்று பேரில் என்னிடம் இப்போது மாட்டப்போகிறவன் யார்...? எங்காவது போவோம்! வழியில் வருகின்றவனிடம் ஒட்டிக் கொள்வோம்.

★ ★ ★

சீ.........இந்த அடையாள அட்டை காவுறவேலைபெரிய கரைச்சல். பேசாமல் எங்கையாலும் வெளிநாடு போனாலும் கரைச்சல் இல்லை. அம்மாவுந்தான் திருப்பித்திருப்பிச் சொல்லுறா. அதுக்கும் வசதி வாய்க்கவேண்டாமே? இவ்வளவு கொண்டா, அவ்வளவு கொண்டா எண்டு கேட்டால் போகவும் மனம்வருமே? ஏற்கனவே கழுத்திலை கிடந்த நகை நட்டுகளைச் சுட்டுவித்து அண்ணனை அனுப்பியாச்சு. எப்பிடியும்அண்ணை அங்கை ஒருநிலையை எடுத்த பிறகு போறதுதான் நல்லம். அதுவரைக்கும்...ஓ அதுவரைக்கும் இஞ்சை நிக்கிறதென்ன கசக்குதே யெனக்கு...?இவ்வளவு நாளும் கிரிக்கெட் 'பட்' காவிக் கொண்டு பொடியளோடை திரிஞ்சவன்தான் நானும்.

எங்கையேன் அடிபட்டிட்டு எங்களைப் பிடிச்சு 'றவுண்ட் அப்' 'செக்கிங்' எண்டு கொண்டு போய் 'வாட்டிப் போட்டு' விட்டதாலை தானே எனக்கும் வெளிநாடு போற ஐடியா வந்தது?

இரும்புக்கம்பிகளையும் சப்பாத்துக்கால்களின்ரை மகிமையையும் இந்த உயிர் போறவரைக்கும் இனிமறக்க ஏலுமே...?

ஆனா, புழுதி பறக்கிற மைதானத்திலை ஆரவாரத்தோடை நாங்கள் விளையாடுற கிரிக்கெட்......இதையும் பிரிஞ்சுதானாகவேணுமெண்ட கவலை தான்.

சரி. கிடக்கட்டுக்கு மெல்லாம். இப்ப நான் அவசரமாகப் போகவேண்டிக் கிடக்கு. எங்கைபோட்டுது என்ரை அடையாள அட்டை......?

''அம்மா...எங்கை என்ரை அடையாள அட்டை...?''

அம்மா...போட்டா வேலிப் பொட்டுக்குள்ளாலை ஊர்ப் புதினம் கதைக்கிறதுக்கு. இருக்கட்டும்... அட....இஞ்சை கிடக்குது. நான் தான் வெள்ளண மேசையிலை வச்சிட்டு மறந்துபோனன்.

''அம்மா! நான் ஒருக்கா திவாகரன் வீட்டை போட்டு வாறனம்மா. அடுத்த மட்ச் எப்பவெண்டு விசாரிச்சுக் கொண்டு வாறன்.''

அம்மாவுக்கினிக் காதுகேக்காது. இனி என்னாலை எட்டு வீடு கேக்கக் கத்தவுமேலாது. உதிலை கிட்டத்தானை போறன். பேசாமல்போகவேண்டியதுதான்.

## அனுபவக் கதை

அந்தவேம்படிச் சந்திதான் கொஞ்சம் ஆபத்தானஇடம். 'ஆக்கள்' வந்து உலாவிப் போகினம் எண்டு கதை.

ஆனா, அதை விட்டாப் போறதுக்கும் வேறை வழியில்லை. நானும் ஆகப் பயங்கொள்ளியாய் இருக்கக் கூடாது. கையிலை அடையாள அட்டைகிடக்கு பேந்தென்ன? ஆனாலும் என்ரை கறுப்பு நிறத்தைப் பார்த்திட்டு. எக்கச்சக்கமா நினைச்சு ஏத்திக்கொண்டு போடுவாங்கள். போன முறையும் அதுதானே நடந்தது. நான் என்ன செய்யட்டும்? என்ரை கறுப்பு நிறத்துக்கு...மாவை அள்ளிப் பூசவேண்டியதுதான்.

ஆ...ஐயோ... ஹலோ நுளம்பு மச்சான்! வாரும் வாரும், உம்மைத்தான் காணேல்லையெண்டுநினைச்சனாக்கும். அதுக்கிடையிலை வந்திட்டீர். சூ...... என்ன கடியடாப்பா கடிக்கிறாய். பார் அடிக்கிற அடியிலை நசிஞ்சுபோய்கிடக்கிறியோவெண்டு...சட்...

என்ன? என்னோடை விளையாடுறீரோ..., பாட்டு வேறை...உம்மட ராகத்தை எங்கையாவது கொண்டு போய்க் கொட்டும். உதுகள் கேக்கிறதிலையிலை நான் இல்லை. சரி போகப் போறீரோ...போட்டுவாரும். நானும் போகவேணும் திவாகரிட்டை....

ம்...போட்டுது. இந்த நுளம்புகளாலையும் பெரிய கரைச்சல், நான் வெளிநாடு போனால் அங்கை வராதுகள் தானே நுளம்புகள். ஆனா நான் போறதுவேறை. அதுவரைக்கும் இஞ்சை நுளம்புகடிக்காமல் பார்க்க வேணும். பிறகு நானென்ன மலேரியாவோடையே அங்கை போறது...?

பறவாயில்லை றோட்டிலை இண்டைக்குச் சனம் கூடத்தான் போகுது. எப்பிடியும் அடுத்த மட்சிலை...சீ...ஊர் போற போக்குக்கு எனக்கு மட்ச் ஒரு கேடோ? கிடக்கட்டும் சும்மாதானும் திவாகரைப் பார்த்திட்டு வருவம். அந்த செக்கிங் பொயின்ரிலை இப்ப உள்ளவர்கள் எப்பிடிப்பட்டவன்களோ? எந்த இடத்திலை போய் வளமா மாட்டுப்படுறேனோ தெரியாது. ஆனா நான் ஏன் பயப்பிடவேணும்...? என் [illegible] நேரம்...ஓ......நான் கறுப்பு... கரிக்கறுப்பு...அவங்கள் சந்தேகப்படக்கூடிய கறுப்பு... ஆனால் எனக்கும் அவங்களைப் போலை சிவப்பு இரத்தம் தானை?

★ ★ ★

முதல் ஆளுக்குஇன்றைக்கு ஏதோ மனம் சரியில்லைப் போலிருக்கிறது. போவதற்கு முன்பே கையை ஓங்கிட்டார். ஏதோ தாகம் மட்டும் தீர்ந்தது. இனி என்ன செய்வது? அடுத்தவரையும் கொஞ்சம் எட்டிப்பார்ப்போம். ஒருவனில்லாவிட்டால் இன்னொருவன் மனிதர்களுக்குப் பஞ்சமா இங்கே?

★ ★ ★

எப்பிடியும், இண்டைக்கு 'அண்ணன்' சொன்ன அலுவலை முடிச்சிட வேணும். பொக்கற்றுக்கை 'அது' கவனமாகக் கிடக்குது. மெல்ல வசதி பாத்து 'கிளிப்பை'க் கழட்டி எறிஞ்சு போட்டு ஓடி வந்திட வேணும். கன பேர் நிக்கிற நேரம் பாத்து எறியவேணும். இதுக்குள்ளாலை வந்து சேர நான் பட்டபாடு இருக்கே அவ்வளவு கஷ்டத்துக்கும் பலனா இந்தக் காரியம் வெற்றியாய் முடிஞ்சா... அண்ணனுக்கு எவ்வளவு சந்தோசம்? அண்ணனுக்கேன்... எனக்கும் தான் எவ்வளவு பெரிய புளுகம்! இவங்கள் தானை எங்கட 'சீலனை'முடிச்சவங்கள். கண்ணனின்ரை காலை முறிச்சவங்கள். இதெல்லாத்துக்கும் மொத்தப்பழிஎன்ரை பொக்கற்றுக்கை கிடக்குது. எமன்...எந்த வழியிலையும் வரலாம். டேய்...உங்களுக்கு எமன் என்ரை பொக்கற்றுக்குள்ளாலை வாறானடா!

**-தாட்சாயணி-**

அதுக்கு முதல் நான் சில வேளை பிடிபட்டால்...... இல்லை. நான் பிடிபடவே போறதில்லை. எவ்வளவு நிதானமாய் கவனத்தோடை ஒரு சின்னப் பிடிகூட விட்டுக் குடுக்காமல் இதுக்குள்ளாலை இவ்வளவு தூரம் வந்திட்டன். இனியென்னெண்டு பிடிபடுகிறது? அப்பிடிப்பிடிபடுறதெண்டாலும் பொக்கற்றுக்கை உள்ளதை எறிஞ்ச பிற்குதான் பிடிபடுவன். எப்படியாவது ஓடித்தப்ப வேண்டியது. இல்லாட்டிச் சூடுபட வேண்டியதுதான். உவங்களிட்டைப் பிடிபடுறதைவிட அது எவ்வளவோ மேல்....

இதிலை வெற்றி கிடைச்சா பிறகு மெல்ல அடுத்த திட்டத்தைத் தொடங்க வேண்டியதுதான். அங்காலை இப்ப நிலைமை என்ன மாதிரியோ தெரியாது. நான் இஞ்சை செத்துப் போனாலும் அங்கை எப்படியும் விஷயம் அறிஞ்சிடுவினை. விஜிக்குட்டிக்கு வரேக்கை கூடச் சரியாச் சொல்லேலாமல் போட்டுது. அதுதான் பெரிய கவலை. தம்பிகள், அவங்களுக்குப் படிப்பும் இல்லாமல் ஒண்டும் இல்லாமப் போய் என்ன செய்யிறதெண்டே தெரியாமல் திரியுறாங்கள். எவ்வளவு கெட்டிக்காரப் பெடியங்கள். படிப்பை இழந்து போய்...

அப்பா! இப்பவும் என்னைத் திட்டிக் கொண்டு தான் இருப்பார். திட்டட்டுக்கும். எங்கட பிரச்சினை அவருக்கெங்கே விளங்கப் போகுது? குட்டக்குட்டக் குனியுற பரம்பரையாயிருந்தாச் சரியே!

அங்கை பார்... வீடெல்லாம் 'லைற்' எரியுது. இனி கொஞ்ச நேரத்திலை ரி.வி.க்கு முன்னாலை சனங்கள் இருந்திடுங்கள். அதுக்குப் பிறகு எல்லாத்தையுமே மறந்துபோய் கனவு லோகத்துக்குப் போய் வருங்கள்.

இந்தச் சனங்களுக்கு ஞாபகமே இல்லையோ? கடந்த காலமெண்டு ஒண்டு இருந்ததும், இருட்டோடை இருட்டாத் தாங்கள் பட்ட கஷ்டமும் தினம் தினம் குண்டுக்கும், ஷெல்லுக்கும் அஞ்சி வாழ்ந்ததும் அதுக்காகக் கனபேர் உயிரைக் குடுத்ததும்... சேச்சே... சனம் நல்லாவே மாறிப் போச்சு. எல்லாத்தையும் மறந்து கனவுக்குள்ளை மூழ்கிப்போச்சு. எங்கட தியாகம், அர்ப்பணிப்பு எல்லாத்துக்குமான பெறுமதி என்ன...? எல்லாமே ஒரு மாயையாய்... இதுக்கெல்லாம் அர்த்தமேயில்லாதது போலை...

இந்தச் சனங்கள், ஆட்டுவிக்கிறவர் கையிலை ஆடுற பொம்மைகள். கொஞ்சம் வசதிகளைக் குடுத்தவுடனை அதுவே சொர்க்கம் மாதிரி இருக்குதுகள். ஒரு அடி விழுந்தால் தான் தெரியும்?

ம்... நேரம் நல்ல நேரம் போலை கிடக்கு. மம்மல் நேரம். சனப்புழக்கம் கூட. அவங்களும் கொஞ்சம் கூடுதலாத்தான் நிக்கிறாங்கள். பொக்கற்றுக்கை 'அது' பத்திரமாத்தான் கிடக்கு. எடுத்து எறிவமே...

ஐயோ... இந்த நுளம்புக்கு வேறை நேரம் கிடைக்கேல்லையே... கையிலை ஏறிக் குத்துது. போடாப்பா... போ... போட்டுப் பேந்து வா. நல்லா விருந்து வைக்கிறன்... என்ன சொன்னாக் கேக்க மாட்டியே... இந்தா வாங்கிக்கொள். சீ... அதுக்குள்ளை பறந்திட்டுது. பாவம் தான். தப்பிப்பிழைக்கட்டும்.

★ ★ ★

இன்றைக்கென்னவோ இரண்டுபேர் குணமும் சரியாயில்லை. சாவுக்கு முன் வருகிற எரிச்சல் போலத் துள்ளிக் குதிக்கிறான்கள். அதற்கென்ன. உறங்கும் போது பார்த்துக் கொள்கிறேன். இவர்களை... இப்போது மூன்றாவது ஆளைப் போய்ப் பார்ப்போம்.

★ ★ ★

எனக்கென்னவோ பயமாத்தான் கிடக்கு. இவன் பியசேன மட்டும் எப்பவும் சிரிச்ச முகத்தோடை சந்தேஷாமா இருக்கிறான். எனக்கு மட்டும் ஏன் அப்பிடி இருக்க முடியேல்லை? இந்தப் பயத்தாலைதான்? ஏற்கனவே ஆமியாலை தப்பியோடிப் போனன். எப்படியோ தேடிப் பிடிச்சிட்டாங்கள்.

கத்தியோடையும் வரலாம்; கிரனேற்றோடையும் வரலாம். அவங்கள் பயங்கரமானவங்கள். எந்த நேரம் என்ரை கழுத்து வெட்டுப்படுதோ... நெஞ்சிலை சூடு விழுமோ... இரத்தம் வழிய வழிய... இதை நான் எப்பிடித் தாங்கிக் கொள்ளப் போறேன்? இந்தக் காவலரணிலையுள்ள ஒவ்வொரு நேரமும் எனக்குப் பெரிய பயமாய்த்தானே கிடக்கு. என்னைப் போலை பயந்தவங்களை இந்த வேலையிலே சேர்க்கக் கூடா. ஆக்கள் காணாதெண்டு மாட்டன், மாட்டனெண்டு நான் சொல்லச்சொல்ல இழுத்து வந்து இருத்திக் கிடக்கு! எனக்கு ஆரைக் கண்டாலும் பயமும்,ஆத்திரமுமா வருது.

போன கிழமை, குணசேகர செத்துப் போனானாம் வன்னியிலை. இவ்வளவு நாளும் இஞ்சை இருந்திட்டு போன மாதம்தான் வன்னிக்குப் போனவன். அவனின்ரை மனிசியும், இரண்டு வயதுக் குழந்தையும் பாவம். இனி அதுகளுக்கு ஆர் கதி...? அரசாங்கத்தின்ரை உதவி கிடைச்சாப் போலை அவனின்ரை போன உயிர் திரும்பி வந்திடுமே? எல்லாம் விதி. அதை நினைச்சுக் கொண்டு

(XI ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதியோர் வாழ்க!

சஞ்சீவி சிறுகதை

தானும் இருக்கிறதாகக் காட்ட எண்ணியதுபோல நரைகண்ட மழைமுகில், கசிந்து மெல்லிய தூறலாய் மண்ணுக்கும் வெளிக்குமிடையே ஊசலாடிக் கொண்டிருந்த அதிகாலைப் பொழுதிலே, தமது படுக்கையை விட்டு எழுந்து முற்றத்துக்கு வந்தநடராசாக் கிழவருக்குத் தம்மைப் போலவே வற்றி வறண்டுபோன பூஞ்செடி, ஓர் அதிசயத்தைத் தன்னிலே பொதிந்து வைத்து அவர் வருகைக்காகவே காத்திருப்பது போலத் தோன்றியது.

அந்தச் செடியின் கணுவொன்றிலே வெண்பச்சை நிறத்தில் குருத்து ஒன்று...

அதனைப் பார்த்து அதிசயத்தால் திக்கித்துப் போன நடராசருக்கு இரண்டு நாள்களின் முன்பு நடந்த நிகழ்ச்சியொன்று நினைவுத் தரங்கிலே குமிழியிட்டது.

இடப் பெயர்வினால் அவருடைய வீடுபோலவே சிதைந்து சூனியமாகியிருந்த முற்றத்திலே, மழை பெய்து மலர்த்தும் என்ற தளராத நம்பிக்கையில், அவருடைய பேர்த்தி அருள்மொழி நாட்டி வைத்த பூஞ்செடிகளில் ஒன்று, கடந்த சில நாள்களாய் மழைமேகம் காணாது தனது இலைகளை எல்லாம் உதிர்த்து இனியும் துளிர்க்கும் என்ற நம்பிக்கை கானலாகிவிடப் பரிதாபக் காட்சி தந்ததைக் கண்ட நடராசர் அதனைப் பிடுங்கி எறியப் போனார்.

...''அப்பப்பா, என்ன மோட்டுவேலை செய்யிறியள்? அதிலை இன்னுங் கொஞ்சம் பசுமை இருக்குது. பிடுங்காதையுங்கோ'' என்று பதற்றத்துடன் அருள்மொழி குரல் கொடுக்க அவர் ஏளனமாகச் சிரித்தார்.

...''இன்னும் உனக்கு நம்பிக்கை இருக்கோ?''

...''ஓம் இன்னும் இரண்டு நாள் பாப்பம்'' — என்றாள் அருள்மொழி.

நேற்று இரவு கணிசமான மழை. அருள் மொழியின் நம்பிக்கையிலும் அந்த மழைத்துளிகள் விழுந்து, பட்டுக்கொண்டிருந்த செடியையும், அதைத் தாங்கி நின்ற மண்ணையும்நனைத்ததன் பயன்...? இன்று அதிகாலைப் பொழுதில் அந்தச் செடியில் சின்னஞ் சிறியதொரு குருத்து முளை விட்டிருந்தது.

அருள் மொழியின் எதிர்பார்ப்பு வீண்போகவில்லை.

நடராசர் நாடறிந்த கல்விமான். ஆனால் தாவரங்கள் பற்றிய அறிவு அவருக்குச் சூனியம்.

பதினாறே வயதான—முற்றத்துப் பூஞ்செடிகளை வளர்த்து அனுபவம் பெற்ற- அருள் மொழிக்கு அந்த ஞானம் கைகொடுத்ததால், நடராசரால் பிடுங்கி எறியப் படவிருந்த செடி தப்பிப் பிழைத்தது.

அவருக்குத் தோல்விதான்.

ஆனால்... அவரின் செல்லப் பேர்த்தியின் வெற்றியில் அவர் தமது தோல்வியை மறந்துவிட்ட பெருமிதத்தோடு ...''அருள்... இங்கை ஓடி வாடா. உன்ரை செடியிலை குருத்து வந்திருக்கு'' என்று கூறி அருள் மொழியை அழைத்தார்.

அருள்மொழி அரைகுறையாக முகங்கழுவிய கையோடு ஆவலாய் ஓடிவந்து பூஞ்செடியைப் பார்த்து மகிழ்ந்து போனாள். தனது வெற்றியைத் தலைநிமிர்த்தி ஏளனமாகப் பேரனைப்பார்ப்பதன் மூலம் அவள் வெளிப்படுத்திய போது, கிழவர் அசடு வழிந்தார்.

...''குஞ்சு கெட்டிக்காரிதான்...'' என்று மனநிறைவோடு அவளைப் பாராட்டினார்.

பேரனாரின் மனக்கனிவைத் தனக்குச் சாதகமாக்கித் தனது தேவை ஒன்றை நிறைவேற்றிக் கொள்ளத் தீர்மானித்த அருள்மொழி, ...''அப்பப்பா இண்டைக்கு நீங்கள் எனக்கு ஓர் உதவி செய்ய வேணும். நான் முகங்கழுவிச் சாமி கும்பிட்டுட்டு வாறேன்'' என்று அவள் கெஞ்சுங்குரலிலேவேண்டிக் கொண்டாள்.

நடராசர் எஞ்சியிருந்த தமது இரண்டொரு பற்களை வெளிப்படுத்திச் சிரித்துக் கொண்டே கேட்டார்.

...''என்ன குஞ்சு வேணும் சொல்லு'' என்றார்.

...''இண்டு பின்னேரம் எங்கடை கொலிச்சிலை 'முதியோர் தினம்' கொண்டாடுறம். நான் ஏ. எல். தமிழ்ச் சங்கத்தலைவி எண்டு உங்களுக்குத் தெரியுந்தானே? 'மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்' எண்ட தலைப்பிலை நான் பேச வேணுமாம். கொஞ்சம் பொயின்ற்ஸ் சொல்லுங்கோ?''

நடராசரின் முகம் மலர்ந்தது போலவே திடீரென்று குவிந்தும் போயிற்று. பேச்சுக்கள், பட்டிமண்டபங்கள் என்று அருள்மொழி தம்மை நாடுவதும், தாம் சொல்லும் விஷயங்களைக் குறிப்பெடுத்துச் சென்று பேசிவிட்டு வந்து 'அவை சுத்தப் பழசுகள்' என்று தோழிகளும் ஆசிரியைகளும் பரிகாசம் செய்ததாகக் குறை கூறுவதும் வழக்கமாயிருந்து வருவதால், மீண்டும் ஒரு முறை பேர்த்தியின் சொட்டைக்குத் தாம் இலக்காக நேருமே என்று நினைத்ததாலேயே அவரின் முகம் கருகியது.

அவர் பெருமூச்சு விட்டார்.

''நான் பழங்காலத்து மனிசன். நீங்களோ நவீன காலத்தாக்கள். என்ரை பொயின்ற்ஸ்கள் உன்ரை ஆக்களுக்குக் கேலியாய்த்தான் இருக்கும். ஏன் மோனை? என்னை அவையின்ரை வாய்க்குள்ள நுழைய வைக்கிறாய்?'' என்று மிகவும் சலிப்போடு சொன்னார்.

அருள்மொழி விடவில்லை.

''இண்டைக்கு நான் பேசப்போறது உங்களைப் போல முதியோரைப் பற்றித் தானே அப்பப்பா, சூல்ட் இஸ் கோல்ட் அல்லோ? சொல்லுங்கோ அப்பப்பா''

அருள்மொழியின் செல்லக் கொஞ்சற் பேச்சில் நடராசர் நெகிழ்ந்து போனார்.

''சரி, பிள்ளை, முகங்கழுவிச் சாமி கும்பிட்டுவிட்டு வா'' என்றபடி 'ஹோலு'க்குள் சென்று நாற்காலியில் அமர்ந்து கொண்டார்.

சிறிது நேரத்தில் அருள்மொழி பேனையும், கடதாசியும் கொண்டுவந்து அவர் அருகிலிருந்த நாற்காலியில் அமர்ந்தாள்.

''...சொல்லுங்கோ...''

நடராசர் தமது வாத்தியார்த்தனத்தோடு — கேள்வி ஒன்றோடு —தமது விளக்கத்தைத் தொடங்கினார்.

''...மூத்தோர் என்ற சொல்லுக்கு ஒத்த கருத்துச் சொல் ஒண்டு சொல்லு பார்ப்பம்...''

...கிழவர் என்றவார்த்தை உதடுவரை வந்ததைப் பல வந்தமாக உள்வாங்கிக் கொண்டு ''முதியோர்'' என்றாள்.

''...மூத்தோர் எண்டால் வயதால் முதிர்ந்தோர் எண்டு அர்த்தம். ஆனால் கிழவர் என்பதுதான் மூத்தோருக்கு ஒத்தகருத்துச் சொல்''

அருள் மொழிக்குச் சிரிப்பு வந்தது. அடக்கிக்கொண்டாள்.

''சாதாரணமாக யாராவது தம்மைக் 'கிழவன்' என்று சொன்னாலே முகம் சுழித்துச் சிடுசிடுப்பவர் ஆயிற்றே அப்பப்பா! இப்பொழுது அதே சொல்லை மிகவும் சகஜமாகச் சொல்கிறாரே?...''

அவள் மௌனமாக அவரையே உற்றுநோக்கினாள்.

''...கிழவன் என்ற சொல் கிழமை என்ற பண்புச் சொல்லடியாகப் பிறந்தது. கிழமை என்பதற்கு உடைமை, தலைமை என்பன பொருள்கள். முற்காலத்தில் குடும்பத்தின் உடைமையாளனாகவும் தலைவனாகவும் இருந்தவன் வயதில் மூத்தவன்தான். எனவே மூத்தோன் கிழவன் எனவும் அழைக்கப்பட்டான்.'' என்று செந்தமிழ் பேசத் தொடங்கினார் நடராசர்.

''அதுதான் கிழவன்மார் செத்தால் மரண அறிவித்தலிலை 'எங்கள் குடும்பத் தலைவர்' எண்டு இடுகினம் போல...''

நடராசர் பெருமூச்சு விட்டார்.

''இன்று குடும்பத் தலைவர் என்று போடுவது வெறும் உபசாரம். உலகத்தை ஏமாற்றுகிற பம்மாத்து வேலை. உதாரணமாக இன்று இந்தக் குடும்பத்தின் தலைவர் யார்...? உன் அப்பா தானே? என்னைக் குடும்பக் கடையராய்த் தானே அவன் நடத்துகிறான்...''

அருள்மொழிக்கு அவர் கூறியது நியாயமாகவே பட்டது.

''அப்பா, உங்களுக்கு வயசு போட்டுது. இண்டைய நேச்சர் உங்களுக்குத் தெரியாது. வாயைப் பொத்திக் கொண்டு தாறதைத் திண்டிட்டு ஒரு மூலையிலை கிடவுங்கோ. எனக்கு எல்லாம் தெரியும்'' என்று அப்பா, அப்பப்பாவின் உள்ளத்தை எத்தனை நாள் காயப் படுத்தியிருப்பார்?

அருள்மொழி இரக்கத்தோடு பேரனைப் பார்த்தாள். நடராசர் தமது கவலையை மறைக்க முகத்தைத் தாழ்த்திக் கொண்டார்.

மௌனம் சில கணங்கள் தேங்கி நின்றது.

பேரனாருக்கு என்ன சமாதானம் சொல்வது என்று ஒன்றுமே தோன்றவில்லை அருள்மொழிக்கு.

நடராசர் தம்மைச் சமாளித்துக் கொண்டு தொடர்ந்தார்.

வழக்கமாக அவர் சொல்லும் ஒவ்வொரு விடயத்தையும் நோண்டி, நோண்டி வாதம் புரிந்து அவர் விடை கூறமுடியாது விழிப்பதைப் பார்த்துத் தன்னுள்ளே வக்கிரமான மனநிறைவை அடைந்து வந்த அருள்மொழி, இன்று நல்லபிள்ளையாகிக் குனிந்த தலை நிமிராது அவர் சொல்பவற்றை ஒன்று விடாது குறித்துக் கொண்டாள்.

கிழவர் சொன்னவற்றில் அருள்மொழியின் நெஞ்சைத் தொட்டது, அவர் கூறிய சிறியதொருகதைதான்.

அது.........

சீனநாட்டிலே உள்ள கிராமத்து வீதியின் ஒரு பக்கத்தில் ஒரு நாள் கிழவன் ஒருவன் அமர்ந்துஅழுது கொண்டிருந்தான். அவனுக்குச் சுமார் எண்பது வயதிருக்கும். நரை, திரை, மூப்புக்கு ஓர் எடுத்துக்காட்டாக அவன் விளங்கினான். அவன் ஏன் அழுகிறான்?

அந்த வீதியால் நடந்துவந்து கொண்டிருந்த இளைஞன் ஒருவனுக்குக் கிழவனைப் பார்க்கப் பெரும் பரிதாபமாய் இருந்தது. அருகில் சென்று ஆதரவோடு அவனது தோளைப் பற்றித் தடவியபடி ''பெரியவரே, ஏன் அழுகிறீர்கள்? உங்களுக்கு என்ன நடந்துவிட்டது?'' என்று கேட்டான்.

கிழவனின் அழுகை விம்மலாய் வெடித்தது. விம்மலுக்கிடையே அவன் சொன்னான்.

''அப்பா எனக்கு அடித்துப் போட்டார்.''

இளைஞனுக்கு வியப்பு, தொடர்ந்து திகைப்பு!

''இந்தக்கிழவனுக்கு ஓர் அப்பாவா? அவர் இவனுக்கு அடித்தாரா?'' அவனால் நம்ப முடியவில்லை.

''உங்களுக்கு அப்பாவா? அவருக்கு வயசு எத்தனை?''

''இந்த மாசத்தோடு நூற்றைந்து வயதாகிறது தம்பி''

''அவர் அடித்தது உங்களுக்கு நொந்ததா?''

''நொந்திருந்தால் பிரச்சினை இல்லையே! நோகவில்லையே என்பது தான் எனக்குக் கவலை?''

''......?......?.........?''

''இரண்டு வருசத்துக்கு முன்பும் அவர் எனக்கு அடித்தவர். அந்த அடி எனக்கு நோவை ஏற்படுத்தியது உண்மைதான். இப்பொழுது நோகவில்லை என்றால்...? முதுமையின் பலவீனம், தளர்ச்சிதானே காரணம்? அப்பா விரைவில் எங்களைப் பிரிந்து விடுவாரோ என்பதுதான் இப்பொழுது எனக்குக் கவலை. அதுதான் அழுகிறேன்.''

- சொக்கன் -

★

# பெருவிரல் ரேகையும் அதன் பலாபலன்களும்

கைரேகை சாஸ்திரமானது மானிட இயல் விஞ்ஞானமே என முதுபெரும் ஆங்கிலக் கைரேகை நிபுணர் ஒருவர் தனது புத்தகமான ''Fortune Teller'' இல் குறிப்பிட்டுள்ளார்.

மனிதனின் எண்ணங்களின் பிரதிபலிப்பு நரம்புகளின் வாயிலாகக் கைரேகையில் வந்து படிகின்றன. இதை உறுதி செய்யும் வகையில் எண்சோதிட மேதை பண்டிட் சேதுராமனும் அதிர்ஷ்டப்பெயர் அமைக்கும் பொழுது, கைரேகையில் புதுவித ரேகைகள் — மாற்றங்கள் — நிகழ்ந்துள்ளதைக் கவனிக்குமாறு பணித்துள்ளார்.

கைரேகையில் மிகப் புலமை வாய்ந்தவரும், மேதாவியுமான சக்திதாஸன் மானிடர்களின் கைகளை வகைப் படுத்தி, ஒவ்வொருவருக்கும் இன்னதுதான் தொழிலாக அமையுமெனக் கூறியுள்ளமையும் கருத்தில் எடுத்துச் சிந்திக்கப்பாலது.

கைரேகைகள் அடிக்கடி மாறுதல்கள் அடைகின்றன. எங்கள் கல்லூரியில் படித்து வந்த மித் திறமை வாய்ந்த ஒருவரின் உள்ளங்கையானது கறுப்பாகவும், விசேட ரேகைகள் இல்லாமலும் காணப் பட்டது. இவர் தோற்றிய உத்தியோகத்திற்கான பரீட்சைகளில் தோல்வியையே தழுவினார். மிகக் கடினமான உழைப்பின் பின் ஒருவாறு ஒரு பரீட்சையில் சித்தி அடைந்து, அரசாங்க சேவையில் சேர்ந்தார். இதைத் தொடர்ந்து செல்வாக்கான நிலையை எட்டி திருமணமும் நடந்தேறியது. பல வருடங்களின் பின் நான் இவரைச் சந்திக்க நேர்ந்தபொழுது, அவரின் கைரேகையைப் பரிசீலனை செய்தேன். அவரின் உள்ளங்கையானது தாமரை மலரைப்போல்சிவப்பாகவும், பல விசேட ரேகைகளோடு காணப்பட்டது. நான் அதிர்ச்சி அடைந்தேன்; கைரேகை மேதாவிகளின் கூற்றுக்களையும் அனுபவ ரீதியாக உணர முடிந்தது.

இந்த மாற்றங்களின் பின்னணியில், சோதிட ரீதியாக மகாதெசை புத்திகளும் நல்ல நிலை இருந்ததையும் அவதானிக்க முடிந்தது.

ஆகவே கைரேகைகளுக்கும் சாதகத்திற்கும் ஒற்றுமை— தொடர்புகள் இருப்பதை நாம் அவதானிக்க முடியும்: உணர முடியும்.

## பெருவிரலின் தனித்துவம்

பெருவிரலின் மேல் அங்குலாஸ்தியில் காணப்படும் உரு அமைப்பு (Formation) ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு மாதிரியாக இருப்பதை அவதானிக்கலாம். ஒருவரின் குண இயல்புகளை அளவிடுகின்ற அளவுகோலாக இது விளங்குவதாலேயே, நீதிமன்றங்கள் மற்றும் முக்கிய அலுவலகங்களில் பெருவிரலடையாளம் பெறப்படுகின்றது போலும். புலனாய்வுத்துறையிலும் கைவிரல் அடையாளம் முக்கியத்துவம் பெற்றுள்ளது.

பெருவிரலின் முனை நீண்டிருப்பது — பகுத்தறிவாளர்களுக்கும்; இம் முனை சுற்றியல் போல் தடித்து அமைப்பைப் பெறுவது — சிந்தித்துச் செயல்படாது அவசரமாகக் காரியங்களில் இறங்கி அவஸ்தைப் படுவதையும் சுட்டுவதாக பழைய நூல்கள் வாயிலாக அறியக்கிடக்கின்றது. எனவே இதை நாம் அறிந்து முன் எச்சரிக்கையாக இருப்பது தீங்குவராமல் தடுக்க உதவி புரிவதாக அமையும்.

பெருவிரல் பின்நோக்கி நன்றாக வளைவோருக்கு — ஈவு இரக்கம், கருணை —காருண்யம், அதிக செலவு போன்ற தன்மைகளும் —

வளையாது உறுதியாக நிற்போருக்கு — செலவுகளில் நிதானம், முன் எச்சரிக்கையாக இருத்தல் போன்ற குணாதிசயங்களும் இருப்பதை அனுபவரீதியாக உணர முடிகின்றது.

இனிப் பெருவிரலின் நகங்களை ஆய்வு செய்தால் அவரவர் நோய்களின்தன்மையும் புலப்படுகின்றது. பெருவிரல் நகங்களில் நீண்ட மெல்லிய கோடுகள் (மேலிருந்து கீழ்) தென்படின் வாய்வு சம்பந்தமான நோயும்; நகம் மஞ்சள் நிறமாயின் பித்த சம்பந்த நோயும்; நீல நிறம் அல்லது நீலம் கலந்த பழுப்பு நிறமாயின் வாதம், விஷநீர்ப்பீடைகளும்; நகத்தில் வெண்புள்ளிகள் காணப்படின் இருதயத்தின் தொழில்பாட்டில் பேராபத்தை ஏற்படுத்தாத சில குறைபாடுகளும் இருக்க வாய்ப்புண்டு. நகம் வெள்ளையாக இருப்பது இரத்தக் குறைவு இருப்பதைக் காட்டும்.

இத்தகைய குறைபாடுகள் அனைத்தையும் நாம் நாளாந்தம் கை மருந்தாக உணவு வகைகளால் தேற்றி எடுக்க முடியும்.

சாதகத்தில் மகாதெசை புத்திகள் நன்கு அமையின் நோய் குறைந்தும் அல்லது இல்லாமலும் தெசா புத்திகள் — கோசர நிலையிலுள்ள கிரகங்கள் சாதகமாக அமையாவிடின் நோய் கூடுதலாகவும் இருப்பதற்குரிய சாத்தியக் கூறுகள் உண்டு.

— சங்கானையூர்
கனக. குமாரசுவாமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தையிலே மலர்கின்றாள்

ஏழை உழவன் பலத்தை உயர்த்திட
எருதும் கலப்பையும் நிலத்தை உழுதன.
வாழும் வாழ்க்கை, தோழமை வளர்த்திட
வந்தாள் தைமகள்; தந்தாள் பொங்கல்.

காலம் முழுமையும் கண்ணீர் சிந்தியவன்
கழனிகள் பூத்தன; களிப்புற வாழ்த்தின
ஓலம் மறைந்திட உழுதவன் மகிழ்ந்திட
ஓடியே வருகின்றாள் பொங்கலை தருகின்றாள்.

சூரியன் கரங்கள் செவ்வொளி கொட்டிட
சுடச் சுடப் பொங்கலைக் கொட்டுகின்றான்.
காரிருள் அகன்று கண்ணீர் அகன்றிட
கன்னியாய் வருகின்றாள் தையிலே மலர்கின்றாள்.

—நல்லை அமிழ்தன்,

## பாவாய் பாரடியே!

கட்டுப் பணமிருந்தாள் காலடியில் சொந்தமடி
கட்டிலே கதியெனினும்
கூட்டமிங்கோ கோடியடி—பாவாய்
நாட்டம் கொண்டுரச நல்லசனம் பாதியடி
நோட்டமாய் நீ பாரு குறியோ பணத்திலடி!

கால் முடமோ கைமுடமோ கவலையில்லையடி
சொல் முடமோ பல் முடமோ பாதகமேதுமில்லை
நல் மனசோ கல் மனமோ கலக்கமில்லையடி— பாவாய்
சல்லென்ற ஓசையுடன் தங்கச் சலங்கையிட்டு
எள்ளென்று பெண் வந்தால் எண்ணெய்யாய்க் கணவனடி!

நீதியிங்கு பணத்திலடி இதை நீயறிவாய் பாவையடி
நாதியே இல்லையடி பணமில்லா இடத்திலடி!
சேதி தெரியுமோடி செண்பகமே அன்பகமே
சாதி சண்டையிங்கே பணம் கொடுத்தால்
பாதியிருக்கையிலே காணாமல் போகுமடி!

மனையாள்—மக்களெல்லாம்—நாளும்
துணையாகத் தொடர்ந்துவர
இணையாகப் பணமிருந்தால்—பாவாய்
வினை வாழ்வில் தொலைவிலெடி
கணை போன்ற கண்ணாலே கவனமாய்ப் பாரடியே
பாவாய் பார்த்து பதில் கூறடியே!...

ச. இளம்பூரணன்

## அந்நைத் திங்கள் அவ்வெண்ணிலவில்!

தங்க முலாம்பூசித் தள்ளாடிக் கீழ்த்திசையில்
திங்கள் எழுகின்ற
தெய்வீகப் பௌர்ணமிநாள்
வெண்கம்பளம் விரிக்க வீதியெல்லாம் நிலவின்பால்
சிந்துறது; தென்றல் சிறகடித்துப் பாடுறது.
அண்ணாந்து வானின் அமுதுண்டு
உயிர்உயிர்க்க மண்ணில் நடக்கின்றேன்...
நிலவினிலே மாற்றமில்லை!
இத்தனை வயதினிலும் இந்தக் கிழநிலவு
சற்றும் நரைமூப்புத் தட்டாமல்... தளதளப்பாய்,
மார்க்கண்டேயன் போல மணியாய்த்தான் சிரிக்கிறது!

இந்நிலவு முன்பும் 'இளைஞனென என்மண்மேல்
வந்திருக்கும்.
எங்கள் வடலிகளில் பனிதடவிச்
சென்றிருக்கும்; பண்டைச் சிறப்பையெல்லாங் கண்டிருக்கும்.

இந்தத் தெருவினில்தான்...
'என்பூட்டன் சங்கிலியன்'
வெற்றி சூடி 'வீராளி அம்மனுக்கு' 'நர்ந்து பொங்கி
'நல்லூர் முருகனுக்கு' நன்றிசொல்ல சென்றிருப்பான்.
புடைசூழும் மந்திரிமார்,
புலவர் பரிவாரம்,
படைநடத்தும் பட்டாளத் தலைவரெல்லாம் மிடுக்கோடு
மீசை முறுக்கிவிட்டு
மெய்சிலிர்க்கப் போயிருப்பார்!

பேரிகை முழக்கிப்பின் சங்கு கொம்பூதி
வாள் சுழற்றி ஆடும் படை; நூறு 'அக்குரோணி'
தேர், குதிரை யானைச் சேனை; வர...
எழும் புழுதிப் போர்வை
புவியைச் சிறைப் பிடித்துப் போர்த்திருக்கும்.

மாதர்களின் ஆலாத்தி, மறம்போற்றும் பாமுழக்கம்,
வீரர்களின் ஆர்ப்பில் இந்தத்
தெருவீதி மகிழுவதைப்
பார்த்தன்று இந்தப் படிகநிலா பூத்திருக்கும்.
''பண்டார வளவின் பாசறைகள்,
அத்தாணி மண்டபம்,
அரண்மனைகள்,
மந்திரிமார் இல்லம்,
எழில் அந்தப்புரங்கள்,
மல்யுத்தம் — ஆடரங்கு,
தமிழ் வளர்த்த சங்கப்பலகை,
அறமடங்கள்,
திசையெட்டைத் 'திக்குப் பாலகர்' போல் காத்திருந்த
விநாயகர் கோயில்கள்,
யமுனாரி,
களிறுகட்டும் ஆனைப்பந்தி'',
எல்லாமும்... அன்றழகாய் நின்றதனைப்
பார்த்திளைய திங்கள் வாய் பிளந்திருக்கும்!

ஆம்; இன்று
கிழடுதட்டிப் போனாலும் அழகிழக்கா நிலவிந்த
'நிலநிலையை'ப் பார்க்கிறதே...
மலைத்திடுமோ?
எதை நினைக்கும்??

— த. ஜெயசீலன் —

## பொங்கு!

கூரான மனிதம்
கூறுகள் போட்டு
குழம்பிப் போவது எங்கு?

சூரர் பலபேர்
சுட்டுப் போட்டனர்
சுதந்திரம் ஏங்குது இங்கு!

ஊரும் எல்லாம்
உருவம் மாறுது
உண்மை சாகுது அங்கு!

ஈரவிழிகள்...
இழக்கும் துயர்கள்...
இருக்கும் நிலையே மங்கு!

பாரம் சுமக்கும்
பரிதா பம்போய்
பசுமை நிலையாய் தங்கு!

திரச் செயலால்
தீமை அழிய
திசைகள் ஊது சங்கு!

சீராய் மாறி
சிந்தை உயர்ந்து
சிறுமை அகலப் பொங்கு!

— மானியூர் ரட்ணேஸ் —

## சித்தம் அழகியர்

வெறுவயிற்றில் எழும் நெருப்பை
வேர்வையினால் ஆற்றி – இனும்
வழிக்குவழி விழ நெரிடும்......
பொய்க்காலும் நோகப்
புதை சேற்றில் இழுத்து வந்து
விறகுச் சைக்கிள்...! அதை
வீழாதிருக்க விட்டுக்-
கண்ணிரண்டும் மூடிக்
களைதீர்ந்து எழுவதற்குள்...,
சில்லிரண்டும் விற்றுச்
சிகரெட்டுப் பத்துகிற
உள்ளமுடைத் தெங்களது
ஊர்......!

★ ★ ★

முல்லைக்குத் தேர் – வண்ண
மயிலுக்குப் போர்வை என்றோர்
"'வள்ளல்'' மரபுனக்கு ஏன்?
வரலாறேன்? வாய்வயிற்றைக்
கட்டி முடிதரித்த
கனக மணிப் பொன்வீட்டைக்
''குட்டிச் சுவராக்கிக்''
கூரை மரம் ஓடுடன் – எம்
'கண்ணில் மண்தூவக்'
கருதுமுளம் யாருடைத்து?

★ ★ ★

தலையினிலோர் முடிதரித்த
தனி இரவுக் கனவழிய
கண் செவி நாவுமற்று
கதை சுவை யாவுமற்று
மண்டையி னோடாய் – வாழ்கை
மாறினால் மனமென்னாகும்?
மூளாத்தீபோல் உள்ளே கனன்று...
முகத்தால் மிக வாடி
ஆளாய்த் திரியும் 'அறியார்'...!
அடி – யாராகிலும் அடிக்க...
அடி பணியும் திருமுதுகு...!
எல்லோர் முதுகிலும் அடிவிழும் புராணம்
எங்களுக்கானது!
பிழையென்று கூற – மனம்
பின்னுக்கும் ஆளென்று
உயிர் உக்கிச் சாகின்ற வாழ்க்கை...
எவர் உதவி?

★ ★ ★

பிடியரிசி சேர்த் தெங்கள்
பிள்ளைகளுக்காய் எழுதப்
படியென நூல் செய்தீர்;
பள்ளி செய்தீர் – எழுதரிய
ஏடுகள் சேகரித் தெம்
இயல் இசை நாடகம் வளரப்
பாடுபட்டும் அந்நாட்
பசியிருந்தெம் உளம் வளர்த்தீர்...!
உங்களுக்கஞ்சி – உள்ள
உணர்வோடு உயிரொடுங்கி
எங்களில் ஒருவர் தானும்
இறந்ததாய் அறியேன்...! – இன்னும்
உங்களைத் தேய்த்தீர்...! – அந்த
உணர்விலே மனம் நெகிழும்...!

— ஆரபி. சிவசிதம்பரம்,

## பழனி சேர் பாரதியின் பாழ்

காதடைக்கும் காட்டுக் கதறலோடு; வாத்தியத்தின்
பேதமற்ற பின்னணிகள் பீறிடுதே – கீத
அழகுத் தமிழ்ப்பாட்டில் ஆங்கிலமே மிஞ்சின்
பழனிசேர் பாரதியின் பாழ்!

பூக்கள் அவளைவிட பூக்காத தன்மையால்
நாக்காலே கேட்கா நளினமாய் – ஏக்கமொடு
''ஆட்டோ கிராப்'' கேட்ட தற்புதந்தான்; பாமரனும்
பாட்டை ரசிக்கப் பகர்!

தூங்காதே தம்பிநீயும் தூங்காதே என்றானே
பாங்கான பாவலனாம பட்டு(க்)கோட்டை – மாங்காய்
மடையனே! பாட்டாளி மக்களின் வேர்வை
துடைக்கவே பாட்டெனத்தேர்!

பொன்மாலை போன்ற பொழுதொன்றில் வைரமுத்து
கண்மாலை போடக் கவிசொன்னான் – இன்றோ
பூச்சூடும் பின்னல் புதுக்கவிதைப் பெண்ணுக்கா
சீச்சீயிப் பல்லில்லாச் சீப்பு?

சட்டி சுடுகின்ற தத்துவம்சொல் கண்ணதாசன்
சிட்டுத் தமிழ்நடந்த சிங்கார – மெட்டினிலே
கன்னித் தமிழ்மகளை கற்பழிப்பார் பாரதியா?
பின்பேன் பிணத்திற்குப் பேர்!

— சு. முரளீதர

## புல்லாங்குழல் சுமக்கும் புண்!

கூட்டுக்குருவிகளும் குஞ்சோடு கூடியழும்
நாட்டில் நிகழ்ந்துவரும் நம்சோகம்—கேட்டுவிட்டால்
பள்ளத்தில் வீழ்ந்து பரிதவிக்கும் பூபாளம்
புல்லாங் குழல்சுமக்கும் புண்.

எல்லையிலாத் துன்பத்தில் ஈன்றெடுத்த பிஞ்சுகளை
''ஷெல்'' கூட விட்டபின்னர் சீ! நீங்கள்! பிள்ளையிலா
பஞ்சத்தில் நாமின்று பாழ்பட்டோம்; சீண்டாதீர்
நெஞ்சத்தில் பூக்கும் நெருப்பு.

குட்டை குழப்பித்தான் குள்ளநரி மீன்பிடிக்கும்
பெட்டைப் புலம்பலிது பேந்தெதற்கு—முட்டாள்! எம்
நெத்தியிலே பட்டையிட நிச்சயமாய் பூத்துவிடும்
செத்த பிணத்தில் சிரிப்பு!

தேர்தல்த் திருவிழா தேடி வருகிறது
வேரழிந்த நெஞ்சில் விடிவில்லை—வாரும்
குனிந்துகரம் கூப்பித் குழைந்திருக்கும்! அடடா!!
சினிமாவில் நாம்பார்த்த 'சீன்'!

பாடைசென்ற வார்த்தைகள் பார்த்துப் பிடித்துவந்து
ஆடைகட்டிச் சோடிக்கும் அற்புதங்கள்—பீடையடா!
வீடழிந்தும் எங்கள் விதானைக்கும் பார்வையில்லை
போடம்மா தீர்வுப் பொதி!

— உச்சிற்கிழான்

## ஆருக்கு இன்று நிம்மதி?

எத்தனை கோடி இன்பங்கள் வைத்தாய்
இறைவா என்றார் பாரதி!
அத்தனை இன்பமும் போனது எங்கே
ஆருக்கு இன்று நிம்மதி?
செத்தவர் போக இருப்பவர் இன்று
படுகின்ற தொல்லைகள் சிறிதோ?
மெத்தையில் பிறந்தவர் செத்தையில் வாழ்பவர்
சகலர்க்கும் இதுதான் விதியோ?

உண்ணவும் இன்றி உறைவிடம் இன்றி
வாழ்பவர் வன்னியில் எத்தனை
மண்ணையும் துறந்தார் நோய்பிணி கொண்டார்
மருந்தின்றி மடிவார் எத்தனை?
கண்ணினை ஒத்த தாயகம் துறந்து
கனடா பிரான்சுக்கு எத்தனை?
தண்டனை யோநம் இனத்துக்குப் புவியில்
சொந்தமண் எங்கினும் இவையோ?

காலையில் எழுந்து செய்தியைப் பார்த்தால்
குண்டு வெடிப்பினில் மரணம்!
சாலையில் போனவர் துப்பாக்கி வேட்டினில்
அகப்பட்டு அகால மரணம்!
மேலை வானத்தில் விமானம் வெடித்தது
மக்கள் நூற்றினில் மரணம்!
பாலத்தில் இருந்து ரயிலும் பாய்ந்தது
பயணிகள் மூழ்கியே மரணம்!

அரசப் படையும் கிளர்ச்சிப் படையும்
அடித்துக்கொள் வார்ஒரு நாட்டில்,
பிரஜைகள் தானே ஆயிரம் லட்சமாய்
மாள்வார் துப்பாக்கி வேட்டில்!
ஒருவருக் குண்ண உணவில்லை என்றால்
ஜெகத்தினை அழித்திடு என்றார்
இரண்டு லட்சம் ஒரு நாட்டினில் மாளவல்
வரசுகள் பார்த்தே சுகித்தார்!

வீதிப் ''பாசும்'' அடையாள அட்டையும்
விட்டே விலகுவ தெப்போ?
பாதித் தூரம் இறங்கி நடக்கிற
வேதனை தீர்வது எப்போ?
தீதே பயக்கும் குண்டு, துப்பாக்கிகள்
'ராகிங்'கும் தொலைவது எப்போ?
மேதினி யில்நாம் விலங்குகள் போலன்றி
மக்களாய் வாழ்வது எப்போ?

—அரியாலை சின்னையா துரைச்சாமி—

## கவிதை முற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நட்பு

நண்பா ! நண்பா ! எந்நாளும்
நட்பை மறக்கக் கூடாது
தினமும் உந்தன் நன்மைக்கே
நானும் சொல்வேன் பலவார்த்தை.

கரடி கண்ட நண்பனைப்போல்
ஏற மாட்டேன் மரத்தின் மேல்
எந்த நாளும் என்நட்பு
இடுக்கண் களையும் நட்பாகும்.

உண்மை சொல்லி உனைத்திருத்தி
உலகில் உன்னை உயர்த்திடுவேன்.

குமாரசாமி கிரிவர்ணன்
(ஆண்டு 7, சாவகச்சேரி இந்துக்கல்லூரி)

## அம்மாவும் அப்பாவும்

அம்மா எங்கள் அம்மா !
அணைத்து முத்தம் தருவாராம்
அப்பா என்றும் நல்லவராம்
அறிவுக் கதைகள் சொல்வாராம் !

பட்டுச் சட்டை போட்டு
பள்ளிக்கு அனுப்பும் அம்மா !
பாடப் புத்தகம் வாங்கிப்
படிக்க வைக்கும் அப்பா !

உணவு ஊட்டி படுக்கை விரித்து
உறங்க வைக்கும் அம்மா
வேண்டும் பொருள் யாவற்றையும்
வாங்கி வழங்கும் அப்பா

உள்ளத்தாலே நேசித்து
உயர வழி காட்டிடுவர்
அறிவுக் கண்ணைத் திறந்து
குறித்த வெற்றி கண்டிடுவோம்.

இரத்தினசிங்கம் சஸ்மிதா
(ஆண்டு 4, அச்சுவேலி ம.வி.)




## நல்ல நல்ல மரங்கள்

நல்ல நல்ல மரங்களை
நாங்கள் கூடி நாட்டுவோம்
வல்ல இறைவன் அருளினால்
வளர்ந்து மரங்கள் பயன்தரும்.

ஆளுக் கொரு மரத்தினை
ஆசையோடு நாட்டினால்
நல்ல தொரு சூழலை
நாட்டில் நாங்கள் ஆக்கலாம்

பண்படுத்தி பசளையிட்டு
பக்குவமாய் நீரும் விட்டு
பகல் இரவு பாதுகாத்து
பலன் பெறுவோம் வாருமோ !

த. தரணிதரன்
(ஆண்டு 4, மூளாய் சைவப்பிரகாச வித்தி.)

## கவிதை

மாரி நீரைத் தானேற்று
வருடம் முழுவதும் எமக்குதவ
ஊரின் நடுவே உள்ளகுளம்
உபகாரத்தால் உயர்ந்த குளம்

ஆடு மாடு நீரருந்த
அயலும் நாமும் நீராட
ஈடுகொடுக்கும் இனியகுளம்
எங்களூரில் உள்ளகுளம்

காலைப் பொழுதில் இலை நடுவே
கதிரோன் ஒளியைக் கண்டங்கே
கோலங் காட்டும் தாமரைகள்
குளத்தின் இனிய குழந்தைகளாம்.

- பிரதீப்காந்த் -
(யாழ்.பரி.யோவான் கல்லூரி)

## வித்தியாசம் தெரிகின்றதா?




மேலே உள்ள இரண்டு படங்களுக்கும் இடையில் பன்னிரண்டு நுணுக்கமான வித்தியாசங்கள் உள்ளன. உங்களால் கண்டு பிடிக்க முடிகின்றதா பாருங்கள். கண்டு பிடித்தால் நீங்கள் கெட்டிக்காரரே !

( விடை XI ஆம் பக்கத்தில் )

## எண்ணிப் பாருங்கள்!



மேலே உள்ள படத்தில் எத்தனை எலிகள் உள்ளன? எண்ணிப் பாருங்கள் !

( விவிட XI ஆம் பக்கத்தில் )

## புலி பசித்தாலும் புல்லைத் தின்னாது!



புலியும் பூனை இனத்தைச் சேர்ந்ததே .விலங்கினங்களில் சிங்கத்திற்கு அடுத்தபடியாக வலிமையுடையது புலி. 'பார்த்தால் பூனை; பாய்ந்தால் புலி.' என்று கூறுவதைக் கேட்கலாம். சிங்கத்தையும் புலி அஞ்சாது எதிர்க்கும்.

சிங்கத்தைப்போல் பிடரிமயிரோ, அடர்ந்த வால் மயிரோ புலிக்கு இல்லை. புலி ஏறக்குறைய நான்கடி உயரமும், ஆறடி, நீளமும் இருக்கும். இதன் முகம் பூனையின் முகம்போல உருண்டையாகவே இருக்கும். இதன் காதுகள் சிறியவை; வட்டமானவை.

புலிக்கு இரவில் நன்றாகக் கண் தெரியும். இரவில் ஒளிபட புலியின் கண்கள் நெருப்பு உருண்டைகள்போல் ஒளிவீசும். இதன் கண்பார்வைக்குக் கலக்கமுற்ற சில விலங்குகள் இதனிடம் எளிதில் அகப்பட்டுக் கொள்வதும் உண்டு.

(XI ஆம் பக்கம் பார்க்க)

## கண்டுபிடியுங்கள்!

கீழேயுள்ள மூன்று புதிர்களுக்கும் முன்னணியில் மூன்று இடங்களின் பெயர்கள் தரப்பட்டுள்ளன. அவற்றின் கீழ் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்த இடங்களின் பெயர்களில் ஒளிந்துள்ளன. கண்டு பிடியுங்கள் பார்க்கலாம்,

I.

### குரும்பசிட்டி

அ) வயிற்றில் தோன்றுவது.
ஆ) முகத்தில் வருவது.
இ) குடியைக் கெடுப்பது.
ஈ) பார்வையற்றவளைக் குறிக்கும.
உ) புதிதாகப் படைப்பதை இப்படியும் கூறலாம்.
ஊ) ஞானாசிரியன் என்று பொருள் தருவது.
எ) விளக்கேற்றப் பயன்படுவது.
ஏ) சில விலங்கினங்களில் இளையதை இப்படியும் அழைப்பர்.
ஐ) நாவுக்கு விருப்பமானது.
ஒ) மாடுகள் கூட்டமாகக் கட்டப்படுவது இங்கே.

ச. நிசா

II.

### கதிர்காமம்

அ) நெல்லைத் தருவது.
ஆ) வேகத்தைக் குறிக்கும்.
இ) பயிர் வளரும் களனி.
ஈ) தந்திரக்காரப் பறவை.
உ) விதியை இதனால் வெல்லலாம்.
ஊ) இராசிகளுள் ஒன்று.
எ) வீதியில் செல்லும் வாகனம். கரு மேகத்தையும் இப்படி அழைப்பர்.
ஏ. ஒரு வகை உணர்ச்சி.
ஐ) நாளைக் குறிப்பது.
ஒ) புரியாத மாயத்தை இப்படிக் கூறலாம்.

சி. கவிதா
(ஆண்டு 10, ஹாட்லிக் கல்லூரி)


III.

### கொழும்புத்துறை

அ) இலங்கையின் தலைநகரம்.
ஆ) கப்பல் தரிப்பது.
இ) ஒரு பிராணி வகை.
ஈ) தானியங்களை அளக்கப் பயன்படும்.
உ) குதிரைக்கு இது இல்லை.
ஊ) தூரிகை செய்யப் பயன்படுவது.

சிவனுஜா சிவநாதன்
(ஆண்டு 7, உடுவில் மகளிர் கல்லூரி)

(விடை XI ஆம் பக்கத்தில்)




சிறுவர், சிறுமியரே !... இது ஒரு வார்த்தை விளையாட்டு. மேலே உள்ள வட்டத்தில் ஒன்பது எழுத்துக்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இந்த ஒன்பது எழுத்துக்களையும் நீங்கள் முன்னும் பின்னுமாக எப்படிவேண்டுமானாலும் எத்தனை தடவை வேண்டுமானாலும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

இதன் மூலம் உங்களுக்கு நிறையத் தமிழ் வார்த்தைகள் கிடைக்கும். குறைந்தது முப்பது வார்த்தைகளாவது உங்களால் உருவாக்க முடியுமா என்று பாருங்கள்.

(விடைகள் XI ஆம் பக்கத்தில்)

## நொடிப்பொழுது

1. உயிரில்லாத நீதிபதி; ஒழுங்காக நியாயம் சொல்கிறார். அவர் யார்?
2. குடத்துள்ளே குடிக்கத்தண்ணீர் உண்டு; குளிக்கத் தண்ணீர் இல்லை. அது என்ன?
3. அம்மா படுத்திருக்க, மகள் ஓடிக்கொண்டு இருக்கிறாள். அவள் யார்?
4. அடர்ந்த காட்டுக்குள்ளே அலைந்து திரிந்து அழகுபடுத்துவாள். அவள் யார்?
5. அண்ணன் தம்பி இரண்டுபேர். அவர்களைச்சுற்றி பன்னிரண்டுபேர். அவர்கள் யார்?

### விடைகள்

1. தராசு 2. தேங்காய் 3. அம்மிக் குழவி
4. சிப்பு 5. கடிகாரம்

கு. சோபனா
(ஆண்டு7, வடமராட்சிமத்தியமகளிர்கல்லூரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறள் வெள்ளம்

இன்பமெங்கே இன்பமெங்கே என்று தேடி — எங்கிருந்த போதும் அதை நாடி ஓடும் மாந்தர்களே மனதினை வீணாக அலைய விடாதீர்கள்.

கொலை, கொள்ளை, கடத்தல், பதுக்கல் பேர்வழிகள் அடிக்கும் கொள்ளை லாபத்தில் கோயிலையும் குளத்தையும் கட்டி அன்னதானம் செய்து பெரும் பெயரைத் தட்டிச் செல்கிறார்கள். அவரவர் மனச் சாட்சிக்கு அசிங்கம் தெரியும்.

செய்த பாவத்தை மறைக்கவும் தீர்ககவும் நேர்த்திகள் அபிஷேகங்கள் — காவடிகள் — தானங்கள் எல்லாம் தெய்வத்துக்கே லஞ்சம் கொடுக்கும் முயற்சிகள். ஆனால் ஊருக்குத் தெரியும் இவர்களின் வேடம்.

செய்யும் அறம் அளவிற் சிறிதெனினும் அது தூயதாக இருந்துவிட்டால் இன்பம் நிலைக்கவே செய்யும்; மனம் நிறைவு கண்டிடும். போலி அறங்கள் இன்பமாகத் தென்படினும் அவை நிலைக்க மாட்டா; புகழும் தரா!

அறத்தான் வருவதே இன்பம் மற்றெல்லாம்
புறத்த புகழும் இல.

—0039

ஒருவன் செய்யக் கூடிய தெல்லாம் அறம்தான். அது மனநிலையைப் பொறுத்ததும் கூட! பொதுக் காரியத்தில் தலையிட்டால் பழிதான் மிஞ்சும் என்று பயந்தால் என்ன லாபம்? தான தருமம் செய்யப்போய் ஊர் வம்பில் மாட்டிக்கொள்ளாவிட்டால் சரி.

பழிக்கு அஞ்சு; பழிவராமல் பார்த்துக் கொள்; மனச்சுத்தமாக காரியத்தில் இறங்கு; தீய எண்ணங்கள் உள்ளேகுடியிருக்க இடம் கொடாதே.

அதற்குமேல் நீ செய்வதெல்லாம் தன்னலம் அற்ற கருமம் ஆகிவிடும். தொடர்வதெல்லாம் அறமாகிவிடும். அடுத்தவர் கூறும் பழி உன் மனதைக் குத்தாது. நீ நிமிர்ந்து நடை போடலாம்.

செயற்பால தோரும் அறனே ஒருவற்கு
உயற்பால தோரும் பழி.

—0040

(அறன்வலியுறுத்தல்)

— அம்பிகைபாகன் —

# இந்த வார இராசி பலன்

## [10 - 01 - 1998 முதல் 16 - 01 - 1998 வரை]

| | | | |
|---|---|---|---|
| சனி | | சந் | |
| கே வி | இராசிச் சக்கரம் | | |
| செ வெ | | | ரா |
| சூ* புத | | | |

மாற்றம்:

தைப்பொங்கல் தினமான — உத்தராயணத்தில் 14– 1– 1998 இல் சூரியன் — மகரம் இராசிக்கு மாறும். 15– 1– 1998 இல் செவ்வாய்— கும்பம் இராசிக்கு மாறும்.

அரசியலில் எதையும் இரகசியமாகவும், நிதானத்துடனும், ஒருவரை ஒருவர் புரிந்துணர்வுடனும் நடந்து கொள்ளும் நிலைமைகள் ஏற்பட இடமுண்டு. கலங்கியபடிஇருக்கும் மக்களுக்கு அரசியல்வாதிகள் ஆக்கபூர்வமான செயற்பாடுகளைச் செய்வதனால் ஓரளவு ஆறுதல் ஏற்பட வழிவகுக்கும். நாட்டில் தொழிலாளர், மாணவர்களுக்கு பலபுதிய பிரச்சினைகள் ஏற்படலாம். இந்திய அரசியலில் பெண்களின் செல்வாக்கால் — சொல்வாக்கும் அனுதாப அலைகளும் திசைமாறும். மக்கள் மனம் மாறுவர்.

உலகத்திலே கிழக்கில் இயற்கை, செயற்கை அழிவுகள் தொடரும். மேற்கு நாடுகள் மத்தியில் நாட்டம் செலுத்தி ஆதிக்க உணர்வுகளைத் திணிப்பதனால் பல பிரச்சினைகள் உருவாகி அழிவுகள் ஏற்பட இடம் உண்டு.

**மேடம்:** நாலுபேர் நாலு விதமாகத்தான் சொல்லுவார்கள். அதற்காக நீங்கள் மயங்கி விடக்கூடாது. பேசிப் பேசிக் காலத்தைக் கழிக்காமல் காரியங்களைக் கவனித்து வாருங்கள். உறுதியற்ற அரசியலைப் பேசி உபத்திரவத்தைத் தேடிக் கொள்ளாமல் பார்த்துக் கொள்ளுங்கள். தொழில் ஸ்தானத்தில் அடிக்கடி பதற்ற நிலைகள் உருவாகும். காலத்திற்கும், சந்தர்ப்பங்களுக்கும் ஏற்பச் செயற்பட்டு வாருங்கள். கையிலுள்ளதை எவரிடமும் பொறுப்புக் கொடுக்காதீர்கள். அதனால் பின்பு வருந்தவேண்டி ஏற்படலாம். அடிக்கடி பயம், சோகம் எனப் பலன்கள் காட்டுகின்றன. குடும்பத்தில் எதிர்ப்பாலாரின் அனுசரணைப்படி அல்லது சொற்படி இக்காலத்தில் நடந்து வாருங்கள். கண், வயிறு, கைகால்பிடிப்பு அடிக்கடி ஏற்படச் செய்யும். வைத்தியம் செய்துவரச் சுகமாகும். உதவி தேடி வரும். உறவினர்கள் பின்பு குறை சொல்வார்கள். என்ன செய்வது? அதைப் பெரிதுபடுத்தாமல் சமாளித்துக் கொள்ளுங்கள். தெய்வவழிபாட்டால் நன்மைகள் ஏற்படும்.

★ அதிர்ஷ்ட நாள்: திங்கள்.

**இடபம்:** உங்களுக்கு வியாழ பகவான் பத்தாமிடத்தில் நிற்பதனால் உங்கள் நிலைப்பாட்டில் மாற்றங்கள் நிகழ முன்னோடியான சந்தர்ப்பங்கள் ஏற்படச் செய்யும். தொழில் ஸ்தானத்தில் மாற்றங்கள் ஏற்பட இடம்உண்டு. எதிர்ப்பாலாரிடம் பேச்சு வாங்காமல் இருந்து கொள்ளுங்கள். குடும்பத்தின் கலகலப்பு உங்கள் செயற்பாடுகளினாலே மாற்றமடையும். புத்திரர் நன்மைக்காகவோ அல்லது சகோதரங்களின் அலுவலாகவோ ஓடியாடித் திரிவீர்கள். ஏதோ உங்கள் கடமைகளைச் செய்தபடி இருங்கள். நாலு மனுஷர்கள் உங்கள் செயற்பாடுகளைப் பார்த்தபடி இருப்பார்கள். கைகால் தாக்கம், மனக்கவலைகள் ஏற்படச் செய்யும். குலதெய்வ வழிபாடு செய்து வரவும்

★ அதிர்ஷ்ட நாள்: திங்கள்.

**மிதுனம்:** கலக்கமும், மயக்கமும் ஏற்படுமாம். தலைக்கு மேல் பொறுப்புக்களை எடுத்து, சுமக்கமுடியாமல் சுமக்கும் ஒரு நிலையா? ஏன் இந்த விளையாட்டு? எந்த விஷயத்திலும் நிதானத்துடன் செயற்பட்டு வாருங்கள். தொழில் ஸ்தானத்தில் கொஞ்சம் போட்டி, பொறாமைகள் கலந்த பலன்கள் நடக்கும். சமாளித்துக் கொள்ளவேண்டும். எதிர்ப்பாலாரால் அடிக்கடி மனம் வருந்தவோ அல்லது கோபப்படவோ இடம் உண்டு. கொஞ்சம் பொறுமையாக இருக்கவும். உங்களுக்கு மட்டும் தான் கோபம் வருகிறதென்பதை விடுத்து மற்றவர்களின் நிலைகளையும் சற்று அனுசரித்து நடந்து பாருங்கள். இக்காலத்தில் சில உறவினர்களின் செயற்பாடுகளை கண்டும், காணாதவர்கள் மாதிரி நடந்து கொள்ளவும். ஏதாவது கருத்துக்கள் சொன்னால் அதனால் பின்பு வேதனைப்பட இடம் உண்டு. நன்மையான செயற்பாடுகளால் எப்பொழுதும் நன்மைகளே ஏற்படும்.

★ அதிர்ஷ்ட நாள்: திங்கள்.

**கடகம்:**– நாம் எமக்கிருக்கும் கடமைகளைச் செய்து கொண்டிருந்தால் எவருக்கும் பயப்படவோ, தாழ்ந்தநிலை அடையவோ மாட்டோம். சரி, பிழை கலந்த உலகில், —எதுவும் நிலையற்றது அதற்காக நாம் தத்துவம் பேசிக்கொண்டு இருக்க முடியுமா? எமது அலுவல்களை, குடும்பத்தினரின் தேவைகளை நாம் தானே பார்க்க வேண்டும்? அவசரப்படாமல் நிதானமாகச் செயற்பட வேண்டும். தொழில் ஸ்தானத்தில் குறை சொல்லுவார்கள். பல முறை சிந்தித்துச் செயற்படுங்கள். குடும்பச் செலவு, வைத்தியச் செலவு அதிகரிக்கும். எதிர்ப்பாலார்கள் உங்களுடன் அடிக்கடி கோபிப்பார்களாம். அதிகமாகக் கற்பனை செய்து அதைப்பற்றிக் கருத்துக்களைச் சொல்வதனால் வீணான எதிர்வுணர்வுகள் உங்களைச் சுற்றியுள்ளவர்களிடம் ஏற்படும் என்பதை அறியாதவரா நீங்கள்? உங்கள் கருத்துக்களை நிதானமாகச் சொல்லுங்கள். அல்லது வீண்பகைதான் மிஞ்சும். முட்டு, சளி. கைகால் விறைப்பு கொடுக்கலாம். சுடுநீர் பாவித்தால் நன்று. மறைமுக எதிர்ப்புக்கள் விலகும். குலதெய்வ வழிபாடு சிறப்புத்தரும்.

★ அதிர்ஷ்ட நாள்: சனி, திங்கள்.

**சிங்கம்:** இராசிச் சக்கரத்தில் தற்காலப்பலனின்படி அதிகம் சிந்திக்கச் செய்யும் இராசிக்காரர் நீங்கள். எதற்

(X ஆம் பக்கம் பார்க்க)


## ஜோதிட சஞ்சீவி

### மகாதேவா ஜோதிடம்

நல்லூர்

# சொற்சிலம்பம்

## புதிர்ப் போட்டி இல. 32



சொற்சிலம்பம் இல. 32
சஞ்சீவி,
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

பெயர்: ..........................................

விலாசம்: ..........................................

..........................................

.................. இங்கே வெட்டுக ..................

முடிவு திகதி; 16 — 01 — 1998

**இடமிருந்து வலம்**

1. உடன் பிறந்தவள். 4. சம்மதக் குறிச்சொல். 6. புண்ணிய இடம். 7. தேர்தல் களத்தில் குதிப்பவை. 8. தடி. 9. சோதிடத்துடன் தொடர்புடையது; மொத்தம் பன்னிரண்டு. 11. சாங்கீதத்தில் முக்கியமானது. 13. கூட்டல் குறி. 15. மனைவியை இழந்தவன். 17. ஒரு வகை வாசனைத் திரவியம். 19. தழும்பு. 20. வீமனின் ஆயுதம். 21. பெருக்கல் குறி. 23. உண். 24. தற்கொலைத் தாக்குதல் நடத்துபவன்.

**மேலிருந்து கீழ்**

1. நூறு செய்யுள் கொண்டது. 2. மார்கழியில் வீட்டின் முன் தோன்றுவது. 3. நரம்புக் கருவி. 4. இதைப் பிடிக்க கட்சிகள் போட்டி. 5. இரண்டாம் மாதம். 7. ஒரு வாசனைச் சரக்கு. 10. ஒருவன். 12. காந்தி விரும்பிய உடை. 13. தந்திரம். 14. பௌத்த மத வழிகாட்டி. 16. உயிர் வகைகளில் ஒன்று. 17. ஏதிலி. 18. ஓர் அசைச் சொல். 21. மரம். 22. எல்லையில் போடுவது.

**சொற்சிலம்பம் 30 — விடைகள்**

**இடமிருந்து வலம்**

1. விரோதம். 4. வீமன். 6. வேஷம். 7. பரணி. 8. கம்பநாடான். 11. திடம். 12. பின். 14. கணனி. 15. அறுகம்புல். 18. ரதம். 19. பரி. 20. சிலை. 21. வீழ்ச்சி.

**மேலிருந்து கீழ்**

1. விவேகம். 2. ரோஷம். 3. தம்பதி. 4. வீரன். 5. மணி. 7. படாம். 9. நாடகம். 10. கன்னிமேரி. 12. பிண. 13. தறுதலை. 14. கல். 15. அரசி. 16. கம். 17. புகழ். 19. பசி.

பல நூற்றுக்கணக்கான வாசக நேயர்கள் இப்போட்டியில் ஆர்வத்துடன் பங்குபற்றி சரியான விடைகளை எழுதி அனுப்பியுள்ளனர். அவர்களில் அதிர்ஷ்டச் சீட்டிழுப்பு மூலம் தெரிவு செய்யப்பட்ட முதல் மூன்று அதிர்ஷ்டசாலிகளின் விவரம் வருமாறு:-

★ **முதற்பரிசு:** சின்னத்தம்பி ஜெயராஜா,
'தெய்வ நிழல்',
மல்வம், உடுவில்.

★ **இரண்டாம் பரிசு:** ந. மயூரன்,
ஆண்டு–8, நாகர்கோயில் ம.வி.,
நாகர்கோயில் மேற்கு.

★ **மூன்றாம் பரிசு:** க. இந்திரன்,
சங்கு சக்கரம்,
113, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

இவர்கள் மூவருக்கும், சரியான விடைகளை எழுதிய ஏனைய சகல வாசக நேயர்களுக்கும் எமது பாராட்டுக்கள்.

புதிர்ப் போட்டிக்கு விடைகளை அனுப்பும்போது கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் போட்டியின் இலக்கத்தைத் தவறாமல் குறிப்பிடவும்.

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்று பேர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன்/சஞ்சீவி ஊழியர்கள், அவர்களது குடும்ப உறுப்பினர்கள் போட்டியில் கலந்து கொள்ள முடியாது.

முதற் பரிசு:- ரூபா. 150 00
இரண்டாம் பரிசு:- ரூபா. 100 00
மூன்றாம் பரிசு:- ரூபா. 50 00

★ புதிர்போட்டி இலக்கம். 31 இன் முடிவுகள் அடுத்த வார சஞ்சீவியில் வெளிவரும்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



# திருமுடியின் மேல் திருவடி

புனிதமான கங்கைக் கரை. மரவுரி தரித்து தவக் கோலத்தில் வீற்றிருக்கிறான் ஸ்ரீராமன். அருகில் அன்புத் தம்பி இலக்குமணனும், பதியை விட்டுப் பிரிய மனமில்லாமல் தவக்கோலம் பூண்ட மனைவி ஜானகியும் பணிபுரிந்து நிற்கின்றனர். பாசத்தால் ராமனைப் பரவசப் படுத்திய கங்கை வேடன் குகனுடன், அவன்பரிவாரமும் புடைசூழ்ந்து நிற்கின்றது. துன்பத்தையும்— இன்பத்தையும் ஒன்றாகக் கருதும் ராமனின் நிர்மலான உள்ளத்தைக்கூட உலுக்கியது எதிரே நின்று கதறி அழும் பரதனின் கண்ணீர். தனக்கு இல்லையென்று ஆகிவிட்ட இராஜ்யத்தைத்தான் துறந்து வந்தான் ராமன். ஆனால் தனக்கெனக் கிடைத்த இராஜ்யத்தைத் துறந்து வந்திருந்தான் பரதன். ராமன் கடமையை நிறைவேற்றக் கானகம் வந்திருந்தான். ஆனால் பரதனோ அண்ணன் அடிச்சுவட்டைப் பின்பற்றி, அரசு துறந்து, மரவுரி தரித்து, கானகம் செல்வதையே கடமையாக ஆக்கிக் கொண்டான்.

''ஆயிரம் ராமர் நின்கீழ் ஆவாரோ...'' என்ற கம்பன் கவிதைகளுக்குக் காட்சியாக அங்கே நின்று கொண்டிருந்தான் பரதன்.

தந்தை இறந்த செய்தியைத் தெரிவித்து, தலைவனின்றித் தவிக்கும் அயோத்தி மக்களின் கண்ணீரைக் காரணம் காட்டி, நாடு திரும்பி முடியை ஏற்றுக் கொண்டு மக்களைக் காக்க வேண்டுமெனக் கதறி நின்றான் பரதன். மறைந்த தசரதனின் புகழ் வாழவேண்டுமானால் அவன் தந்த வாக்கு நிறைவேறவேண்டும். அதற்குத் தன் ஆரண்யவாசம் ஒன்றுதான் வழி என்று மறுத்து விட்டான் ராமன். நாடு திரும்ப ராமன் விரும்பவில்லை; நாட்டையாள பரதன் தயாராக இல்லை...

இறுதியில் மக்கள் நலன் கருதி, ராமபிரானின் பாதுகைகளை யாசித்தான் பரதன்; அதனையே சிம்மாசனத்தில் வைத்து ராமனின் பிரதிநிதியாகப் பாவித்து அரசை நடத்திச்செல்ல அனுமதி கேட்டு நின்றான்; அண்ணன் திருவடிகளை வணங்கி அவன் பாதுகைகளைச் சிரமேற்கொண்டு அயோத்தி திரும்பி, அதனை சூரியகுல சிம்மாசனத்தில் வைத்து, சத்துருக்னனோடு நித்ய கால பூஜைகள் செய்து வழிபட்டான். பாதுகைகளுக்குப் பட்டாபிஷேகம் செய்த பெருமை பரதனுக்குக் கிடைத்தது.

## பாதுகா பட்டாபிஷேகம் விளக்கும் தத்துவம்!

என்னதான் ராமன் சிறப்பானவன் என்றாலும், அரசர்கள் அமரக்கூடிய புனிதமான சிம்மாசனத்தில் பாதத்தில் அணியும் மரக்கட்டைகளை வைக்கலாமா? ராமனுக்குப் பிரதிநிதியாக சிம்மாசனத்தில் வைக்க வேறு ஏதாவது உயர்ந்த பொருள்களை பரதன் யாசித்திருக்கக் கூடாதா...? தேவர்களுக்கு ஒப்பான சூரியகுல மன்னர்கள் வீற்றிருந்த ஓர் ஒப்பற்ற பீடத்தில் வெறும் பாதுகைகளா? ராமன் தான் முடி துறந்து சென்றானே...? அந்தத் 'திருமுடி' யையே சிம்மாசனத்தில் வைத்திருந்தால் போதுமே?— என்றெல்லாம் சில கேள்விகள் எழுந்தன.

பரதன் தவறு செய்து விடவில்லை. ராமன் துறந்து சென்ற திருமுடியை சிம்மாசனத்தின்மேல் வைத்து, அதன் மீதுதான் அண்ணல் ராமனின் பாதுகைகளை வைத்திருந்தான். திருமுடிக்கு மேலே அமரும் பாக்கியம் அந்தப் பாதுகைகள் பெற்றதற்கு ஒரு சூட்சுமமான காரணம் இருந்தது; அது ஒரு கதை.

ஸ்ரீமன் நாராயணன் கொலுவிருக்கும் வைகுண்டலத்தில் ஒரு நாள்... நின்று உலகாளும் பெருமான் தன் சயன நிலைக்குச் செல்ல ஆயத்தமானான். சங்கு—சக்கரம்—திருமுடி ஆகியவற்றை ஆதிசேஷன் மீது வைத்தான். வழக்கமாக தன் பாதுகைளைத் துவாரபாலகர்கள் அருகே விடும் பரந்தாமன், அன்று மட்டும் அதனையும் கழற்றி ஆதிஷேசன் மீது வைத்து விட்டான். அப்போது தன்னைத் தரிசிக்க வந்த முனிபுங்கவர்களின் குரல் கேட்டு, அரவப்படுக்கையிலிருந்து எழுந்து சென்றான் பரந்தாமன்.



ஆதிசேஷன் மீது அலங்காரமாக சங்கும்—சக்கரமும்—கிரீடமும் அமர்ந்திருந்தது அழகாய்த்தானிருந்தது. ஆனால் பாவம், அருகிலே பாதுகைகள் இருந்தது அவற்றிற்குப் பிடிக்கவில்லை.

இப்போது பாதுகைக்குக் கொஞ்சம் கோபம் வந்தது. ''நான் பாதங்களை அலங்கரிப்பவன் தான். ஆனால் நான் கேவலமானவனில்லை. மகரிஷிகளும்— தேவர்களும் பகவானின் பாதங்களில் தங்கள் திருமுடிகள் பட வணங்குகிறார்களே தவிர, உங்களைத் தழுவி தரிசிப்ப

சங்கும்—சக்கரமும் பாதுகைகளைப் பார்த்து, ''கௌரவத்தால் உயர்ந்த நாங்கள் இருக்கும் இடத்தில் தூசியிலே துவளும் பாதுகை நீ எப்படி வந்தாய்?'' என்று கேட்டன.

''இது என் தவறில்லை, பகவான்தான் என்னை இங்கே விட்டுச் சென்றார்'' என்றது பாதுகை.

''பகவான் திருமுடியை அலங்கரிப்பவன் நான்; கரங்களை அலங்கரிப்பவர்கள் சங்கும்—சக்கரமும். ஆதிசேஷன் மீது அமரும் அருகதை எங்களுக்கு உண்டு. பாதங்களை அலங்கரிக்கும் கேவலமான பாதுகை நீ. உனக்கு இங்கே இருக்கும் அருகதையில்லை. உன் வழக்கமான இடத்துக்கு நீயே போய்விடு'' என்றது கிரீடம்.

தில்லை. புனிதமான திருவடிகளை அலங்கரிக்கும் நான் புனிதமானவன் தான்'' என்றது.

கிரீடம் விடுவதாகஇல்லை. சங்கும்—சக்கரமும் சேர்ந்து கொண்டதால் அந்தக் கட்சி பலமுள்ளதாக இருந்தது. பாவம் ஆதிஷேசன், நடுநிலைமை வகித்து இவற்றின் அறியாமையை எண்ணி அனுதாபப்பட்டுக் கொண்டிருந்தார். தனித்து நின்ற பாதுகைகளால் ஏளனப் பேச்சைத் தாங்க முடியவில்லை. பகவான் எப்போதுவருவார்; முறையிடலாம் என்று கண் கலங்கி நின்றன.

**டி. எஸ். எம். சுவாமி**

பகவான் வந்தார். பாதுகைகள் முறையிட்டன. ''பிரபு, செய்கின்ற தொழில் காரணமாக சிலருக்கு சில கௌரவங்கள் கிடைக்கின்றன. அதுபற்றியே அவர்களுக்கு மதிப்பும் மரியாதையும் ஏற்படுகிறது. அவரவர்கள் இருக்குமிடம் அதுபற்றியே நிர்ணயிக்கப்படுகின்றன. இவையெல்லாம் தாங்கள் வகுத்த நியதிகளே. அப்படியிருக்க, தாழ்வான இடத்தில் இருக்க வேண்டிய எங்களை இந்த உயர்வான இடத்தில் வைத்து, எல்லோரும் நகைக்கும்படி செய்து விட்டீர்களே ... எங்களுடைய இருப்பிடம் செல்ல விடை தாருங்கள்.''

பாதுகைகள் அழுதன; பகவான் சிரித்தார்.

''இங்கு நடந்ததை நாம் அறிவோம். என் சந்நிதியில் ஏற்றத்தாழ்வுகள் கிடையா என்பதை உணராமல், உங்களை நிந்தித்த சங்கு—சக்கரங்களும், என் தலையை அலங்கரிப்பதால் கர்வங் கொண்டு, புனிதமான உங்களைத் தூற்றிய திருமுடியும் இதற்கான பலனை அனுபவிக்க வேண்டி வரும்.

''சாதுக்களை இரட்சித்து துஷ்டர்களை சம்ஹரித்துதர்மத்தை நிலைநாட்ட நான்

(X ஆம் பக்கம் பார்க்க)

# அர்ஜுனனின் கர்வபங்கம்

கண்ணனிடத்தில் பேரன்பும், பக்தியும் கொண்டவன் அர்ஜுனன். கண்ணனிடத்தில் தான் கொண்டிருந்த பக்தியினால் அர்ஜுனனுக்கு சற்று கர்வம் ஏற்பட்டது.

கர்வத்தினால், களங்கமுற்ற மனதுடன் பரந்தாமனைப் பார்த்து பார்த்தனன் கேட்டான். ''பிரபுவே! என்னிலும் அதிக பக்தி தங்களிடம் கொண்டவர் யாருமில்லைத் தானே?''

அவனது எண்ண ஓட்டத்தை நன்றாகப் புரிந்து கொண்ட பகவான், அவனுக்குப் பதில் ஏதும் சொல்லாமல் அவனை அழைத்துக் கொண்டு ஓர் அரசனிடம் சென்றான்.

அந்த அரசன் கண்ணனிடம் பெரும் பக்தி கொண்டவன். கண்ணனுக்காக எதையும் செய்யத் தயங்காதவன். அதேபோல் அந்த அரசனின் மனைவியும் தீவிரமான பக்தி கொண்டவள். அவர்களுக்கு நீண்ட காலம் குழந்தையே இல்லாமலிருந்து, ஐந்து வருடங்களுக்கு முன்புதான் ஓர் ஆண் குழந்தை பிறந்திருந்தது. அழகிலும், அறிவிலும் சிறந்து விளங்கிய அந்தக் குழந்தையை அரசனும், அரசியும் சிறப்பாகப் போற்றி வளர்த்தனர்.

தங்கள் அரண்மனைக்கு வந்த கண்ணனையும், அர்ஜுனனையும் அன்புடன் வரவேற்ற அரசன். ''கண்ணபிரானே! தங்களது வருகையால் நாங்கள் புனிதமடைந்து விட்டோம். தாங்கள் என்னை நாடிவந்த காரணத்தை அறியலாமா?'' என்று கேட்டான்.

அதற்கு கண்ணன், ''நான் உன்னிடம் ஒரு பொருளைக் கேட்டுப் பெறவே வந்தேன். ஆனால் நீ அதைத் தருவாயா என்பது சந்தேகம் தான்'' என்றான்.

''சுவாமி! இதென்ன சந்தேகம்? இங்கிருக்கும் அனைத்துப் பொருள்களும் தங்களுடையதல்லவா? தாங்கள் தங்களுக்குத் தேவையானதைக் கேட்காமலேயே எடுத்துக் கொள்ளலாமே'' என்றான் அரசன்.

உடனே கண்ணன், ''உன் ஓரே பிள்ளைதான் எனக்கு வேண்டும். அதுவும் உன் மனைவியின் பூரண சம்மதத்துடன் அவனை எனக்குத் தரவேண்டும்'' என்றான்.

கண்ணன் சொல்லியதைக் கேட்டு சற்றும் தயங்கவில்லை அரசன். ''என் மகன்கூட தாங்கள் எனக்குத் தந்த வரம்தானே! தாராளமாகத் தாங்கள் எடுத்துச் செல்லுங்கள்'' என்று கூறிய மன்னன், பணியாள்களை அனுப்பி மகனையும், மனைவியையும் அழைத்து வரச் செய்தான்.

**- ஜியெம் -**

ஆசை மகனுடன் வந்த அரசியும், தங்கள் மகனைத் தர மனப்பூர்வமாகச் சம்மதித்தாள். அதன் மூலம் தங்களது இருபத்தோரு தலைமுறையும் கடைத்தேறி விடும் என்பதில் பரிபூரண நம்பிக்கை அவர்களுக்கு.

அவர்களின் பூரண சம்மதத்தைக் கேட்ட கண்ணன் சிரித்தபடி ''உங்கள் இருவரின் சம்மதமும் எனக்கு மகிழ்ச்சியைத் தந்தது. ஆனால் ஒரு நிபந்தனை. எனக்கு உங்கள் மகன் முழுசாக வேண்டாம். நீ ஒரு பக்கமும், உன் மனைவி ஒரு பக்கமுமாக நின்று, உங்கள் மகனை இரண்டாக அறுத்து, வலது பாகத்தை மட்டும் எனக்குத் தந்தால் போதும்; ஆனால் யாரும் கண்கலங்கக் கூடாது'' என்றான்.

இதைக் கேட்ட அர்ஜுனன் மனதிற்குள் பெரும் சினம் கொண்டான். 'கண்ணன் சற்றும் இரக்கமே அற்றவன்' என்று தனக்குள் நினைத்துக் கொண்டான். ஆனால் அதை அவன் வெளிக்காட்டிக் கொள்ளவில்லை.

ஆனால் அரசனும், அரசியும் சற்றும் கலக்கமே கொள்ளவில்லை. அதே புன்னகை மாறாத மனதுடன் ஒரு வாளை எடுத்து மகனை அறுக்கத் தயாரானார்கள்.

உடனே கண்ணன், ''சற்று நில்லுங்கள்!'' என்று கூறினான்.

அரசனும், அரசியும் சற்று திகைத்தவர்களாய் ''என்ன சுவாமி, அபசாரம் எதுவும் நேர்ந்துவிட்டதா?'' என்று கேட்டனர்.

''ஆமாம்! என் நிபந்தனைப்படி யாருடைய கண்களும் கலங்கக்கூடாது. ஆனால் தங்கள் மகனின் இடது கண் கலங்கியுள்ளதே'' என்று கூறிய கண்ணன் அந்தக் குழந்தையைப் பார்த்தான்.

அதற்கு அந்தக் குழந்தை ''சுவாமி! தாங்கள் இந்த உடலின் வலது பாகத்தைத் தானே கேட்டீர்கள். அதற்குக் கிடைத்த பெருமை இடதுபாகத்திற்குக் கிடைக்கவில்லையே என்று நினைத்து வருந்தியே இடது கண் கலங்கியுள்ளது'' என்றது.

உடனே கண்ணன் அந்தக் குழந்தையை அப்படியே வாரி எடுத்து அணைத்துக் கொண்டு, அர்ஜுனனை ஓரக்கண்ணால் பார்த்தான். கண்ணன் தனக்குப் பாடம் கற்பிக்கவே அப்படி நடந்து கொண்டான் என்பதைப் புரிந்து கொண்ட அர்ஜுனன் வெட்கித் தலை குனிந்தான்.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பருவ வயதுக்கு...

(III ஆம் பக்கத் தொடர்)

விட்டது என்பது எனக்கு அனுமானமாகப் பட்டது. ஏன் ஒரு சில ஆண்களும் கூட இந்த நிலைக்கு ஆட்படுத்தப் பட்டுள்ளனர்.

கடுகளவு முன் எச்சரிக்கையின்மை மலையளவு தண்டனைக்குச் சமமானது என்பதை மறக்காதீர்கள்.

பாலுணர்வு மாத்திரமல்ல. எல்லாப் பிரச்சினைகளிலும் இருந்து உங்களைக் காப்பாற்றிக் கொள்ள நீங்கள் சில உண்மைகளைப் புரிந்து கொள்ளுங்கள்.

எடுத்த எடுப்பிலேயே ஏரிக்கரைக்கும், தனிமையான சூழலுக்கும் தனியான இடங்களுக்கும் விரும்புபவருடன் சுற்றித்திரிய ஆசை வைக்காதீர்கள். மாலை நேரங்களில் அவருடைய வீட்டிலோ, உங்கள் வீட்டிலோ தாய், தந்தையர் மற்றும் பிறர் இல்லாத வேளைகளில் சந்திக்க முற்படக்கூடாது. உண்மையாகவே கூறப்போனால் அத்தகைய சூழ்நிலைகள் உங்கள் உடலின் மீது ஆடவனின் ரசனையைத் திணிக்கவே வழிசெய்யுமென்பதை காலம் கடந்தே உணர்வீர்கள். ஏன் இது சடுதியான உடல் உறவைக் கூட ஏற்படுத்தலாம். நீந்துவதற்கு பல வழிகள் இருந்தாலும் மூழ்குவதற்கு ஒரு வழி தான் உண்டு.

மேலைநாடுகளில் திருமணத்துக்கு முன்பே பலர் இத்தகைய செயல்களில் ஈடுபடுவதனால் மணவாழ்வின் ஆரம்பக்கட்டத்தையே முதுமையுடன் தான் ஆரம்பிக்கின்றனர். அதிகரித்து வரும் மணமுறிவுகளுக்கும், உடலுறுதியற்ற மகப் பேற்றிற்கும் இதுவே காரணமாகி விடுகின்றது. மண வாழ்வின் சந்தோஷத்தையே இது முற்றாகப் பாதிக்கச் செய்து விடுகின்றது.

உளவியல் ரீதியாகவும் எமது நேரடிப் பார்வையைச் செலுத்தினால்... கூடாத நாவல்களையும், கதைகளையும் படிப்பது, தகுதியற்ற படங்களை தொலைக்காட்சியில் பார்ப்பதும்கூட தமது பெண்மையின் புனிதத்தை இழக்கக் காரணமாகி விடுகின்றது. மொத்தத்தில் தீய பழக்க வழக்கங்களை ஏற்படுத்தக்கூடிய புத்தகங்களைப் படிப்பதைத் தவிர்ப்பதே நல்லது.

பெண்பிள்ளைகளுக்கு ஆண்களின் நட்பிலும் பார்க்க அவர்களது தீய சிநேகிதிகளாலேயே பாரிய தாக்கங்கள் ஏற்படுவதாக ஆய்வுகள் அறிவிக்கின்றன. சில பெண்கள் தண்ணீருக்குள்ளாலேயே அணையாமல் நெருப்பைக் கொண்டு போவது போல நல்ல பண்புள்ள மடந்தையரின் மனதில் தீய எண்ணத் தீயை மூட்டி விடுகின்றனர்.

மலையிலிருந்து செங்குத்தாக விழும் அருவிபோல பாலுணர்வு எண்ணங்கள் பாய்ந்து வரும். அவற்றை அடக்குவது என்பது பாய்ந்து வரும் அருவியை மீண்டும் மலைக்கு ஏற்றுவது போன்றதாகும். சிந்தித்துப் பார்த்தால் பாலுணர்வு எண்ணங்களை அடக்குவது என்பது முடியாத ஒன்றாகும்.

சாதுரியமாகவும், புனிதமாகவும், அன்பு வழியில் அதைக் கட்டுப்படுத்தத் தெரிந்துவிட்டால் எம் வாழ்நாள் முழுவதுமே அது இன்பத்தையும் இனிய உணர்வுகளையும் சூடேற்றிக் கொண்டேயிருக்கும். ★

# மொழி கடத்து...

(III ஆம் பக்கத் தொடர்)

புகுத்தி எதிரியைத் திணறடிப்பதில் அவருக்கு நிகர் அவரேதான். உதாரணத்துக்கு ஒரு சம்பவம். ஒரு முறை தமிழக சட்டசபையிலே அண்ணாத்துரையின் வாதத்துக்கு ஈடுகொடுக்க முடியாமல் திண்டாடிய வழக்கறிஞர் ஒருவர் ஆத்திரமடைந்து அவரை நோக்கி சுட்டு விரலை நீட்டி 'Your days are numbered' என்றார். இம்மரபுத் தொடரின் கருத்தானது ''உனக்கு காலம் கிட்டிவிட்டது'' என்பதாகும். உடனே அண்ணாத்துரை எதுவித பதற்றமுமின்றி அந்த வக்கீல் சொல்லி வாய்மூடுவதற்குள் அவரைப் பார்த்து ''My steps are measured'' என்று கூறினார். இம்மரபுத்தொடரின் குறிப்புப் பொருளானது ''எனது அடிச்சுவடுகள் நிதானமானவை'' என்பதாகும். இங்கு நாம் கவனத்திற் கொள்ள வேண்டியது அண்ணாத்துரை அவர்கள் கொடுத்த சூடான பதிலையோ அல்லது அவர் உச்சரித்த கம்பீரமான (Bombastic) ஆங்கில மரபுச் சொற்றொடரையோ அல்ல. எதிரியின் துடுக்குத்தனமான வார்த்தைகளுக்கு அண்ணா அவர்களின் மூளையில் பளிச்சிட்டு வெளிவந்த பொருத்தமான பதிலையே நாம் இங்கு வியக்கவேண்டும். அதாவதுஅவரது அசாதாரண சிந்தனைத் திறனையே நாம் மெச்சவேண்டும். அவர் திராவிடர் கழகம் என்ற பாசறையிலே பட்டை தீட்டி வளர்க்கப்பட்ட மூளையல்லவா? எனவே பதிலும் அப்படித்தானிருக்கும்.

சிந்தனைக்கு விருந்தளிக்கும் சில ஆங்கில மரபுச் சொற்றொடர்களும் அவற்றுக்குக் கிட்டிய அர்த்தம் கொண்ட தமிழ் மரபுச் சொற்றொடர்களும் கீழே தரப்படுகின்றன. இவற்றுக்கிடையேயான கருத்தொற்றுமைகளை கருத்தூன்றிப் பார்க்கும்போது மனிதர்கள் இனம், மொழியால் வேறுபட்டிருப்பினும் அவர்களின் சிந்தனைப் போக்குகள் சமாந்தரத்தன்மையாகவே இருந்து வந்துள்ளன என்ற உண்மை புலப்படும்.

★ — I do not know the ''ABC'' of politics.

— எனக்கு அரசியலில் ''ஆனா ஆவன்னா'' தெரியாது.

— Our new lecturer's explanation was ''all Greek and latin'' to us.

— எமது புதிய விரிவுரையாளரின் விளக்கம் முழுவதும் எமக்கு 'சிதம்பர சக்கரமாக'' இருந்தது.

★ — He is a vigilant

(XI ஆம் பக்கம் பார்க்க)

# திருமுடியின் மேல்...

(IX ஆம் பக்கத் தொடர்)

அவ்வப்போது பூமியில் அவதாரம் செய்வேன். அத்தகைய அவதாரங்களில் 'ராமாவதாரம்' நிகழும் போது, சக்கரமும் — சங்கும் என் சகோதரர்களாகி, பரத சத்ருக்கனர்களாக அவதரிப்பார்கள். இந்தத் திருமுடியின் மீது பாதுகைகளான உங்களை வைத்து பதினான்கு வருஷங்கள் அவர்கள் பூஜிப்பார்கள். அவரவர்கள் வினைக்கேற்ப அவரவர்கள் தேடிக் கொள்ளும் பயன் இது'' என்றார் பகவான்.

காரணமின்றி உலகில் எந்தச் சம்பவங்களும் நிகழ்வதில்லை. 'பாதுகா பட்டாபிஷேகம்' ஒரு படிப்பினை நிகழ்ச்சி. அதனை நினைவுபடுத்தவே இன்றும் வைணவ ஆலயங்களில் 'சடாரி' சாத்துவது என்ற சம்பிரதாயம் உள்ளது. கிரீடம் போன்ற அமைப்புக் கொண்ட வெள்ளி அல்லது தங்கத்தாலான சடாரியை ஆலயங்களில் நம் தலைமீது வைப்பார்கள். சிலர் இதனைத் தங்களுக்குச் சூட்டப்படும் மலர்முடி அல்லது திருமுடிபோல் எண்ணிப் பெருமைப்படுவார்கள்.

உண்மையில் சடாரியின் அமைப்பைக் கூர்ந்து கவனித்தால், அதன் அமைப்பு கிரீடம் போன்ற பீடத்தின் மேல் வைக்கப்பட்டுள்ள இரண்டு பாதுகைகள் என்பது தெரியும்.

இறைவன் திருவடிகளைத் தலையில் தாங்கி நம் ஆணவம், அகந்தை எல்லாம் அழியவே இந்தச் சம்பிரதாயம். இறைவன் சந்நிதியில் உயர்ந்தவன், தாழ்ந்தவன், பணக்காரன், ஏழை என்ற பாகுபாடில்லை என்பதைக் காட்டவும் இந்தச் சம்பிரதாயம் தொன்று தொட்டு வருகிறது.

சிரசை அலங்கரிக்கும் திருமுடி ஒருவகையில் உயர்ந்தது என்றால்—பாதங்களை அலங்கரிக்கும் பாதுகைகளும் மற்றொரு வகையில் உயர்ந்தவையே.

'ஒன்றிற் சிறியர் ஒன்றிற் பெரியராம்
ஒன்றிற் பெரியர் ஒன்றிற் சிறியராம்'

என்ற உயர்ந்த தத்துவத்தை விளக்க திருமுடியும்—பாதுகையும் சங்கமமான கதையே 'பாதுகா பட்டாபிஷேகம்.' ★

# இந்தவார இராசி...

(VIII ஆம் பக்கத் தொடர்)

கும் தயங்காதீர்கள். கஷ்டங்கள் கொடுத்துத்தான் ஞானம் வரும். சட்டம் காலத்திற்கு காலம் மாறலாம். ஆனால் தர்மம் எப்பொழுதும் நேர்வழியில் செல்லும். சட்டத்தை ஆக்குபவர்களோ, சட்டத்தை நடைமுறைப்படுத்துபவர்களோ தமது பதவியின் கர்வத்தால், நியாயமற்று, தர்மத்துக்கு மாறாக செயற்பட்டால் நிச்சயம் அவர்கள் தண்டனை அடைவார்கள் என்பதை நீங்கள் அறியாதவரா? இடாம்பீகம், போலி கௌரவம், பேராசை என்பதை விலக்கி, நிதானத்துடன் வாழ்க்கையில் சென்று கொண்டிருந்தாலும் விதி வசப்பட்டு நீங்கள் முன்செய்த செயற்பாடுகளின் தாக்கத்தை அட்டமத்துச்சனி நிறைபடி போட்டு இக்காலத்தில் கொடுத்துக் கொண்டிருப்பான். தொழில் ஸ்தானத்தில் போட்டிகள் சர்வசாதாரணமாகும். சிறைப்பட்ட வேதனையும்— கிடைப்பது கிடைக்கவில்லையே என்ற ஏக்கமும்— எதிர்பாலாரின் புறுபுறுப்பும் அடிக்கடி வேதனை தரும். நிலைதளம்பாது பார்த்துக் கொள்ளுங்கள். கண், நெஞ்சுச்சளி கொஞ்சம் தாக்கும். ஏழைகளுக்கு தானதர்மம் செய்து கொள்ளுங்கள். தெய்வ வழிபாடு முக்கியமாகும். உங்களுக்குத் தரப்பட்ட கோவில் திருப்பணிகளை தர்மப்படி செயற்படுத்துங்கள். அதுவே முக்கியமாகும்.

★ அதிர்ஷ்ட நாள்: திங்கள்.

**கன்னி:** மற்றவர்கள் என்ன நினைப்பார்கள்; மற்றவர்கள் என்ன நினைப்பார்கள் என மாறி மாறிச் சிந்தித்துக் கொண்டிருக்காமல் உங்கள் செயற்பாடுகளைச் செயற்படுத்தி வாருங்கள். ஆற அமரச் சிந்தித்துச் செயற்படுங்கள். கோபப்பட்டு என்ன செய்வது? உங்கள் குடும்பப் பொறுப்புக்களைச் சமாளிக்க வேண்டாமா? கடமைகளும், சட்டுப்பாடுகளும் உங்களைச் சுற்றி இருக்கின்றனவே: தொழில் ஸ்தானத்தில் கொஞ்சம் மந்தநிலை, உடல் நிலையில் உஷ்ண இரத்த வாய்வு, அழுத்தம் என்பன கொடுக்கலாம். உடம்பிற்கு அதிக வேலையைக் கொடுக்காமல் இருத்தல் வேண்டும். அடிக்கடி எதிர்ப்பாலார் பற்றிக் கவலைப்பட இடம் உண்டு. அயலவர்கள் விரோதிப்பர். வீண் மனஸ்தாபங்கள், பொறாமைகளால் போட்டிகள் என்பன ஏற்பட்டு அதிக யோசனைகள் கொடுக்கலாம். குடும்பத்தினரின் செலவுகள் அதிகரிக்கும். நிதானத்துடன் செலவுகள் செய்யவும். பிரயாணங்களைத் தவிர்க்கவும்.

அதிர்ஷ்ட நாள்: சனி.

**துலாம்:** அறிவுத்துறை, விவசாயத்துறை, வியாபாரத் துறையில் உள்ளவர்களுக்கு அதிக மாற்றங்கள் நன்மைகள் 6-1-1998 இலிருந்து ஏற்பட்ட வியாழமாற்றத்தால் உருவாக்கும். தொழில் துறையில் திட்டமிட்டு செயற்பட்டு வருவதனால் புதிய அனுகூலங்கள் ஏற்படும். புதிய வாய்ப்புக்கள், சந்தர்ப்பங்களை நாங்கள் தான் உருவாக்கிக் கொள்ளல் வேண்டும். இவ்வுலகில் எத்தனை போட்டிகள்? ஏற்றத்தாழ்வு? எல்லாவற்றையும் சமாளித்துக் கொள்ளல் வேண்டும் அல்லவா? எதிர்ப்பாலாரிடம் அடிக்கடி பேச்சு வாங்காமல் பார்த்துக்கொள்ளுங்கள். நியாயமற்ற ஒன்றிற்காக போராடுவதில் அர்த்தம் இல்லைத்தானே. எப்படியாவது குடும்பச்சுமையை அனுசரித்து உழைப்பை அதிகரிக்கநடவடிக்கை எடுங்கள். உடலில் அடிக்கடி களைப்பு ஏற்படும். கவனமாக இருக்கவும். அதிக நீர்பருகி வாருங்கள். ஓரளவு ஆறுதல் ஏற்பட்டபடி இருக்கும்.

★ அதிர்ஷ்ட நாள்: சனி.

**விருச்சிகம்:** உங்களுக்கு கைக்கெட்டியது வாய்க்கு எட்டாத நிலை ஏற்படும். ஊரைவிட்டு ஊர் வந்து கஷ்ட நஷ்டம் பல கண்ட நீங்கள் மனித சமுதாயத்தில் எதைப் பெற்றுவிடப் போகிறீர்கள்? சுயநலமும் போட்டி பொறாமையும் ஆதிக்க உணர்வும் மிக்க மனிதம், மனிதர்களில் எதைக்காணப் போகின்றது? எது எப்படி இருந்த போதிலும் நீங்கள் கொஞ்சம் நிதானமாக, படிப்படியாக முன்னேறி வருவீர்கள். தொழில் ஸ்தானத்தில் அதிக இலாபங்களைக் காண முடியாவிட்டாலும், புதிய உத்திகள் தோன்றலாம். சகஊழியர்களுடன் வாக்கு வாதங்கள், வர இடமுண்டு. கண்நோ, கைகால் தாக்கங்கள் சிலருக்கு கொடுக்க இடமுண்டு. உங்கள் விகடப் பேச்சுக்கள் சிலரைச் சிந்திக்க வைக்கும். கொடுக்கல் வாங்கல்களில் அவதானமாகஇருக்கவும். தூரதேசப் பிரயாணங்களை தவிர்க்கவும். இடமாற்றங்கள் அவ்வளவு நன்மைகளை ஏற்படுத்த மாட்டா. தெய்வ விழிபாடு ஆக்கபூர்வமான சாந்தியைத் தரும்.

★ அதிர்ஷ்டநாள்: திங்கள்.

**தனுசு:** எந்த இரகசியங்களையும் மனதில் வைக்காமல் ஏட்டிக்குப் போட்டியாக குடும்பத்தவர்களுடன் போட்டி போட்டுக்கொண்டு இருப்பதனால் என்ன இலாபம்? அதிகம் கதைப்பதனாலும், உரத்து வாதிடுவதனாலும் தொழில் ஸ்தானத்தில் பகையே வளரும். அதிக அலைச்சலால் உடல் களைப்பும் கைகால் தாக்கங்களும் சிலருக்கு ஏற்படலாம். பாசமும், நேசமும் பல பிரச்சனைகளைக் கொடுக்கும். சகோதரர்களுக்காக அதிக நேரத்தைச் செலவு செய்வீர்கள். புத்திரர்களின் முன்னேற்றத்திற்காக பொருள் செலவுகள் அதிகரிக்கும். காசு லேசானதா? இந்த உலகத்தை மயக்கும் சொக்குப்பொடியல்லவா? காசைப் பெரிதாக நினைக்காது விட்டாலும் இக்காலத்தில் காசின் முக்கியத்துவத்திற்கான கஷ்ட நஷ்டங்கள் உங்களுக்கு ஏற்பட இடம் உண்டு. நெஞ்சு சளி, வயிற்றுநோ என்பன கொடுக்கலாம். அவதானமாக இருக்கவும்.

★ அதிர்ஷ்டநாள்: திங்கள்

**மகரம்:** ஊருக்கு உழைக்க வெளிக்கிட்டு உங்கள் உழைப்பைக் கெடுத்துக் கொள்ளக் கூடாது. வியாழமாற்றத்தால் நன்மைகள் ஏற்படும். நீங்கள் செய்யும் எல்லா விசயங்களையும் ஒளித்து விட முடியாது! எனவே குடும்ப விஷயத்தில் அவதானமாக இருக்கவும். உட்பகை பொல்லாதது. யாரை நம்பிச் செயற்படுவது? இனிக்க, இனிக்கப் பேசிவரும் ஒருவரால் கஷ்டநஷ்டங்கள் ஏற்படலாம். எவரையும் நன்கு அறியாது பொருளையோ அல்லது பணத்தையோ எவருக்கும் கொடுக்க வேண்டாம். தாயும், பிள்ளையுமானாலும் வாயும் வயிறும் வேறுதானே? தொழில் ஸ்தானத்தில் பல பகைமை கொடுத்துக் கொண்டிருக்கும். காலமறிந்து செயற்படவும். பொருளால் உறவு கெடும் என்பது உங்களைப் பொறுத்த மட்டில் எவ்வளவு உண்மையாகும். நெஞ்சு, நரம்பு, கைகால்தாக்கம் சர்வ சாதாரணம். பிரயாணங்களைத் தவிர்க்கவும்.

★ அதிர்ஷ்டநாள்: திங்கள்.

**கும்பம்:** ஊருக்கெல்லாம் நியாயம் சொல்லும் நீங்கள் உங்கள் குடும்பத்தில் எதிர்ப்பாலாருக்கு நியாயம் சொல்ல முடியாது தத்தளிப்பீர்கள். தொழில் ஸ்தானத்தில் கண்டதை எல்லாம் கதைக்க வேண்டாம். இப்பொழுது எமது எண்ணத்தையெல்லாம் கண்டபடி கதைக்க முடியுமா? கதைத்தால் விசாரணைகள் தான் வரும். தத்துவத்திலும், வாதத்திலும் உங்களை எவரும் வெல்ல முடியாது. ஆழ்ந்த அறிவுள்ள நீங்கள் இக்காலத்திற்கேற்ப நடந்து கொள்ளல் வேண்டும். ஏழரைச் சனியின் கடைக்கண் பார்வையில் இருக்கும் பொழுது கொஞ்சம் நிதானமாக நடந்து கொள்ளல் வேண்டும். யார் எதைச் சொன்னாலும், செய்தாலும், நாம் என்ன சொல்லுகின்றோம், செய்கின்றோம் என்பதுதான் முக்கியம். சிறந்த வாக்குச் சாதுரியமுள்ள நீங்கள் சமய, சாஸ்திர, ஆத்மீக விஷயங்களைக் கதையுங்கள். அரசியல் மட்டும் பேசாதீர்கள். வயிறு, கண், நெஞ்சு முதலிய இடங்கவில் நோ வரலாம். உறவினர் நண்பர்கள் மூலம் சில உதவிகள் கிடைக்கலாம். குல தெய்வ வழிபாடு முக்கியமாகும்.

★ அதிர்ஷ்ட நாள்: சனி.

**மீனம்:** நீங்கள் எதிர்ப்பாலாரின் சொற்படி செயற்பட்டு நடவுங்கள். அதனால் மாற்றங்கள், நன்மைகள் கிடைக்கும். எதையும் எதிர்கொண்டு சமாளிக்க வேண்டும். ஏழரைச் சனியின் தாக்கம், 12 இல் வியாழன் வந்துள்ளதால் இடமாற்றங்களால் சிலர் நன்மை அடையலாம். தொழில் ஸ்தானத்தில் புதிய முதலீடுகளை நிதானத்துடன் செயற்படுத்துங்கள். கொடுக்கல்வாங்கலில் அவதானம். தேவை, பொருள் விஷயங்களில் வீண் பகைமை வர இடம் உண்டு. அடிக்கடி மந்த நிலையும் எச்செயலிலும் ஒரு செயற்படாத் தன்மையும் கொடுக்கும். இவ்வுலக வாழ்வில் போராடாமல் எதையும் பெற்றுவிட முடியாது எனவே எதிர்நீச்சலடிக்க உங்களைத் தயாராக்கிக் கொள்ளுங்கள். உடல் நிலையில் கவனம் செலுத்தவும். எதற்கும் சுவர் இருந்தால் தானே சித்திரம் எழுதலாம். கை, கால், உளைவு, நெஞ்சுச்சளி என்பன சிலரை வருத்தலாம். மன அமைதியை குல தெய்வ வழிபாட்டால் தேடிக் கொள்ளவும்.

★ அதிர்ஷ்ட நாள்: திங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவப்புத் துளிகள்...

(IV ஆம் பக்கத் தொடர்)
பியசேன மாதிரி சிரிக்சுக் கொண்டிருக்க ஏலுமே?

நேற்றுப் பார்த்த அந்தக் குழந்தைப் பிள்ளையைத்தான் இன்னும் மறக்க ஏலாமல் கிடக்கு. பிள்ளை திரும்பித் திரும்பிப் பாக்குது. கை காட்டுது! ''மாமா துவக்கு'' எண்டு கேக்குது. ஆனால் தாய் நிக்கேல்லை. பிள்ளையை கதைக்கவிடாமல் இழுத்துக் கொண்டு போட்டா. ஏன் அப்பிடி...? குழந்தைப் பிள்ளையை நாங்கள் என்ன செய்து போடுவம்...? எங்களுக்கும் இப்பிடிப் பிள்ளையள் இருக்கெண்டு அவையளுக்குத் தெரியாது போல...

ஆனா ஒண்டு. அந்தப் பிள்ளை வளராமல் இருக்க வேணும். அதுதான் அந்தப் பிள்ளைக்கும் நல்லது. எங்களுக்கும் நல்லது.

வளர்ந்தால் நாங்கள் கூட புலி எண்டு நினைச்சுப் பிடிக்கலாம். இல்லாட்டி உண்மையாவே பிள்ளை புலியா மாறிப் போகலாம். ஆனபடியால் அந்தப் பிள்ளை அப்பிடியே வளராமல் இருக்கிறதுதான் நல்லது.

எனக்கு எங்கடை ஆக்கள் மேலையே கோபம் கோபமா வருது. ஏன் ஆக்களைப் போட்டு சும்மா, சும்மா அடிப்பான்? இதாலைதான் 'புலி' கூடுறது நாங்கள் ஒருகாலத்திலை மனிதாபிமானத்தோடை நடந்திருந்தா இப்படி ஒரு இயக்கமே வந்திருக்காது. இப்பிடிப் பயந்து சாகவும் வேண்டியிராது.

ஆர் விசிலடிக்கிற...? அட, இவன் பியதாஸ...பெட்டையள் போறாளவை. பொட்டுப் போட்ட தமிழ்ப் பெட்டையள். இவன் இனிப் பைலாப் பாட்டும் எடுத்து விடுவான். ''டேய் பியசேன் ...உனக்கு வீட்டிலை வடிவான மனிசி இருக்கிறது நினைவில்லையோடா? பிறகேன் கண்டபடி தமிழ்ப்பெட்டையளோடை வாலாட்டுறாய். உனக்குப் புலி வந்து நல்ல மண்டகப்படி தந்தாப் பிறகுதான் அடங்குவாய் போலை...''

ஆனாலும் பியசேன சிரிக்கிறான். அவனுக்கு இந்தக் கணப்பொழுது வாழ்க்கை. இந்த மரணத்துக்குள்ளையும், சாம்பலுக்குள்ளையும் அவன் நம்பிக்கையோடை வாழப்பார்க்கிறான். பயந்து, பயந்து ஆயிரம் நாள் வாழுறதை விட ஒரே ஒரு நாள் வீரத்தோடை வாழுறது நல்லதாம். நான் பயந்தாங்கொள்ளிதான். என்ரை வீடு... என்ரை மனிசி........என்ரை பிள்ளை...என்ரை...ஊர்..... எல்லாத்தையும் விட்டிட்டு இஞ்சை வந்திருந்து ஏங்கிக் கொண்டிருக்கிற நான்...... சாவை எதிர்கொள்ளுகிற துணிச்சல் கூட இல்லாமல்...

★ ★ ★

நான் வேகமாய்த்தான் வருகிறேன். எனக்கு மிகவும் அகோரமாய்ப் பசிக்கிறது. இரண்டு பேரிடம் என் ஜம்பம் பலிக்கவில்லை. மூன்றாம் மனிதனிடம் வந்து அந்தக் காவலரணின் கறுப்புப் பனங்குற்றியில் சாய்ந்திருந்து மனிதனை நோட்டம் பார்க்கிறேன். மனிதன் ஏதோ பழங்கனவில் ஆழ்ந்து ஏக்கப்பட்டுக் கொண்டிப்பது போல் தெரிகிறது. இது தான் சமயம்... அவனில் ஏறவேண்டியதுதான். ஆனால் எனக்குள் ஏதோ உள்ளுணர்வு உணர்த்தத் திரும்பிப் பார்க்கிறேன். இதென்ன அதிசயம்? முதலாம், இரண்டாம் மனிதர்கள் இங்கு ஏன் வருகின்றார்கள்? நான் அறிந்த வரை இதுவரைக்கும் மூன்று பேரையும் ஓரிடத்தில் சந்தித்தது இல்லை. இப்போது கொஞ்சக் கொஞ்ச இடைவெளி விட்டு இரண்டு பேரும் சைக்கிளில் வந்து கொண்டிருந்தார்கள். கண்ணிமைக்கும் நேரத்தில் சட்டென்று இரண்டாவது மனிதன் 'பொக்கற்'றுக்குள் கை வைத்து நான் இருக்கும் காவலரணை நோக்கி எதையோ வீசி எறிந்தான். நான் 'ஜிவ்' வென்று எம்பிப் பறந்தேன்.

கீழே மூன்றாம் மனிதனின் குரல் 'அம்மே 'என்று ஈனஸ்ரத்தில் முனகியது. 'பட பட' வென்றும் 'சட் சட்' டென்றும் மீதி எல்லாக் காக்கிச்சட்டை மனிதர்களும் வேட்டுத் தீர்க்கத் தொடங்கினார்கள். இதை எறிந்து களேபரத்தை உண்டாக்கியவனோ திடீரென்று எங்கே மாயமாய் மறைந்து விட்டான். ஆனால் என் அன்பான முதலாவது மனிதனை ஏனையவர்கள் சுற்றிவளைத்துப் பிடித்துக்கொண்டனர். இவனை ஏன்பிடிக்கின்றீர்கள்? எறிந்தவனை எனக்குத் தெரியும். வாருங்கள் காட்டுகிறேன் என்று கூறியவாறு 'ஙீ ஙீ..'என்று இரைந்தபடி, இரண்டாம் மனிதனைத் தேடி (பெரிய ஜேம்ஸ் பாண்ட் போல) என் துப்பறியும் பணியை ஆரம்பித்தேன். எங்கெல்லாமோ தேடி, கடைசியில் ஒரு இருள்குகையாய் அமைந்த சுருஞ்சோலையினுள் முனகியபடி அவன் அமர்ந்திருப்பதையும், அவன் காலில் கருந்திட்டுக்களாய் படர்ந்த காயங்களில் குருதி துடைத்து ஒருவன் கட்டுப் போடுவதையும் கண்டேன்.

அப்பா...கரிய சிவப்புச் சொட்டுக்களாய் எவ்வளவு இரத்தம்? அதன் ருசி காண என் நாவு துடித்தது. ஆனால் அவர்கள் பக்கத்திலிருந்த பெரிய துப்பாக்கி என்னை மிரட்டியது. என் பின்னே அவனைத்தேடி யாரும் அங்கு வராததால் எனக்கு ஏமாற்றமாக இருந்தது. என் துப்பறியும்திறமையையாரும் நம்பாததால் ஏற்பட்ட ஆதங்கத்தோடு திரும்பவும் மூன்றாம் ஆளின் இடம் நோக்கிப் பறந்தேன்.

அவன் செத்துப் போய் விட்டான். பாவம். அவன் உடம்பு முழுக்கவும் இரத்தம். இதே போல்தான் சிவப்பு இரத்தம். நான் ருசி பார்க்கத் துடித்தபோது வெள்ளைத் துணியால் அவன் உடம்பை மூடி வாகனத்தில் ஏற்றிவிட்டார்கள்.

எனக்குத் திடீரென்று முதலாமவன் ஞாபகம் வந்தது, எங்கே அவன்......? அவனிடமாவது என் பசி தீர்க்கும் ஆகாரம் கிடைக்குமா......?

''வீல்...'' என்றதொரு அலறல். எனக்கு மிகவும்பழக்கப்பட்ட குரல். அது அவனுடையதுதான். மெல்ல குரல் வந்த திக்கில் பறந்து, அந்த முகாமுக்குள்நுழைந்து விட்டேன். ஐயோ! பாவம்... அவன் கன்னம் வலிக்க இடியென அடித்தான் ஒரு பெரியவன். அவன் பற்கள் கிட்டித்து, உதடுகள் கிழிந்து, இரத்தம் வழிந்தது. சிவப்பு இரத்தம்; அவனது கறுப்பு உடலில் விழுந்து உறைந்தது.

நான் மெல்ல சுயநலமாக என் பசி தீர்க்க முனைந்தேன். முதலாமவனை மற்றவன் அடித்துக்கொண்டிருந்தான். என்பிரியமுள்ளவனை இன்னொருவன் தாக்குவது எனக்குப் பிடிக்கவில்லை. மெல்ல அந்தப் பெரியவன் கன்னத்தில் உட்கார்ந்தேன். அவனுக்கு வலிக்கும் படியாய் இறுகக்குத்தி என் அகோரப் பசியைக் காட்டினேன்.

திடீரென்று அவன் கோபம் என் மீது திரும்பியது. கன்னத்தில் 'சட்'டென்று அவனது விரல்கள் இடியென இறங்கின.

ஐய்...ய்...யோ... என்னுடைய இரத்தம் கூட சிவப்ப்ப்......!

# புலி பசித்தாலும்..

(VII ஆம் பக்கத் தொடர்)
உடலெங்கும் கரியவரிக் கோடுகள் உள்ள புலியை 'வரிப் புலி' என்பர். 'வேங்கைப் புலி,' 'சிறுத்தைப் புலி' என்ற வேறு வகைப் புலிகளும் உள. சிறுத் தைப்புலியின் உடலெங்கும் புள்ளிகள் இருக்கும்.

புலியின் கால்கள் தடித்து, உறுதியானவை. இதன் நகங்கள் நீட்டவும், சுருக்கவும்கூடியவை. புலி, மாடு முதலிய விலங்குகளைவாயால் பற்றித் தூக்கிச் செல்லும்.

புலி குட்டி போட்டுப் பால் கொடுக்கும் இனத்தைச் சேர்ந்தது. இதன் 'முழக்கம்' கேட்போருக்கு நடுக்கத்தை உண்டாக்கும். நீர்த்துறைகளின் அருகில் புலிகள் பதுங்கி இருக்கும். நீர் குடிக்க வரும் விலங்குகளை ஒரே பாய்ச்சலில் தாவிப் பற்றிக் கொன்று தின்னும்.

புலி அடர்ந்த காடுகளிலும், மலைகளிலும் வசிக்கும். 'புலி பசித்தாலும் புல்லுலைத் தின்னாது,' என்பர். அஞ்சா வீரனைப் புலிக்கு ஒப்பிட்டுச் சொல்வர்.

# மொழி கடந்து....

(III ஆம் பக்கத் தொடர்)
guard. No one can escape his ''argus eyed'' look

— அவன் ஒரு விழிப்பான காவலாளி. எவரும் அவனது ''கழுகுக்கண் பார்வையில்'' இருந்து தப்பமுடியாது.

இங்கு argus எனப்படுவது கிரேக்க புராணக் கதை ஒன்றில் இடம் பெறும் நூறு கண்கள் கொண்ட ஒரு பூதமாகும்.

★ —The president had a ''bird's eye view'' of the flooded area from the helicopter.

—ஜனாதிபதி ஹெலிகொப்ரரிலிருந்து வெள்ளத்தாற் பாதிக்கப்பட்ட பகுதிகளை ''மேற்பார்வை'' செய்தார்.

★ —The man and his wife lead a ''cat and dog'' life.

— அவனும் மனைவியும் ''நாய்கடி பூனைகடி வாழ்க்கை'' நடத்துகிறார்கள்.

★ — He has mathematics ''at his finger tips''

— அவன் கணிதத்தில் ''கரைகண்டவன்''

★ — He ''beat his brains'' to solve the problem.

— அவன் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக ''மண்டையைப் போட்டுடைத்தான்''

★ — The enemy planes were ''brought down'' by accurate missile shots from below.

— கீழேயிருந்து திட்டமான ஏவுகணைத்தாக்குதலால் எதிரிவிமானங்கள் சுட்டு ''வீழ்த்தப்பட்டன.''

★ — The sriLankan ethnic problem is still a ''ding —dong —struggle''

— இலங்கை இனப்பிரச்சினை இன்றும் ஒரு ''இழுபறிப் போராட்டமாகவே'' உள்ளது.

★ — No student can succeed in his studies ''with a touch here and a touch there.''

— ''அதிலையுங்கடிச்சு இதிலையுங்கடிச்சு'' எந்த மாணவனும் கல்வியில் வெற்றி பெறமுடியாது. ★

# தேர்தலில் போட்டியிடும்...

(II ஆம் பக்கத் தொடர்)
வதற்காக சில ஆயுதங்கள் எமக்கு வழங்கப்பட்டுள்ளன. எமது அலுவலகத்தை விட்டு வெளியில் அவற்றை நாம் கொண்டுசெல்வதே இல்லை. ஆயுதங்களின்றியே மக்கள் மத்தியில் வேலை செய்ய நாம் விரும்புகின்றோம்''— என்று அக்கட்சிப் பிரதிநிதி ஒருவர் சஞ்சீவிக்குத் தெரிவித்தார்.

இந்த ஆயுத விவகார ஆலோசனையை ஈ. பி. டி. பியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவுக்கு, பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தையும் வழங்கியதாகத் தெரிகின்றது.

இவ்வார முற்பகுதியில் அவசரகாலச்சட்ட நீடிப்புப் பிரேரணை குறித்து விவாதிப்பதற்காக நாடாளுமன்றம் கூடியது. நாடாளுமன்ற அமர்வு ஒத்திவைக்கப்பட்ட சமயம், நாடாளுமன்ற 'லொபி' யில் டக்ளஸைச் சந்தித்தார் ரத்வத்தை. பரஸ்பர குசலம் விசாரிப்புக்குப் பின்னர் டக்ளஸுக்கு ஓர் ஆலோசனை தெரிவித்தார் ஜெனரல்.

''எமக்குக் கிடைத்துள்ள உளவுத் தகவல்கள், கணிப்பீடுகளின்படி குடாநாட்டு மக்கள் ஆயுதங்களுடன் கட்சிகள் வருவதை அதிகம் விரும்பவில்லை. எனவே உங்கள் உறுப்பினர்களை ஆயுதங்களை இன்றி மக்களைச் சந்திக்கச் செல்லும்படி கூறுங்கள். இல்லையேல் ஆதரவை இழந்து விடுவீர்கள்'' —என்றார் ரத்வத்தை.

அதற்கு சிரித்துக்கொண்டு பதிலளித்தாராம் டக்ளஸ்: ''ஜெனரல்! உங்கள் ஆலோசனைக்கு நன்றி. மக்கள் ஆயுதங்களுடன் வருபவர்களை வரவேற்க விரும்பவில்லை என்பது உண்மையாக இருக்கலாம். அது எமக்கும் புலிகளுக்கும் மட்டுமல்ல; சிங்கத்துக்கும் பொருந்தும். ஆகவே இந்த ஆலோசனையில் அடங்கியுள்ள விடயத்தை எல்லோரும் எடுத்துக் கொள்வது தான் நல்லது''—என்று ஹாஸ்யமாகப் பதிலளித்தார் டக்ளஸ்.

இந்தப் பதில் வேடிக்கையான பதிலடி போன்று இருந்தாலும், தேர்தல்—ஜனநாயகம்—அடிப்படை மனித உரிமைகள் .. இவைபற்றியெல்லாம் சாத்தான் வேதம் ஓதுவது போலபேசும் அரசுக்கும் படைத்தரப்புக்கும் அர்த்தமுள்ள சில விடயங்களை விளக்குவதாகவும் அமைந்து விட்டது,

★ ★ ★

## புலிகள் பதுங்குகின்றனரா?

யாழ்.குடாநாட்டில் நடைபெறும் உள்ளூராட்சி தேர்தல்கள தொடர்பாக புலிகள் தொடர்ந்து காத்து வரும் மௌனம் பலரையும் வியப்பில் ஆழ்த்தியிருக்கின்றது.

இந்திய அமைதிப்படைகாலத்தில் இங்கு நடத்தப்பட்ட தேர்தல்களின் போது தாம் பின்பற்றிய நடைமுறையை இம்முறை புலிகள் கைக்கொள்ளமாட்டார்கள் என்பதே பொதுவான அபிப்பிராயம். என்றாலும் தேர்தலில் போட்டியிடும் தமிழ்க் கட்சிகள்—தமிழ் இயக்கங்கள் தொடர்பாக புலிகள் என்ன போக்கைக் கடைப்பிடிப்பார்கள் என்பது புரியாத புதிராகவே உள்ளது.

கடந்த வாரம் தாவடிப் பகுதியில் சுவரொட்டிகளை ஒட்டிக்கொண்டிருந்த ஈ. பி. ஆர். எல். எவ்வினருடன் புலிகள் சிறிய மோதல் ஒன்றில் ஈடுபட்டனராயினும், சுவரொட்டிகளை ஒட்டும் பணியில் ஈடுபட்டிருந்த தமது உறுப்பினர்களைத் தீர்த்துக் கட்டும் எண்ணம் அச்சச்சரவில் ஈடுபட்ட புலிகளுக்கு இருந்திருக்கவில்லை என்று ஈ பி. ஆர். எல். எவ். பிரமுகர் ஒருவர் குறிப்பிட்டார்.

''அப்படியானால் தேர்தலில் போட்டியிடும் கட்சிகளின் பிரமுகர்களின் உயிர்களுக்கு புலிகளால் தீங்கு ஏற்படாது எனக் கருதலாமா?''—என்றஒரு கேள்வி எழுகின்றது.

தேர்தல் பிரசாரத்தில் மும்முரமாக இருக்கும் கட்சி ஒன்றின் மூத்த பிரமுகர் ஒருவர் இதற்குப் பதிலளித்தார்.

''புலிகள் மௌனம் காப்பது சில சமயங்களில் கொழுத்த இரைக்காக இருக்கலாம். 'ஓடும் மீன் ஓடி உறு மீன் வரும்வரை காத்திருக்கும் கொக்கு' போல, ஆரவாரப்படுத்தி காரியத்தைக் கெடுக்காமல், தேர்தல் பிரசாரங்கள் மும்முரமாகி— அசம்பாவிதங்கள் இல்லாத காரணத்தால் தேர்தல் பாதுகாப்புக் கெடுபிடிகள் தாமாகவே மந்தமடைய— முக்கிய இலக்கைக் குறிவைத்து புலிகள் பாயக்கூடும். ராஜீவ் காந்தி, காமினி திஸாநாயக்கா, லலித் அத்துலத்முதலி போன்றோர் தேர்தல் பிரசார சமயங்களிலேயே தீர்த்துக் கட்டப்பட்டனர். எனவே புலி பதுங்குவது பாய்வதற்காகவும் இருக்கலாம். '—என்றார் அந்தப் பிரமுகர். ★

# விடைகள்

VII ஆம் பக்கத்தில் 'சிறுவர் சுடர்' பகுதியில் பிரசுரமாகியுள்ள வினாக்களுக்கான விடைகள் வருமாறு;-

## வித்தியாசம் தெரிகின்றதா?

1. கிறிஸ்மஸ் மரத்தில் நட்சத்திரம் இல்லை.
2. வட்ட மேஜையில் ஒரு போத்தல் அதிகம்.
3. 'ரோபர்ட்' (இயந்திர) பொம்மையில் சுட்டும் கை தாழ்ந்துள்ளது. 4. கணப்பில் நெருப்பின் சுடர்.
5. மேஜை மேல் உள்ள குவளையில் கரண்டி.
6. கணப்புக் கட்டடச் சுவரின் விரிசல் அடையாளம்.
7. 'டாங்கி' பொம்மையின் பீரங்கிக் குழாய் கருப்பாக உள்ளது, 8. பெண்ணின் மேலங்கியின் ('ஏப்ரன்') பின் முடிச்சு. 9. பெண்ணின் மேல் சட்டையில் கருப்புப் புள்ளி. 10. தவழும் மனிதனின் இடுப்புப்பட்டி(பெல்ட்) நிறம் 11. கதிரையில் இருந்து பத்திரிகை வாசிப்பவரின் பத்திரிகையின் நீளம். 12. கதிரை (ஷோபா) குஷனுக்கு மேலே உள்ள பிறை.

## எண்ணிப் பாருங்கள்

34 எலிகள்.

## கண்டுபிடியுங்கள்

I அ) பசி. ஆ) பரு.
இ) குடி. ஈ) குருடி.
உ) சிருட்டி. ஊ) குரு.
எ) சிட்டி. ஏ) குட்டி.
ஐ) ருசி. ஒ) பட்டி.

II. அ) கதிர். ஆ) கதி.
இ) கமம். ஈ) காகம்.
உ) மதி. ஊ) மகம்.
எ) கார். ஏ) காமம்.
ஐ) திகதி ஒ) மர்மம்.

III. அ) கொழும்பு.
ஆ) துறை. இ) புழு.
ஈ) கொத்து உ) கொம்பு
ஊ) தும்பு

## வார்த்தை விளையாட்டு

கடம், கவலை, பலம், சிதை, வலம், கபடம், கடலை, படலை, சிலை, வடம், கலம், கடகம், படலம், சிவம், வசி, கசி, கபம், பசி, சிவலை, வதை, கதை, படம், பதை, தை, வடகம், கலை, பல, சில, தைலம். வலை,

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சிட்டகொங் மலைப் பிராந்தியத்தில் 22 வருட கால கிளர்ச்சிக்கு முடிவு

## 'சாந்தி பாஹினி' கிளர்ச்சியாளருடன் பங்களாதேஷ் அரசு ஒப்பந்தம்

**உலக உலா**

என்.பி.சீலன்

பங்களாதேஷில் 'சாந்தி பாஹினி' (SHANTI BAHINI) இயக்கத்துக்கும் அரசுக்கும் இடையில் கடந்த பாதமுற் பகுதிகளில் சமாதான ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டது.

பங்களாதேஷின் சிட்டகொங் மலைப்பிராந்தியத்தில் (CHITAGONG HILL TRACTS) கடந்த 22 வருடங்களாக இடம்பெற்று வந்த கிளர்ச்சியை இந்த ஒப்பந்தம் முடிவுக்குக் கொண்டுவந்திருப்பது பிரதமர் ஷேய்க் ஹசீனா வாயிட்டுக்குக் கிடைத்த பெரும் வெற்றியாகக் கருதப்படுகிறது.

1975 ஆம் ஆண்டு சாந்தி பாஹினி இயக்கம் பங்களாதேஷ் ரோந்துப் பொலீஸார் மீது முதலாவது தாக்குதலை நடத்தியதன் மூலம் தனது வன்முறைப் போராட்டத்தை ஆரம்பித்து வைத்தது.

சிட்டகொங் மலைப்பிராந்தியத்தில் உள்ள வங்காள மொழி பேசும் குடியேற்றக்காரர்கள் மீதும் பங்களாதேஷ் அரச படையினர் மீதும் கடந்த காலங்களில் நடத்தப்பட்ட தாக்குதல்களில் 25 ஆயிரம் பேர்வரை உயிரிழந்ததாக தனிப்பட்ட செய்திகள் தெரிவிக்கின்றன. ஆனால் 2 ஆயிரத்து 500 பேர் மட்டுமே இறந்திருப்பதாக அரசு தரப்பு செய்திகள் கூறுகின்றன.

டிசெம்பர் 2 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்ட சமாதான ஒப்பந்தத்தில் சாந்தி பாஹினி இயக்கம் சார்பாக அதன் அரசியல் கட்சியான பர்வத்ய ஷட்டோகிராம் ஜன சங்கதி சமித்தியின் தலைவர் ஜே. பி. லார்மா (J.B. LARMA) — பங்களாதேஷ் அரசு சார்பாக ஏ. எச். அப்துல்லா — ஆகியோர் கைச்சாத்திட்டனர். தலைநகர் டாக்காவில் இடம்பெற்ற இந்த வைபவத்தில் பிரதமர் ஷேய்க் ஹசீனா வாயிட்டும் கலந்து கொண்டார்.

இந்த ஒப்பந்தம் கைச்சாத்தானதும் பிரதமர் ஷேய்க் ஹசீனா வாயிட் பத்திரிகையாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கையில், ''பிரிந்த குடும்பம் இணைந்து விட்டது'' என்று தெரிவித்தார்.

ஜே. பி. லார்மாவும் ஷேய்க் ஹசீனா வாயிட்டும் கடந்த ஒருவருடகாலமாக சிட்டகொங் மலைப்பிராந்தியப் பிரச்சினை தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தினர். 7 ஆவது சுற்றுப் பேச்சிலேயே இந்த ஒப்பந்தத்துக்கான இணக்கம் காணப்பட்டது.

இந்த ஒப்பந்தம் மூலம் சிட்டகொங் மலைஜாதியினருக்கு விசேட அந்தஸ்து வழங்கப்பட்டிருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. எனினும் ஒப்பந்தம் குறித்த முழு விவரமும் பங்களாதேஷ் அரசினால் வெளியிடப்படவில்லை.

இதற்கு முன்னர் பதவியில் இருந்த அரசுகள் சிட்டகொங் மலைப்பிராந்தியப் பிரச்சினை தொடர்பாக சாந்தி பாஹினியுடன் பேச்சுநடத்தி இருந்தன. ஆனால் பேச்சுகளில் குறிப்பிட்ட அளவு முன்னேற்றம் ஏற்படவில்லை. மலைஜாதியினரின் கோரிக்கைகளுக்கு விட்டுக் கொடுக்க அவை மறுத்திருந்தன.

ஷேய்க் ஹசீனா வாயிட்டுக்கு முன் பதவியில் இருந்த கலேடா ஷியா சாந்தி வாஹினி இயக்கத்துடன் 19 சுற்றுப் பேச்சுக்களை நடத்தி இருந்தார். எனினும் இணக்கம் காணத்தவறி இருந்தார்.

தற்போது எதிர்க்கட்சித் தலைவராக இருக்கும் பங்களாதேஷ் தேசிய வாத கட்சியின் தலைவியான கலேடா ஷியாவின் பிரதான குற்றச்சாட்டு, சிட்டகொங் மலைப் பிராந்தியத்தை ஷேய்க் ஹசீனா வாயிட் இந்தியாவுக்கு தாரை வார்த்து விட்டார் என்பதே.

அத்துடன் பங்களாதேஷ் நாடாளுமன்றத்தின் அங்கீகாரத்தைப் பெறாமல் இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது குறித்து பங்களாதேஷ் எதிர்க்கட்சிகள் கண்டனம் தெரிவித்து வருகின்றன.

இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுவதற்கு முன் அங்கீகாரத்துக்காக நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தால் பல இடையூறுகளை எதிர்நோக்க வேண்டி இருந்திருக்கும் என்று ஷேய்க் ஹசீனா வாயிட் தெரிவிக்கிறார்.

ஒப்பந்தத்தை ஆதரித்தும் எதிர்த்தும் தலைநகர் டாக்காவில் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றிருப்பதால் இந்த ஒப்பந்தம் பங்களாதேஷில் அரசியல் நெருக்கடிகளை உருவாக்கலாம் என்று அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

ஒப்பந்தம் கைச்சாத்தானதையடுத்து கடந்த காலங்களில்சாந்திபாஹினி இயக்கத்தின் தாக்குதலுக்கு அஞ்சி எல்லையைக் கடந்து இந்தியா சென்ற வங்காள மொழி பேசும் மக்களில் ஆயிரக்கணக்கானோர் மீண்டும் சிட்டகொங் மலைப் பிராந்தியத்துக்குத் திரும்பிக் கொண்டிருக்கின்றனர். அத்துடன் கடந்த காலங்களில் சிட்டகொங் மலைப்பிராந்தியத்தில் முதலீடு செய்யத் தயங்கிய வெளிநாட்டுக் கம்பனிகளும் முதலீட்டு நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளன.

இந்த ஒப்பந்தம் வெற்றிகரமாக அமுல் செய்யப்பட்டால் பல வளங்களைக் கொண்ட சிட்டகொங் மலைப் பிராந்தியம் மூலம் பங்களாதேஷின் பொருளாதாரம் உயர வாய்ப்புகள் உள்ளன.

> பாகிஸ்தானைப் போன்று பங்களாதேஷிலும் இராணுவம் அரசியலில் செல்வாக்குப் பெற்றுள்ளது,
>
> நாட்டின் பிரதான பிரச்சினைகளில் இராணுவத்தையும் கலந்தாலோசிக்கும் நிலையிலேயே பங்களாதேஷ் அரசு இருந்து வருகிறது.
>
> சாந்தி பாஹினியுடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்துக்கு பங்களாதேஷ் இராணுவத் தளபதி மஹ்புபுர் ரஹ்மான் வரவேற்புத் தெரிவித்துள்ளார்.
>
> இந்தப் பிரச்சினைக்கு இராணுவத்தீர்வு காணும் முயற்சி கடந்த காலங்களில் வெற்றி அளிக்கவில்லை என்று அவர் தெரிவித்தார்.

### சிட்ட கொங் மலைப் பிராந்திய வரலாறு

CHITAGONG HILL TRACTS என்ற பெயர் பிரிட்டிஷ்காரர்கள் இந்தியாவை ஆட்சி செய்த சமயம் சூட்டப்பட்டது.

அப்பொழுது இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் எல்லாம் பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் ஒரே நாடாகவே (இந்தியா) இருந்தன.

1947 சுதந்திரத்தின்போது இந்தியாவில் இருந்து ஒரு பகுதி பிரிக்கப்பட்டு பாகிஸ்தான் என்ற நாடு உருவானது. கிழக்குப் பாகிஸ்தான், மேற்குப் பாகிஸ்தான் என பாகிஸ்தான் இரு பிராந்தியங்களைக் கொண்டிருந்தது.

1971 ஆம் ஆண்டு பாகிஸ்தானில் இருந்து கிழக்குப் பாகிஸ்தான் பிரிந்து பங்களாதேஷ் என்ற நாடு உருவானது.

பங்களாதேஷின் தென் கிழக்கே வங்காள மொழி பேசாத மலை ஜாதியினர் வாழும் பிரதேசமே சிட்டகொங் மலைப் பிராந்தியம் ஆகும். வங்காள குடாவுக்கும் பர்மாவுக்கும் இந்திய மாநிலமான திரிபுராவுக்கும் இடையில் அமைந்துள்ள இப்பிராந்தியம் 13 ஆயிரத்து 180 சதுர கிலோ மீற்றர் விஸ்தீரணம் கொண்டது.

சிட்டகொங் மலைப்பிராந்தியம் மூன்று மாவட்டங்களைக் கொண்டது. இந்த மூன்று மாவட்டங்களிலும் 13 இனங்களைக் கொண்ட மலைஜாதியினர் வாழ்கின்றனர்.

இவர்களில் 5 மலை ஜாதியினர் திராவிட பௌத்தர்கள். 2 ஜாதியினர் இந்துக்கள். இருஜாதியினர் கிறிஸ்தவர்கள், ஏனையோர் பூர்வீக மதங்களைச் சேர்ந்தவர்கள்.

பிரிட்டிஷார் இந்தியாவை ஆண்ட சமயம் சிட்ட கொங் மலைப்பிராந்தியத்தில் உள்ள மரங்கள், யானை, தேன் ஆகியவற்றைச் சுரண்டுவதில் அதிக கவனம் செலுத்தி வந்தனர்.

1860 ஆம் ஆண்டு தமது நிர்வாக வசதிக்காக பிரிட்டிஷார் சிட்டகொங் மலைப் பிராந்தியத்தை தனியான பிரதேசமாகப் பிரகடனம் செய்தனர். 1900 ஆம் ஆண்டு இதற்காக விசேட சட்டம் ஒன்றையும் அவர்கள் கொண்டு வந்தனர்.

அச்சட்டத்தின் கீழ் சிட்டகொங் மலைப் பிராந்தியத்தில் மலைஜாதியினரின் மனித உரிமைகள் பறிக்கப்பட்டன. அவர்களது காணிகள் பலவந்தமாகப் பறிக்கப்பட்டன. வீடுகள் எரிக்கப்பட்டன. மலைஜாதிப் பெண்கள் பிரிட்டிஷ்காரர்களினால் கட்டாய பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டனர்.

> சாந்தி பாஹினி இயக்கம் மிகக் குறைந்த அளவு ஆயுதங்களுடனேயே தனது போராட்டத்தை நடத்தி வந்தது.
>
> 1971 பங்களாதேஷ் யுத்தத்தின்போது பாகிஸ்தான் படையினரால் விட்டுச் செல்லப்பட்ட ஆயுதங்களே இந்த இயக்கத்தின் ஆரம்பகால போராட்டத்துக்கு உதவின.
>
> இந்திய மாநிலமான திரிபுரா ஊடாகவும் சிட்டகொங்குக்கு ஆயுதங்கள் கடத்தி வரப்பட்டன.

இந்தச் சட்டம் காரணமாக பிரிட்டிஷாரின் முழுத் தயவிலேயே மலை ஜாதியினர் வாழவேண்டிய நிலை ஏற்பட்டது

இதன் பின்னர் மலைஜாதியினர் அல்லாத வங்காள மொழி பேசுவோர் வந்து இங்கு குடியேற ஆரம்பித்த போது தமது வளங்கள் வங்காள மொழிபேசுவோராலும் சுரண்டப் படுவதாக மலை ஜாதியினர் கருத முற்பட்டனர்.

தமது தனித்துவத்துக்கு ஆபத்து ஏற்படப் போவதாகவும் அவர்கள் அஞ்சினர்.

1991 இல் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின் பிரகாரம் மலைஜாதியினரின் எண்ணிக்கை 9 லட்சத்து 60 ஆயிரம். வங்காளி மற்றும் பிஹாரி மொழி பேசுவோர் எண்ணிக்கை 5 லட்சம்.

மலைஜாதியினர் அல்லாத வந்தேறுகுடிகள் மீது சாந்தி பாஹினி இயக்கம் கடந்த காலங்களில் நடத்திய தாக்குதல்கள் காரணமாக 50 ஆயிரம் பேர் வரை இந்தியாவின் திரிபுரா மாநிலத்துக்கு இடம் பெயர்ந்திருந்தனர்

### இரு சகோதரர்கள் தனித்து ஆரம்பித்த போராட்டம்

இந்த நிலையில் இரு சகோதரர்கள் மலைஜாதியினரின் உரிமைக்காகப் போராட்டம் நடத்த கட்சி ஒன்றை ஆரம்பித்தனர். 1970 இல் ரங்கமாதி கம்யூனிஸ்ட் கட்சி'' என்ற பெயரில் கட்சி ஒன்று இவர்களால் ஆரம்பிக்கப்பட்டது.

கடந்த மாத முற்பகுதியில் சமாதான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட ஜே. பி. லார்மாவும் அவரது சகோதரர் எம். என். லார்மாவுமே இந்த சகோதரர்கள் ஆவர்.

1982 ஆம் ஆண்டு நடைபெற்ற உள் கட்சிப் போராட்டம் ஒன்றில் சகோதரர்களில் ஒருவரான எம். என். லார்மா சுட்டுக் கொல்லப்பட்டு விட்டார்.

1970 இல் நிறுவப்பட்ட ரங்கமாதி கம்யூனிஸ்ட் கட்சி சிட்ட கொங் மலைப்பிராந்தியத்தை ஜும்மாலாண்ட் (JUMMA LAND) என்று அழைத்து தனிநாடு கோரியது. சீனத் தலைவர் மாஸேதுங்கின் ஆதரவு இதற்குக் கிடைத்தது.

இதன் பின்னர் ரங்கமாதி கம்யூனிஸ்ட் கட்சியைக் கலைத்துவிட்டு பர்வத்ய ஷட்டோகிராம் ஜன சங்கதி சமித்தி (PARBATYA CHATTOGRAM JANA SANGHATI SAMITI) என்ற கட்சியை நிறுவினர்.

இந்தக் கட்சியின் ஆயுதக் குழுவே சாந்தி பாஹினி ஆகும்.

1971 யுத்தத்தின் பின் பங்களாதேஷ் தனிநாடாகி ஷேய்க் முஜிபுர் ரஹ்மான் பிரதமரானார்.

சாந்தி பாஹினி இயக்கம் சார்பாக எம். என். லார்மா அப்பொழுது முஜிபுர் ரஹ்மானைச் சந்தித்து நான்கு கோரிக்கைகளை விடுத்தார்.

அவையாவன:

★ சிட்டகொங் மலைப் பிராந்தியத்துக்கு சுயாட்சி வழங்கப்பட்டு சிட்டகொங்குக்கு விசேட ஆட்சி மன்றம் அமைக்கப்பட வேண்டும்.

★ வெளியார் வந்து குடியேறுவதைத் தடை செய்யும் 1900ஆம் ஆண்டு பிரிட்டிஷ் சட்டம் மீண்டும் கடைப்பிடிக்கப்பட வேண்டும்.

★ சாந்தி பாஹினி இயக்கத்தின் தலைமையகம் சிட்டகொங் மலைப் பிராந்தியத்தில் உத்தியோக பூர்வமாக தொடர்ந்து இயங்க அனுமதிக்கப்பட வேண்டும்.

★ சிட்டகொங் மலைப் பிராந்தியத்தில் வங்காளிகள் குடியேறுவதை தடை செய்ய வேண்டும்.

இந்தக் கோரிக்கைகளை முஜிபுர் ரஹ்மான் நிராகரித்து விட்டார்.

தேசிய நீரோட்டத்தில் பங்களாதேஷின் மலை ஜாதியினரையும் இணைப்பதிலேயே முஜிபுர் ரஹ்மான் அதிக ஆர்வம் காட்டி வந்தார். அவர்களைப் பிரித்து வைக்க அவர் விரும்பவில்லை.

1973இல் நடந்த தேர்தல் பிரசாரத்தின் போது முஜிபுர் ரஹ்மான் சிட்டகொங் மலைப் பிராந்தியத்துக்கும் சென்றார். அங்கு வைத்து மலை ஜாதியினருக்கு பல வாக்குறுதிகளை வழங்கினார். ஆனால் மலை ஜாதியினர் இந்த வாக்குறுதிகளை சந்தேகக்கண் கொண்டே நோக்கினர்.

1975 ஒகஸ்ட் 15ஆம் திகதி முஜிபுர் ரஹ்மான் கொல்லப்பட்டதோடு சமரச முயற்சிகள் முற்றுக்கு வந்தன.

முஜிபுருக்குப் பின்னர் ஆட்சிக்கு வந்த இராணுவ அரசாங்கங்கள், இராணுவ ஆதரவுஅரசாங்கங்கள், ஜனநாயக அடிப்படையில் தெரிவான அரசாங்கங்கள் எதுவும் இப்பிரச்சினைக்குத் தீர்வு காண எடுத்த முயற்சி வெற்றி அளிக்கவில்லை.

இப்படியான நிலையிலேயே முஜிபுர் ரஹ்மானின் புதல்வி ஷேய்க் ஹசீனா வாயிட் சாந்தி வாஹினி இயக்கத்துடன் துணிச்சலாக பேச்சு நடத்தி ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டுள்ளார். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org